KALKI 27.11.88 ரூ. 2.

கல்கி



அமைதித் தீவில் அதிரடி நடவடிக்கை







பிறந்த நாள் இன்று... அரும்பெரும் பரிசு ஒன்றை மீனுவுக்கு அளித்துவிட்டது ஃபேர் அண்ட் லவ்லி.

இந்த நாளுக்காகவே மீனா அரு முயற்சி எடுத்திருக்கிறாள். இரு மாத முன்னேற்பாடுகள் — அதில் முக்கியமானது ஃபேர் அண்ட் லவ்லி ஒத்துழைத்த மகிமை, அவள் மேனிமீது வெண்ணிலவைப் பொழிந்துள்ளது இதமாக, இயல்பாக. பரிசுப் பெட்டகத்தை அவளிடம் நீட்டும் ரவி, பால்நிலா முகத்தழகை பருகுகிறான் சக்கரவாகப் பறவை போல். அதை வாங்கும் மீனாவின் இதயம் பாடுகிறது நன்றிக் கீதம் — ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமுக்கு!

மீனாவைப் போலவே நீங்களும், கவனிக்கத் தக்க சிகப்பழகை அடைந்திட முடியும் ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.

ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...

ஃபேர் அண்ட் லவ்லி, இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா — இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது. ஒன்று: சருமத்தின் அடியாழத்தில் செயல்பட்டு, உடல்





ஃபேர் அண்ட் லவ்லி துவங்குமுன்

ஃபேர் அண்ட் லவ்லி உபயோகிக்கும் நாட்களில்



கறுக்கும் உள்வினையைத் தடுக்கிறது — வேறெந்த க்ரீமுக்கும் இது இயலாத சாதனை.

மற்றொன்று: இதிலுள்ள இரட்டை ஸன்ஸ்க்ரீன் ஆற்றல், உடல்கறுக்க வைக்கும் சூரிய ஒளியை உட்புகாதபடி தடுத்து நிறம் காத்திடுகிறது. ஆகவே 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழும்பும் கொழுந்துச் சருமப் படலங்களில் செவ்வையான சாயல் மிளிரும். அன்றாடம் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி — நாள் தவறாமல் உபயோகித்து வந்தால், மென்மை கொஞ்சும் இயல்பான சிகப்பழகு உறுதியாக உமதாகி விடும்.

உபயோக முறை:

கழுவிக் கொண்ட முகம், கழுத்து, கரங்கள் மீது ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை பொட்டுப் பொட்டாக இட்ட பின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் மெதுவாக. ஃபேர் அண்ட் லவ்லி, செயல்படத் துவங்கும் போது சற்றே கூசும் உணர்வு ஏற்படுமானால் கவலை வேண்டாம், விரைவில் அது மறைந்துவிடும்.

எளிதில் உள் உறிஞ்சப்படும் குழைவு குணமோங்கி முன்னிலும் மென்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி, ஒரே சீராகப் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப் படுகிறது.

உடலார உணருவீர் இம் மாறுதலை...பிறரு காணபீர் கண்ணார.

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினீரானால் எழுதுங்கள் இம் முகவரிக்கு:
திருமதி கவிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி ஆட்வைஸர், பி.ஓ. பாக்ஸ் 758, பம்பாய்-400 021.

ஃபேர் அண்ட் லவ்லி
சிகப்பழகு க்ரீம்



கண்காணும் சிகப்பழகை உமதாக்கும்... இயற்கைக்கே உரிய இதமான வழியில்

அதிகாரிகள் — அரசியல்வாதியின் அடிமைகள்?

எம்.எஸ்.உதயமூர்த்தி



மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் அரசாங்கம்தான் ஜனநாயகம். நமது நாட்டில் கட்சிக்காரர்களுக்காகக் கட்சிக்காரர்களால் நடத்தப்படும் அரசாங்கமாக இது மாறி விட்டது. 'கட்சிக்காரர்களின் தலையே கோட்டையில் இருக்கும் தலைமைச் செயலகத்துக்குள் தெரியக் கூடாது' என்று ராஜாஜி கூறினார். ஆனால் கடந்த பல ஆண்டுகளாகக் காங்கிரஸ், தி.மு.க., அண்ணா தி.மு.க. என்று எல்லா ஆட்சிகளிலும் கட்சிக்காரர்கள் அரசாங்க அதிகாரியை மிரட்டிப் பணிய வைத்துத் தாங்கள் விரும்பியதைச் சாதித்துக் கொள்ளத்தான் செய்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் அரசாங்க அதிகாரிகளின் கௌரவத்தை இந்த அளவுக்குத் தாழ்த்தி விட்டார்கள்.

அமைச்சர், காவல் துறை அதிகாரியைத் தன் கீழ் வேலை பார்க்கும் எடுபிடி ஆளாக உபயோகிக்கும் அளவுக்கு அதிகாரத்தைப் பிடித்தவர்கள் ஆணவம் கொண்டு அலைந்தார்கள். இதில் வெட்கக்கேடு என்னவென்றால், சில சுய ஆதாயங்களைப் பெற, தங்கள் லஞ்ச ஊழல்களை மறைக்க, தங்களைத் தண்ணியில்லாக் காட்டுக்கு மாற்றி விடாமலிருக்க — சில அதிகாரிகள் தங்களுடைய தன்மானத்தையும் இழக்கத் தயாரானார்கள். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் முதல்வர் வந்தவுடன் சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள். இதை அமைச்சர்கள் ஏற்றுக் கொண்டு, இதே நடைமுறையை மற்றெல்லா நிர்வாக அதிகாரிகளிடமும் எதிர்பார்த்தார்கள்!


அமைச்சர்கள் காலில் நிர்வாகத்தினர் விழுந்தால்தான் வேலை பத்திரம் என்கிற நிலையா சட்டத்தில் எழுதப்பட்டிருக்கிறது? இல்லை. ஒரு சில அதிகாரிகள் மட்டுமே 'நாட்டுக்காகப் பாடுபடத்தான் நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமே தவிர, ஆளுங் கட்சிப் பிரமுகர்களின் ஆசைகளுக்கேற்பத் தாளம் போட அல்ல' என்பதை உணர்ந்து செயல்பட்டார்கள்.

தன்மானமற்ற நிர்வாக அதிகாரிகள் தரம் தாழ்ந்து போன போது, நிர்வாகிகளுக்கே உரித்தான சங்கங்கள் இப்படி உறுப்பினர்கள் தங்களைத் தாழ்த்திக் கொண்டு எல்லோருக்கும் இழிவேற்படுத்துவதைக் கண்டனம் செய்தனவா? இப்படிப்பட்டவர்களைக் கண்டித்தனவா? அப்படி கண்டிக்கும் ஒரு நெறிமுறை இருந்தால், தவறு செய்வோர் அவமானப்படுவார்கள். மிச்சல் என்ற அமெரிக்க அட்டர்னி ஜெனரல் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனை பெற்ற போது, அவரை வழக்கறிஞர் சங்க உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கியது அமெரிக்க வழக்கறிஞர்கள் சங்கம். நமது ஊர் அரசாங்க நிர்வாகிகள் சங்கம் இதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நிர்வாகிகள், தார்மீக நெறிகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கும் போது எதற்குமே, யாருக்குமே, பயப்படத் தேவை இல்லை. ஆனால் சுய நலத்துக்காக ஊழல் புரிந்து விட்ட ஒரு நிர்வாக அதிகாரி, மிரட்டலுக்கு உடனே அடிபணிகிறார்.

அக்கிரமத்திற்கும் அநீதிக்கும் எதிராக நாம் போராடும் போது சில கஷ்டங்களையும் தியாகங்களையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும். இங்கேதான் தன்மானமுள்ளவர்கள் — நேர்மையாளர்கள் சோதிக்கப்படுகிறார்கள். நேர்மையாளர்கள் புடம் போட்ட தங்கம் போல வெளி வருகிறார்கள்.

காவல் துறையும், அதிகார வர்க்கமும், அரசாங்கப் பணியாளர்களும் கட்சி ஊழியர்களாக மாற்றப்படுவார்களானால் அதற்கு அதிகாரிகளும் உடன்படுவார்



அவர்: சார்! அந்த சர்வர் என் பில் தொகையைப் போல் இரண்டு மடங்கு டிப்ஸ் கேட்கிறான்!

ஹோட்டல் முதலாளி: கொடுத்துத் தொலைங்க சார்! இல்லேன்னா என்கிட்டே சம்பளம் அதிகமா கேட்பான்!

— மணியன் தர்மலிங்கம்.

களானால் இந்த நாடு எங்கே போகும்?

ஒரு தலைவன் தன் கட்சியினராலும், கட்சியின் அனுதாபிகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அவன், எதிர்த்து ஓட்டுப் போட்ட ஏனைய மக்களுக்கும் பாரபட்சமின்றிப் பாடுபடுவதாகத்தான் — பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறான்!

ஆனால் நடப்பதென்ன? உள்ளூர் காவல் நிலையம், வட்டாட்சி அலுவலகத்திலிருந்து அரசாங்கப் பள்ளிக்கூடம் வரை சகலத்தையும் கட்சிக்காரர்களே நிர்வகிக்கின்ற நிலைமையைக் காண்கிறோம். இப்படிப்பட்ட நிலை நாட்டுக்கு நல்லதா? கட்சிக் கண்ணோட்டத்தில் செயல்படுவதற்காகவே ஒரு கட்சி பதவிக்கு வந்ததென்றால், மற்றைய மக்கள் என்னாவது?

பாஸ்டன் நகரிலே ஒரு சாதாரண போலீஸ்காரர்,போதைப் பொருளை வைத்திருந்தான் என்று ஜனாதிபதி ஜான் கென்னடியினுடைய மகனைக் கைது செய்தார். அங்கே காவல் துறை, நீதிக்காகச் சட்டத்தை நிலைநாட்டுகிற முறையில் தனித்துச் சுதந்திரத்துடன் செயல்படுகிறது. அவர்களுடைய சுதந்திரத்தில் யாரும் தலையிட முடியாது; தலையிடுவதில்லை.

இங்கே நமது நாட்டில் ஒரு கட்சிக்காரன், மாற்றுக் கட்சிக்காரனை போலீசை வைத்து அடிக்கும் கொடுமை; போலீஸ் பாதுகாப்பில் அவன் உயிரிழக்கும் போது, அவன் தற்கொலை செய்து கொண்டான் என்கிற அறிக்கை; பிணத்தைப் பரிசோதிக்கும் டாக்டரை மிரட்டிக் காவல் துறைக்கும், கட்சிக்காரர்களுக்கும் சாதகமாகப் பிணப் பரிசோதனை ரிப்போர்ட்டை எழுத வைக்கும் கொடுமை — இவையெல்லாம் சர்வ சகஜமாகி விட்டன.

இதன் அடிப்படைக் காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்களுக்கு நீதியைப் புறக்கணித்துத் தன் ஆணவ எதேச்சாதிகாரத்திற்கேற்ப நிர்வாகத்தை வளைக்கும் குணம் இருப்பதுதான்.

துணிந்து நிற்கும் தைரியம் கொண்ட நிர்வாகிகள் குறைந்து போய் விட்டனர் என்பதும் உண்மையே. ஆட்சி என்பதே ஆள்வோரின் ஆசைப்படி நடந்து கொள்வதுதான் என்று தவறாகப் புரிந்து கொண்டிருக்கும் சில அதிகாரிகள் ஒரு பக்கம். சுயநலத்துக்காக ஜனநாயகப் பண்புகளையும் தார்மீகப் பொறுப்புக்களையும் கைவிட்டு விட்ட அதிகாரிகள் மறுபக்கம்.

பாரபட்சமில்லாத என்று சொல்லப்படுகிற ஆளுநர் ஆட்சி நடந்து கொண்டிருக்கும் இந்நாளிலே கூட திருச்சியில் உள்ள ஒரு கல்வி அதிகாரி, தான் இஷ்டப்பட்டவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்பதற்காக அவரை டிஸ்மிஸ் செய்ய ஒரு காங்கிரஸ்காரர் காரணமாயிருந்திருக்கிறார். ஒரு கட்சிக்காரருக்கு உயர் கல்வி அதிகாரிகள் எப்படி மண்டியிட்டிருக்கிறார்கள் பாருங்கள்!

அதே போல் வந்தவாசிக்கருகில் ஒரு அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அட்மிஷனுக்குப் பணம் வாங்கிக் கொண்டு செயல்படும் விஷயம் சில ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது! இது பற்றி கேள்வி எழுப்பினால் "எங்கே ஊழல் இல்லை?" என்று திருப்பிக் கேட்கிறார் அரசின் ஓர் உயர் கல்வி அதிகாரி! நிலைமை எப்படி இருக்கிறது பாருங்கள்!

இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமானால் இது மற்ற எல்லா அதிகாரிகளுக்கும் ஒரு பாடமாக இருக்கும். நியாயத்திற்கு அப்பாற்பட்டு எதையும் செய்ய அஞ்சுவார்கள் அவர்கள். இப்போது என்ன எண்ணிக் கொள்கிறார்கள்? "என்னைக் காப்பாற்ற கட்சிக்காரர் இருக்கிறார். அவர் கண் துடைப்பு செய்து என்னைத் தப்புவிப்பார். ஆகவே அவரது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நடந்து கொண்டு நாமும் ஆதாயம் பெறுவோம்" என்று தன் மானமற்றுத் தங்களைத் தேற்றிக் கொள்கிறார்கள்.

இதன் மூல காரணம் யார்? ஆட்சிக்கு வரும் கட்சித் தலைவர்கள். ஜனநாயகத் தலைமை என்பது மக்களின் வரிப் பணத்தை நியாயமாகச் செலவிட அளிக்கப்பட்ட புனிதப் பொறுப்பு என்பதை மதிக்காது அதனைச் சொந்தச் சொத்து போல் கருதும் தலைவர்கள். ஜனநாயகம் என்பது நீதி அடிப்படையில் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் புனிதப் பணி என்பதை ஆணவம் காரணமாக அலட்சியப்படுத்தும் தலைவர்கள்.

"ஐயோ! என்ன செய்வேன்?" என்று கையைப் பிசைவதில் பயனில்லை. "இந்த இழி நிலையை வீர தீரத்துடன் முறியடித்து எப்படி நீதியை நிலை நாட்டலாம்?" என்று இளைஞர்கள் விவாதித்தால், வீறு கொண்டெழுந்தால் ஒரு நல்ல முடிவு நிச்சயமாகக் கிடைக்கும். எதிர்காலம் சிறக்கும்.

மக்கள் விழிப்புணர்வு பெறுவது முதற்படி; மக்கள் போராட்டம் என்பது இரண்டாவது படி. கொஞ்சம் சிந்தியுங்கள்...!

ஸ்டெல்லா மாரீஸுக்கு வந்த எலிஸபெத் டெய்லர்!



• மெகந்தி

சூப்பர் நோவா 88.

அப்படியென்றால்?

ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி மாணவிகளுள் பல்வேறு துறைகளிலும் உள்ள திறமைசாலிகளைக் கண்டறியும் பொருட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்குத்தான் "சூப்பர் நோவா — 88" என்று பெயரிட்டார்கள்.

பேச்சுப் போட்டி, நடனப் போட்டி, நாடகப் போட்டி, க்விஸ் போன்ற வழக்கமான போட்டிகள் இருந்தாலும், இவற்றையெல்லாம்விட வித்தியாசமான போட்டிகள்! மாணவிகளை அப்படிக் கவரும்படி என்னென்ன போட்டிகள் நடந்தன?

மாணவிகள் யூனியனின் கல்சரல் செயலாளி(ளர்)களான சூசன்பால், பிந்துஜா இருவரும் விளக்குகிறார்கள்:

- மெகந்தி போட்டி. இது பெண்கள் சமாசாரம் என்பதால் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். இதில் சுவையான அம்சம் என்னவென்றால், போட்டியாளர்கள் இன்னொரு மாணவியின் கையில்தான் 'மெகந்தி' இட வேண்டும். எனவே, போட்டியாளர்களிடம் மெகந்தி இட்டுக்கொள்ளுவதில் பல மாணவிகளிடையிலும் போட்டி. போட்டியின் போது நூற்றுக் கணக்கில் மாணவிகள் கூட்டம். மெகந்தி இட்டுக் கொண்ட மாணவிகளின் முகத்தில் மகிழ்ச்சி. முதல் பரிசு வாங்கிய மாணவியை விட, பரிசு பெற்ற மெகந்தி டிசைனை இட்டுக் கொண்ட மாணவியையும், அவள் கையையும் பார்க்கத்தான் கியூ நீண்டது.

- கார்ட்டூன் போடும் போட்டிக்கும் ஏக வரவேற்பு. அதிகம் பேர் புரட்டி எடுத்த விஷயம் 21 — ஆம் நூற்றாண்டுதான். தவிர, உலக சமாதானம், சுற்றுப்புறச் சூழ்நிலை, ஏழை இந்தியனின் எதிர்காலம் என்று பல தரப்பட்ட சுவையான — சிந்தனையைத் தூண்டும் கார்ட்டூன்கள். மாணவிகளின் திறமையைப் பளிச்சிடச் செய்தன.

- போட்டிகளிலேயே சூப்பர் போட்டியாய் அமைந்தது குல்லாய் தயாரிக்கும் போட்டிதான். விழாக்களில் அணிந்து கொள்ளுவது போல விதவிதமான, வண்ணங்களிலும், டிசைன்களிலும், அட்டை, துணி எதை வேண்டுமானாலும் உபயோகித்துத் தலைக்கு அணியும் குல்லாய் தயாரிக்க வேண்டும்.

- அபௌட் டர்ன் **(about turn)** என்று இன்னொரு போட்டி. இதன் சிறப்பம்சம் என்ன தெரியுமா? ஒருவரே ஒரு கருத்தை ஒட்டியும், வெட்டியும் பேசுதல். உதாரணமாக, மணியடித்ததும், பெண்களுக்குச் சம உரிமை தரப்பட வேண்டும் என்று பேசிக் கொண்டே இருக்க வேண்டும். திடீரென மீண்டும் மணியடிக்கும். உடனே பேச்சை நிறுத்தி விட்டு, தான் பேசிய கருத்துக்கு நேர் எதிரான கருத்தில் அவரே பேச வேண்டும். மாணவிகள் தடுமாறிப் பேச முடியாமல் தவித்த போது ஒரே கலாட்டாதான்.

- காய்கறிகளை வெட்டி, உருவங்கள் உருவாக்கும் போட்டியும் நடந்தது. காரட், பீட்ரூட் என்று ஆரம்பித்து வெங்காயம் வரை அத்தனையையும் வெட்டி ஆபரேஷன் நடத்தி விட்டார்கள். முதல் பரிசு பெற்றது, காரட்டை வெட்டிச் செய்யப்பட்ட ஒரு பெண் உருவம். அதை ஒரு மலராய் விரித்த வெங்காயத்தில் நிறுத்திப் பின்னால் ஒரு கண்ணாடியையும் வைத்துப் பரிசைத் தட்டிக் கொண்டு போய் விட்டார் ஒரு மாணவி.

- **Tete-a-tete** என்று ஒரு போட்டி. இரண்டு இரண்டு பேராய்ப் பங்கேற்க வேண்டும். இரண்டு வித்தியாசமான மனிதர்கள் சந்தித்துக் கொண்டால், எப்படி உரையாடுவார்கள் என்று கற்பனை செய்து பேசிக் காட்ட வேண்டும். சந்தித்துக் கொண்ட பாத்திரங்களில் சில — மைக்கேல் ஜாக்ஸனும் — மைக்கேல் டுகாகிஸும், எலிஸபெத் டெய்லரும், ஸ்டெல்லா மாரிஸுக்கு எதிரே உள்ள கடையின் டெய்லரும்!

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி.

திருபர்: நீங்க ஆட்சிக்கு வந்தா, சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நீக்க என்ன செய்வீங்க?

அரசியல்வாதி: ஏராளமான புல்டோசர்களை இறக்குமதி செய்வேன்.

— செவல்குளம் 'ஆச்சா'





''ஒவ்வொரு தடவையும் வோட்டுப் போடும்போது உங்களுக்கு என்ன நினைவுக்கு வரும்?''

''கீதோபதேசம்தான்! கடமையைச் செய்; பலனை எதிர்பார்க்காதே!''

— மேல்மங்கலம் பத்ரா.

ஒருவர்: மத்தவங்க உங்களைப் பார்த்துச் சிரிப்பது உங்களுக்குக் கேவலமாத் தோணலியா?

ஜோக் எழுத்தாளர்: ஊஹும்... என் இலட்சியமே மத்தவங்க சிரிக்கணும்கிறது தானே!

— பழையனூர் மா. கணபதி.




அவன்: ''அந்த நடிகைக்குத் தன்னோட தொழில்ல இருக்கிற ஈடுபாடு ரொம்ப ஜாஸ்தி. கணவர் செத்துட்டார்னு கேள்விப்பட்ட போது கூட....''

இவன்: ''ஷூட்டிங்கை நிறுத்தாமல் தொடர்ந்தார்களா, என்ன?''

அவன்: ''அதில்லை... கிளிசிரினைக் கொண்டு வரச் சொன்னாங்க!''

— தென்கனிகை ஜூலியஸ்.






அவன்: ''எங்க தலைவருக்கு அபார ஞாபகமறதி.''

இவன்: ''எப்படிச் சொல்ற?''


அவன்: ''நேத்து எதிர்க்கட்சி மீட்டிங்கில் போய்ப் பேசிட்டு வந்துட்டார்!''

— பா. பத்மநாபன்.

நகைச்சுவை



LT-Cயின்
'கனவு
நனவாகும்'
திட்டம்



கார், ஸ்கூட்டர், மோட்டார்
சைக்கிள், கலர் டிவி வாங்க
இன்றே LTCயின் ''கனவு
நனவாகும்'' திட்டத்தில் சேர்ந்து
பயன் பெறுங்கள்.

இத்திட்டத்தின் மூலம் ரூ. 5000 முதல்
ரூ. 1 லட்சம் வரை கடன் பெற்று 36 மாதங்களில்
எளிய தவணை முறையில் திரும்பச் செலுத்தலாம்.

**லக்ஷ்மி
டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்**

624, அண்ணாசாலை, சென்னை-600 006.
போன்: 476646/470311.


கிளைகள்:
80, ஸ்டேஷன் ரோடு, ராதாநகர், குரோம்பேட்டை,
சென்னை-600 040. போன்: 401267.

138, காலேஜ் ரோடு, நங்கநல்லூர்,
சென்னை-600 114.

P.G. சரண்யன்
சேர்மன்

இத்திட்டம் சென்னையில்
வசிப்பவர்களுக்கு மட்டுமே!

ADWAVE/LTC/3649 TAM



அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி (அண்ணா மாவட்டம்)

இத்திருக்கோயில் மிக பழமை வாய்ந்ததும், புராதனமானதுமாகும். 160 மீட்டர் உயரமுள்ள மலையில் மூலவர் உருவச் சிலை சித்த முனிவர் போகரால் நவ பாஷாணங்களின் கலவையால் உருவாக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. ஆறுகால அபிஷேகம், ஆராதனையும் நடைபெற்று வருகிறது. பக்தர்கள் அதனை கண்டு களித்து வழிபட்டு வருகின்றனர்.

மலைக்கோயில் சன்னதி தினசரி காலை 6.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை திறந்து இருக்கும். திருவிழா காலங்களில் மட்டும் காலை 4.00 மணி முதல் இரவு இராக்கால பூஜை முடிய திறந்து இருக்கும்.

விஸ்வரூப தரிசனம் காலை 6.00 மணி.
விசேஷ நாட்களில் காலை 4.00 மணி.

காலபூஜை நேரங்கள்

1. விளாபூஜை	காலை	- 6.45	4. உச்சிக்காலம்	பிற்பகல்	- 12.00
2. சிறுகாலசந்தி	காலை	- 8.00	5. சாயரட்சை	மாலை	- 5.30
3. காலசந்தி	காலை	- 9.00	6. இராக்காலம்	இரவு	- 8.00

சுவாமி புறப்பாடு கட்டணம்

1. தங்கமயில் வாகனம் - ரூ.200/- 2. தங்கரதம் - ரூ.900/-

கட்டளைகள்

1. காலபூஜை - ரூ.3,000/- 2. தங்கரதம் - ரூ.10,000/-
3. லட்டு பிரசாதம் - ரூ.50,000/-

கட்டளைத் தொகையை இத்திருக்கோயிலில் செலுத்தினால் ஒவ்வொரு ஆண்டிலும், பக்தர்கள் விரும்பும் நாளில் காலபூஜை மற்றும் தங்கரத புறப்பாடு நடத்தி ஆண்டவர் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

மலையில் திருக்கோயிலின் அபிஷேகத்திற்கு பஞ்சாமிர்தம், பன்னீர் மற்றும் ஆண்டவர் பிரசாதங்கள் லட்டு, முறுக்கு விற்கப்படுகிறது. தேவஸ்தான கூட்டுறவு பண்டகசாலை மூலம் தேங்காய், பழம், விபூதி முதலியன விற்கப்படுகின்றன.

பக்தர்கள் தங்குவதற்கு ரயில்வே பீடர் ரோடில் தேவஸ்தான சத்திரம், அடிவாரத்தில் தண்டபாணி நிலையம், கார்த்திகேயம் விடுதி, சிறுகுடில்கள் வசதிகளுடன் கூடிய குளிர்சாதன அறைகள், சிறப்பு முதல் வகுப்பு, முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மற்றும் மூன்றாம் வகுப்பு அறைகள் உள்ளன.

வாடகை விபரம்

குளிர்சாதன அறை - ரூ.75/- முதல் வகுப்பு - ரூ.30/-
சிறப்பு முதல் வகுப்பு - ரூ.40/- மூன்றாம் வகுப்பு - 10/-
கூடம் - ரூ.50/-

மலைக்கோயில், அடிவாரம், மத்திய பேருந்து நிலையம், இரயில்வே நிலையம் ஆகிய இடங்களில் தகவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு பஞ்சாமிர்தம், திருக்கோயில் வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும். யாருடைய உதவியும் இன்றி கோயில் சம்மந்தமாக எல்லா விபரங்களும் இங்கு கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

மலைக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் பாத அணிகளை பாதுகாப்பிற்காக திருக்கோயில் நிர்வாகத்தில் 'பாதஅணி பாதுகாப்பு நிலையம்' ஒன்று பாதவிநாயகர் ஆலயத்திற்கு அருகில் புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பழனி வந்து அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியை வணங்கி, வழிபட்டு அருள்பெற வேண்டுகிறோம்.


ஆ. மலையாண்டி பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையர்/நிர்வாக அதிகாரி.
& தக்கார்.

பாடாத தேனீக்கள்

• கொஞ்சம் இடைவெளி விட்டு மறுபடியும் சிவகுமாரைப் பார்க்க முடிகிறது. மனிதர் காயகல்பம் எதாவது சாப்பிடுகிறாரா என்ன? அவ்வளவு இளமை.

• இளையராஜா இசையில் அந்த 'வண்ண நிலவே வைகை நதியே', இன்னொரு 'செண்பகமே... செண்பகமே..' டாக்டர்... டாக்டர் பாடலும் கேட்க இனிமை.

• ராதிகாவும் சிவகுமாரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் நடித்திருக்கிறார்களா, பார்க்கிற நமக்குக் கொண்டாட்டம்தான்.



• எஸ். எஸ். சந்திரனும், மனோரமாவும் நகைச்சுவை ஜோடி. விரசமற்ற நகைச்சுவை என்பதே ஆறுதலான விஷயம். அரசியல் நையாண்டி வேறா... நன்றாகவே ரசிக்க முடிகிறது.

• கலைஞரின் இயல்பான, குறும்பான வசனம் சில இடங்களில் அப்ளாஸ் பெறுகிறது.

• ஸ்ரீப்ரியா திடீரென்று நுழைகிறார். யார், என்ன ஏது என்று புரிந்து கொள்ளுமுன் படத்தையே ஓர் உலுக்கு உலுக்கி விடுகிறார். ரவிச்சந்திரனுக்கு அவ்வளவாக வேலை இல்லை.


• கணவன் மனைவிக்குள் பிரிவு ஏற்படுவதற்காக துபாய் நண்பன் ஹோட்டலுக்கு அழைத்து, சிவகுமார் போய்த் தெரியாத்தனமாக வம்பில் மாட்டுவது சுவைதான் என்றாலும் கொஞ்சம் செயற்கை.

• டாக்டரும், இன்ஜினீயரும் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்பதை டைரக்டர் அவ்வளவு ஆற அமர இடைவேளை வரை சொல்லிக் கொண்டே போக வேண்டுமா? கொஞ்சம் சலிப்.

• ஸ்ரீப்ரியா தன் தங்கை செத்துப் போன கதையைச் சொல்ல, துபாய் நண்பன் சந்திரசேகர் (இயல்பான நடிப்பு) சிவகுமாருக்கு வக்காலத்துவாங்க, அங்கே கட்டிடம் கட்டப்படும் இடத்தில் பம்பாய் கொலைகாரனும் இன்ஜினீயர் சிவகுமாரும் மோத—க்ளைமாக்ஸ் பரபரப்பு.

• கணவன் — மனைவி உறவு, சந்தேகம் என்ற பழைய விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் கூட, கொஞ்சம் கூடக் குழப்பமில்லாமல் மிகத் தெளிவான திரைக்கதை அமைப்புடன் படத்தை இயக்கியிருக்கும் டைரக்டர் அனிபா பாராட்டுக்குரியவர்.

— ஜெயமன்மதன்



பாதிலதான்
தேர்தல்
ஜனநாயகம்
சர்வாதிகாரம்
மூப்பனார்
ஜானகி
எனக்கே தெரியும்! உங்க சிபாரிசு தேவை இல்லை!
மன்னாதி மன்னன் புகுந்ததுலே! கின்னஸ் புஸ்தகத் துலே இடம் பெற வேண்டும்!
கின்னஸ்



கல்கி

1988 நவம்பர் 27
மலர் 47 இதழ் 17
விபவ கார்த்திகை 12



‘லோட்டஸ்’ பின்னால் ஒளிந்திருப்பது யார்?

ராஜீவ் காந்திக்கு ஸ்விஸ் வங்கிக் கணக்கு உண்டு என்றும் போஃபர்ஸ் பீரங்கி பேர கமிஷனில் அவருக்கும் பங்கு உண்டு என்றும் பகிரங்கமாகப் பேசியிருக்கிறார் வி. பி. சிங். அதுவும் நாடாளுமன்றத்துக்கு வெளியே! இதற்கு அவர் சமர்ப்பித்துள்ள சாட்சியங்கள் ஹிந்து பத்திரிகையில் ஏற்கெனவே பிரசுரமான ஆவணங்கள்தாம். புதிதாக ஏதுமில்லை. இவை, ராஜீவ் இதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதை நிரூபிக்கிறதா என்றால், இல்லை என்றுதான் கூற வேண்டும். ஸ்வென்ஸ்கா, லோட்டஸ் போன்ற பெயர்களின் பின்னால் ராஜீவ் ஒளிந்திருப்பதாக ஊகம்தான் செய்யலாமே தவிர, நிரூபிப்பது ரொம்ப ரொம்பக் கடினம்.

ஆன போதிலும் அசாதாரண துணிச்சலுடன், கடும் தண்டனை பெற்றாலும் சரி என்ற மன உறுதியுடன் வி. பி. சிங் இந்த விஷயத்தை இவ்வாறு கிளறி விட்டிருப்பது எதற்காக? தம்மீது வழக்குத் தொடரப்படுமானால் ராஜீவ் உள்படப் பலரைக் கூண்டிலேற்றிக் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புக் கிடைக்கலாம் என்பதற்காக இருக்கலாம். அரசின் ஆவணங்கள் பலவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கச் செய்யலாம்; முக்கிய சில சாட்சிகளை அயல்நாடுகளிலிருந்தே கூடத் தருவிக்கலாம்; இதனாலெல்லாம் சில புதிய உண்மைகள் அம்பலமாகலாம்; இவ்வாறெல்லாம் வி. பி. சிங் கணக்குப் போட்டிருந்தால் வியப்பதற்கில்லை. அதனால்தான், ‘என்னைத் தூக்கிலே போடுங்கள், பாதகமில்லை. ஆனால் அதற்கு முன் நாட்டு மக்களுக்குப் பதில் சொல்லுங்கள்! கமிஷன் பணமெல்லாம் எங்கே போயிற்று? யார் யார் பெற்றுக் கொண்டார்கள்?’ என்று தட்டிக் கேட்கிறார்.

வி. பி. சிங்கின் இந்தப் போக்கு நியாயமல்ல என்று கருதுகிறவர்கள், ராஜீவ் காந்தியின் போக்கு இதை விடவும் நியாயமற்றதாக, மோசமானதாக இருப்பதைக் கவனிக்க வேண்டும். தாம் குற்றமற்றவர் என நிரூபிப்பது பிரதமருக்கு மிகவும் எளிது. ‘லோட்டஸும் ஸ்வென்ஸ்காவும் யாருடைய சங்கேதப் பெயர்கள் என்பதை வெளியிட வேண்டாம்; ஆனால் அந்தப் பெயர்களுடன் எனக்கோ என்னைச் சேர்ந்தவர்களுக்கோ தொடர்பில்லை என்ற அளவுக்கு அறிக்கை விடுங்கள்’ என்று ஸ்விஸ் அரசையும் ஸ்விஸ் வங்கியையும் அவர் கேட்டுக் கொள்ளலாம். இதுவரை இதை அவர் செய்யவில்லை.

வி. பி. சிங் சொல்கிறார்: ‘‘போஃபர்ஸுடன் இந்திய அரசு செய்து கொண்ட ஒப்பந்தப்படி அந்நிறுவனம் கமிஷன் தரக் கூடாது; ஆனால் தந்திருக்கிறது. இது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு விட்டது. இந்தச் சூழலில் இந்திய அரசு போஃபர்ஸ் ஒப்பந்தத்தை உடனே ரத்து செய்ய வேண்டியதுதானே? அது இந்தியாவுடன் வர்த்தகம் செய்யும் எல்லா அயல்நாட்டு நிறுவனங்களுக்கும் ஒரு பாடமாக இருக்குமல்லவா?’’ மறுக்க முடியாத இந்த வாதத்துக்கு இந்திய அரசிடமிருந்தோ பிரதமரிடமிருந்தோ இதுவரை பொறுப்பான பதில் இல்லை.

மாறாக, ‘ஹிந்து பத்திரிகையில் வெளியான ஆவணங்கள் உண்மையா என்பதிலேயே சிறிது சந்தேகம்’ என்று ராஜீவ் கூறும் போது அசடு வழிகிறார். அது மட்டுமல்ல, அடுத்தடுத்து முன்னுக்குப் பின் முரணாக உளறிக் கொட்டிக் கொண்டுமிருக்கிறார். இந்த முரண்பாடான பேச்சுக்கள் உலகமகா ஜோக்காகிப் போய்ச் சந்தி சிரிக்கிறது.

தவறு செய்தவர்கள் மடக்கப்படும் போது ஆத்திரமடைவார்கள். எதிராளி மீது அவதூறுகளை அள்ளி வீசுவார்கள். ராஜீவ் காந்திக்குப் பக்கபலமாக நிற்பதாக எண்ணிக் கொண்டு காங்கிரஸ் அமைச்சர்கள், வி. பி. சிங்கை ‘மன நோயாளி’ என்று தூற்றுகிறார்கள்; ‘அந்நியச் செலாவணி சட்டங்களை மீறினார்’ என்று பழி சுமத்துகிறார்கள். ‘நான் குற்றவாளி என்றால் என் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே’ என்கிறார் வி. பி. சிங். வி. பி. சிங் குற்றமே புரிந்திருந்தாலும் அது ராஜீவின் தவறுகளை நியாயப்படுத்தியதாகி விடாது.

ராஜீவ் மூடி மறைக்கிறார்; பூசி மெழுகுகிறார் என்று படித்தவர் மட்டுமல்ல; பாமரரும் எண்ணத் தொடங்கி விட்டார்கள். ராஜீவ் சுத்தமானவர் என்றால் அதனை நிரூபிக்க அவர் உடனடியாக ஏதேனும் செய்தாக வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

வேஜா

ஸரோஜி

ஜாதகப் பரிவர்த்தனைக் கேந்திரத்தின் மூலம் சபேசனுக்கு அந்த இரண்டு வரன்களைப் பற்றிய எல்லா விவரங்களும் கிடைத்திருந்தன.

அச்சடித்து வைக்கப்பட்டிருந்த தம் பெண் கலாவின் ஜாதகம் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, தம் குடும்பத்தைப் பற்றிய 'பயோ—டேடா' பிரதி ஒன்று இவற்றுடன் அந்த இரண்டு இடங்களுக்கும் சபேசன் உடனே கடிதங்கள் எழுதிப் போட்டார்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்ற நாள் முதல், அவருக்கு இது ஒரு தினசரி அலுவலாகப் போயிற்று. தபாலாபீஸில் அஞ்சல் தலைகள் விற்பவருக்குக் கூட இவருடைய வழுக்கை மண்டையும் கழுகுப் பார்வையும் அத்துபடி. இவர் முகத்தைப் பார்த்ததுமே 'எத்தனை செட் ஒரு ரூபாய் நாற்பது பைசா?' எனக் கேட்பார். வழக்கமாக சபேசன் அனுப்பும் இம்மாதிரியான கடிதங்களின் எடை இருபத்திரண்டு கிராம். நீங்கள் இதைப் படிப்பதற்குள், மத்திய அரசு தபால் கட்டணங்களை மாற்றாமல் இருந்தால் — கட்டணம் ஒரு ரூபாய் நாற்பது காசுகள் மட்டுமே.

சபேசன் போடும் கடிதங்களில் 'எண்பது சதவிகிதத்திற்குப் பதிலே வராது. வரும் பதில் களில் சிலவற்றில் பையனுக்குஎற்







கெனவே கல்யாணம் முடிந்து குழந்தை பிறந்த செய்தி இருக்கும். இல்லையெனில்— பையனுக்குக் கல்யாணம் நிச்சயமாகி அழைப்பிதழைப் பதிலுடன் இணைத்திருப் பார்கள்.

ஆனால் — இந்த இரண்டு கடிதங்களுக்கு மட்டும் — ஒரே வாரத்தில் பதில் வந்து விட்டது. அவர்களும் பையனின் ஜாதகத் தையும் போட்டோவையும் அனுப்பியிருந் தார்கள். ''பையனுக்குப் பெண்ணையும் பெண்ணிற்குப் பையனையும் பிடித்திருந் தால் — 'மற்ற' விஷயங்கள் ஒரு பொருட் டல்ல''— எனத் தெம்பூட்டும் வகையில் இரண்டு பேருமே தெரிவித்திருந்தார்கள். வழக்கமாக எழுதப்படும் உண்மைக் கலப் பற்ற ஒரு வாசகம் இது என்பது சபேசனுக் குத் தெரியும். இப்படித்தான் பிரமாதமாக 'அளந்த' ஓர் இடத்தில் தன் பெண்ணைக் கொடுத்து விட்டு, மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாமல் — அவர் மைத்துனரே தவித்துக் கொண்டிருந்தார்.

'இந்த இரண்டு ஜாதகங்களை மட்டும் எடுத்துக் கொண்டு ஜோஸியரிடம் ஓட வேண்டாம்... இன்னும் கொஞ்சம் சேரட் டும்' எனச் சபேசன் அசிரத்தையாக இருந் தார். கலாவிற்குக் கல்யாண வேளை வந்து விட்டதோ என்னவோ — வேறு ஒரு விஷய மாக ஜோஸியரே இவரைத் தேடி வந்து விட்டார்.

வந்தவர் ஜாதகங்களை நன்றாக அலசிப் பார்த்து விட்டு, இரண்டுமே பொருந்துகிறது என்றும், இரண்டில் ஒன்றை முடிப்பது நல்லது என்றும் அழுத்தமாகக் கூறி விட்டுப் போனார்.

ஜாதகங்கள் பொருந்தி விட்டன — முதல் கட்டம் ஓகே!

அடுத்த படியாகப் பிள்ளைகளின் புகைப் படங்களை எடுத்துப் பார்த்தார்கள்.

முதல்வன் ரமேஷ் — முகம் லட்சணமாக இருந்தது. மீசை கூட முகத்திற்கு அருமையா கப் பொருந்தியிருந்தது. பையனின் தகப்பனார் தம் கடிதத்தில் பையன் சிவப் பாக இருப்பான் எனக் குறிப்பிட்டிருந்தார். பி.எஸ்.ஸி. படித்து முடித்து விட்டு ஏதோ பெரிய கம்பெனியில் சேல்ஸ் மானேஜராக இருக்கிறான்.

அடுத்த படம் கிருஷ்ண மூர்த்தியுடையது. இவனும் பி.எஸ்.ஸி. பட்டதாரிதான். நிறம் கொஞ்சம் மட்டுதான் எனப் புகைப்படத் திலிருந்தே தெரிந்தது. ஏதோ பூஜை செய்து விட்டு வந்தவன் போல் பட்டை விபூதியும் — குங்குமப் பொட்டும். வீட்டிலேயே போட்டோ எடுத்திருப்பார்கள் போலும். டெலிபோன் இலாகாவில் ஜூனியர் இன்ஜினியர். முன்னுக்கு வர நிச்சயம் வாய்ப்புகள் இருந்தன.

எந்த இடத்தில் பிரவேசிப்பது? யாருக்குச் சம்மதம் என எழுதுவது?

வீட்டில் அத்தனை பேரும் — கலா உள்பட ரமேஷ் பக்கம்தான் சாய்ந்தனர்.

எதற்கும் விஷயத்தைப் பத்து நாட்கள் ஆறப் போடலாம் எனத் தீர்மானித்தார் சபேசன். ஆனால் மறுநாள் காலையிலேயே பெரியவர் ஒருவர் அவர்கள் வீட்டைத் தேடிக் கொண்டு வந்து விட்டார். அவர் முகச் ஜாடையிலிருந்து அவர்தான் கிருஷ்ண மூர்த்தியின் தந்தை என்பதைக் கண்டு கொள்ள முடிந்தது.

அவர்களும் ஜாதகப் பொருத்தம் பார்த்து விட்டார்கள். அருமையாகப் பொருந்தி யுள்ளனவாம். பையனின் தம்பிக்கும் கூட ஓர் இடம் கூடி வந்திருக்கிறதாம். அந்தப் பெண் வீட்டில் முகூர்த்தத்தை உடனே வைக்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்களாம்.. மூத்தவனுக்குக் கல் யாணம் ஆகாமல் இளையவனுக்கு எப்படி முடிப்பது என்ற ஒரு சின்னப் பிரச்னை... அகஸ்மாத்தாகத் தங்கள் குலதெய்வத்தைப் பார்க்கப் போகும் வழியில் இந்த ஊருக்குக் குடும்பத்தோடு வந்திருக்கிறார்கள். பிள்ளை யும் தாயாரும் ஒரு லாட்ஜில் தங்கியிருக் கிறார்கள். சபேசன் வீட்டில் சம்மதித்தால் அன்றே பெண்ணையும் பார்த்து விட்டு ஒரு முடிவுக்கு வரலாம் என வந்தவர் தம் அபிப் பிராயத்தைத் தெளிவாக்கினார்.

அவரை எப்படிச் சமாளிப்பது எனச் சபேசனுக்குப் புரியவில்லை. மனைவியிட மும் மகளிடமும் 'குசுகுசு'வென்று பேசி னார். எவருக்கும் கிருஷ்ணமூர்த்தியை மாப்பிள்ளையாக ஏற்கத் தயக்கம் இருந்தது. அவர்கள் வோட்டு ரமேஷுக்கே!

வந்தவர் முகம் மாறாமல் எப்படி அனுப் புவது? சபேசன் துணிந்து ஒரு பொய்யைச் சொன்னார். தான் வேறு இடத்தில் வாக்குக் கொடுத்து விட்டதாகப் புளுகி வைத்தார். உண்மையில் தான் வந்தவருடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளக் கொடுப்பினை இல்லா மல் போயிற்றே என வருந்துவதாக நடித் தார் — அற்புதமாக.

வந்தவர் உடனே எழுந்து விட்டார்.

''பகவான் யார் யாருக்கு எங்கே எங்கே முடிச்சுப் போட்டு இருக்கிறானோ — அப்படித்தானே நடக்கும்!'' — என மேலே தம் கைகளைத் தூக்கிக் காண்பித்து விட்டுப் புறப்பட்டார்.

சபேசன் அன்றே ரமேஷின் பெற்றோருக் குப் பெண்ணைப் பார்க்க வர அவர்கள் சௌகர்யம் கேட்டுக் கடிதம் எழுதினார். பத்து நாட்கள் ஆகியும் பதிலைக் காணோம்.

பெண்ணைப் பெற்றவராயிற்றே? சும்மா இருக்க முடியுமா...? சபேசன் தாமே புறப் பட்டுப் போனார். அவர்களும் பார்ப்பதற்கு நல்லவர்களாகத்தான் தெரிந்தார்கள். ரமேஷின் தங்கை தலைப் பிரசவத்திற்குப்



அவள்: உன் காதலருடன் சேர்ந்து உட்கார்ந்து அவர் எழுதிய லவ் லெட்டரைப் படிச்சு சந்தோஷப்படுவியா... ஏன்?

இவள்: டாக்டராச்சே... அவர் கையெழுத்து அவருக்குத்தானே புரியும்...!

— ராஜி ராதா.

பிறந்தகம் வந்திருந்தான்.

"அடடா! நீங்களே புறப்பட்டு வந்து விட்டீர்களா! இந்த நெருக்கடியான நிலையில் எப்படி ஊரை விட்டு வருவது...? என்ன பதில் எழுதுவது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். தப்பாக நினைக்கா விட்டால் ஒன்று சொல்கிறேன். முடிந்தால் பெண்ணை இந்த ஊருக்கு அழைத்து வாருங்கள். என் பெண்ணும் பார்த்த மாதிரி இருக்கும். அப்புறம் உங்கள் உசிதம்..." எனத் திட்டவட்டமாகக் கூறினார் பிள்ளையைப் பெற்றவர்.

சபேசன் தயங்கவில்லை... பக்கத்தில் தான் அவர் தூரத்து உறவினர் வீடு இருந்தது. பெண் பார்க்கும் வைபவத்தை அங்கேயே வைத்துக் கொள்ளலாம்.

அடுத்த வாரமே தம் பெண், மனைவியுடன் உறவினர் வீட்டிற்கு வந்து தங்கினார். பிள்ளை வீட்டில் சொந்தத்தில் கார் இருந்தது. அவர்கள் சொல்லி அனுப்பியவுடன் புறப்பட்டு வந்தார்கள். பையனின் தங்கையும் கூட வயிற்றைச் சாய்த்துக் கொண்டு சிரமத்துடன் வந்து போனாள்.

பெண்ணைப் பார்த்து விட்டுப் போன போது அவர்கள் முகத்திலிருந்து எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை...

"நாளைக்கு வீட்டுப் பக்கம் வாருங்கள், சபேசன்...!" என அழைத்து விட்டுப் போனார் ரமேஷின் தந்தை.

சபேசனுக்கு எப்படியாவது இந்த இடத்தை முடிக்க விருப்பம். சில ஆயிரங்கள் கூடப் போனாலும் பரவாயில்லை. பையன் போட்டோவை விட நேரில் அழகாக இருந்தான்.

சபேசன் மறுநாள் காலை போனார். அவர்கள் இவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ரமேஷின் அப்பா நிதானமாக — ஆனால் கண்டிப்பாகச் சொன்னார். "கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர், மிஸ்டர் சபேசன்... பையனுக்குப் பெண்ணையும், பெண்ணுக்குப் பையனையும் பரிபூரணமாகப் பிடிக்க வேண்டும். உங்களுக்காகவோ எனக்காகவோ தலையை ஆட்டக் கூடாது. உங்கள் பெண் போட்டோவைப் பார்த்ததுமே நாங்கள் நினைத்தோம். 'குள்ளமாக மெலிந்து இருக்கிறாளே' என்று. நேரிலும் அப்படித்தான் தெரிகிறாள். ரமேஷுக்குப் பொருத்தம்தானா என்று நீங்களே சொல்லுங்கள். நமக்கே மனம் சமாதானப்படாத போது அவனிடம் எப்படிப் பேசுவது?" — எனக் கைகளைக் கூப்பி அனுப்பி விட்டார்.

சபேசனுக்குப் பதில் பேச வழியே தரவில்லை.

ஊருக்குத் திரும்பியவர் வீட்டில் மீண்டும் மந்திராலோசனை.

"சிவப்புத் தோல் இருந்தால் மட்டும் போதுமா...? பையன் ஒட்டச்சிவிங்கி மாதிரின்னா இருக்கான்... நம்ம கலா ஒல்லியா இருக்காளாம் குட்டையாம்... சின்ன யானைக் குட்டியாகப் பார்க்கட்டும்... அந்தக் கிருஷ்ண மூர்த்திக்கு என்ன குறைச்சல்...! கறுப்பு என்றால் மட்டமா..? 'கறுப்பு ஒரு அழகு காந்தல் ஒரு ருசி' எனச் சொல்வதில்லையா...? மனிதர் எத்தனை நல்லவர்... கொஞ்சம் கூடப் பந்தா இல்லாமல் நம் வீட்டைத் தேடி வந்தாரே?"

காற்று இப்போது கிருஷ்ணமூர்த்தி பக்கம் சாயவே — சபேசன் அடுத்த பஸ்ஸில் அவரைப் பார்க்கப் புறப்பட்டுப் போனார்.

அங்கே போய் என்ன சொல்வது? நொண்டிச் சாக்குக்கும் — பொய்க் காரணங்களுக்கும் என்ன பஞ்சம்? 'வரதட்சணை அதிகம் எதிர்பார்த்தார்கள், திடீரென்று ஆறு மாதம் போகட்டும் என்கிறார்கள், இன்னுமொரு ஜோஸியர் பொருந்தவில்லை என்கிறாராம் — இப்படி எத்தனை எத்தனையோ இருக்கின்றனவே.

கிருஷ்ண மூர்த்தி வீட்டில் சபேசனுக்கு ராஜ உபசாரம்... மனப்பூர்வமாகச் சிரித்த முகத்துடன் வரவேற்றனர்.

"உங்கள் வீட்டிற்கு வந்த வேளை நல்ல நேரம்... திரும்பும் போது பஸ் ஸ்டாண்டில் நீலகண்டனைப் பார்த்தேன்.. என் பால்ய சிநேகிதன். அவன் குடும்பமும் நாங்களும் எத்தனை நாட்கள் பழகியிருக்கிறோம். எதுவும் விசாரிக்க அவசியம் இல்லை... அவன் பெண்ணை என் பிள்ளைக்குப் பஸ் ஸ்டாண்டில் வைத்துப் பேசி முடித்து விட்டேன். என் பிள்ளை என் பேச்சுக்கு எதிர் வார்த்தை பேச மாட்டான் என்ற நம்பிக்கை... அடுத்த வெள்ளிக் கிழமை சுவாமி மலையில் கல்யாணம். அடியே... ஸாருக்கு ஒரு இன்விடேஷன் எடுத்து வா...! ஆமாம்... உங்கள் பெண் கல்யாணம்..."

சபேசனுக்குப் பொய்ச் சாக்கு எதுவும் சொல்லத் தேவை ஏற்படவில்லை. "ஆமாம்... நடத்த வேண்டியதுதான்!" எனக் கூறிவிட்டு எழுந்தார்.

* ஜோச்



நீங்கள் கேட்டவை — தராசு

அரசியல் ஸ்டண்ட் என்றால் என்ன?

* வீ. சுந்தர ராமன், குத்தாலம்.

? அரசியல் ஸ்டண்ட் என்றால் என்ன?

! டிஷ்யூம் — வீரப்பன் மீது ஒரு குத்து; ஜானகிக்கு ஒரு ஸைட் கிக். 'புரட்சித் தலைவியே உன் பாதம் பணிவேன்... ஆனால், கணக்குக் காட்டு! எங்கே பணம்?' ஒரு அப்பர் கட்! ஜூடோ பிடி. உடலை வளைத்துக் கழுத்தில் ஒரு கராத்தே வெட்டு... 'நால்வர் அணியே நாட்டுக்கு நல்லது... ஆணவத் தலைவி அறிவாள்... அது சரி, நெடுஞ்செழியன் எப்படி மூப்பனாரைச் சந்திக்கலாம்?' வயிற்றில் ஒரு ஸ்ட்ரெய்ட் கிக், குனியும் போது கழுத்தில் ஒரு வெட்டு, முதுகில் ஒரு மிதி... ஒழி... தரையிலிருந்து மேலெழும்பி ஒரு பல்டி. 'புரட்சித் தலைவிக்கு ஜே.... மன்னிப்புக் கேட்பதா? ஹி... ஹி... தர்மசங்கட கேள்வி...' ஸ்டண்ட் காட்சி தொடரும்...

* கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.

? பெண்கள் சொந்தக் காலில் நிற்க ஏதோ திட்டம் கொண்டு வரப் போவதாக ராஜீவ் சொல்கிறாரே?

! முதலில் இ. காங்கிரஸ் இங்கே சொந்தக் காலில் நிற்பது உறுதியாகட்டும்; அப்புறம் பார்க்கலாம்.

* கி. குமாரவேலு, சென்னை — 95.

? ஊழலற்ற உருப்படியான ஆட்சி அமைய என்னதான் சார், வழி?

! மக்கள் புத்திசாலித்தனமாகத் தங்கள் வோட்டுரிமையைப் பயன்படுத்துவதுதான். 'மக்களை ஏமாற்ற முடியாது; லஞ்ச ஊழல் செய்தால் கல்தா கொடுப்பார்கள்' என்ற பயம் ஆட்சியாளருக்கு இருக்க வேண்டும். இரு பொதுத் தேர்தல்களுக்கு இடையில் உள்ள காலத்தை ஓராண்டு குறைப்பதும் உதவும்.

* ஆர். அருணாசலம், திருவண்ணாமலை.

? பெங்களூர் டெஸ்டில் சித்துவின் முதல் செஞ்சுரி குறித்து?

! அபாரம். அடிக்கடி வெங்ஸர்க்காருடன் அவர் கலந்தாலோசித்ததும் பல யோசனைகளை ஏற்றுக் கொள்வது போல் தலையசைத்ததும் அடக்கத்துடன் கூடிய ஆற்றலை உணர்த்தியது. ஆனால் வீரம் என்று சொன்னால் பல ஆட்டக்காரர்கள் உடல் நலம் குன்றியும் கூட, இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்து வெற்றிக்கும் முயற்சி செய்கிறதே நியூஸிலாந்து அணி, அதுதான் வீரம்!

* பி. ஆர். பார்த்தசாரதி, மன்னார்குடி.

? ஒருவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அவரது கொடும்பாவி எரிப்பது முறையா?

! அல்ல. ஒரு தனி மனிதரின் கொடும்பாவி எரிப்பது அநாகரிகம். ஆனால் தீமைகளுக்குக் கொடும்பாவி எரிக்கலாம். (உம்) லஞ்ச ஊழலுக்கு இடம் தருவதில்லை என்று மக்கள் உறுதி கொண்டுள்ளதை லஞ்ச அரக்கனை எரித்து உணர்த்தலாம்.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'கண்ணாடி வளையல் அணியும் பெண்கள் மூப்பனார் ஆட்சியில் முத்துக்கள் பதித்த தங்க வளையல்கள் அணிவார்கள்' என்று குமரி அனந்தன் கூறியுள்ளாரே?

! நல்ல வேளை, எந்தக் கட்சியைச் சேர்ந்த, யார் வீட்டுப் பெண்கள் என்று கூறாமல் தப்பி விட்டார்!

* ஆர். ரத்தினசாமி, புன்செய்புளியம்பட்டி.

? தமது சொத்து விவரங்களையும் குடும்

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

வீ. அருண்,
காமராஜ் இல்லம்,
நேதாஜி சாலை,
கீரமங்கலம் — 614 624.

பத்தின் சொத்து விவரங்களையும் வெளியிட்ட வி. பி. சிங்கின் துணிச்சல் எத்தனை அரசியல்வாதிகளுக்கு வரும்?

! இதற்கு ஒன்றும் பிரமாத துணிச்சல் தேவைப்படுவதாக எனக்குத் தோன்றவில்லை. பினாமி பெயர்களிலும் அயல் நாட்டு வங்கிகளிலும் சொத்து வைத்துக் கொள்ளும் காலம் இது. (வி. பி. சிங் இப்படி செய்கிறார் என்று நான் சொல்வதாக அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது) அடிப்படைத் தேவை தலைவர்களுக்கு நேர்மையும் நல்லொழுக்கமுமே.

* எம். வேனாப்ரியன், திருமருகல்.

? ஒரு சிறுகதைக்குரிய இலட்சணம் என்ன?

! பல்லிடுக்கில் சிக்கிக் கொண்ட சிறு பாக்குத்துகள் மாதிரி படித்து முடித்த பிறகும் அது நம்மைக் குடைந்து கொண்டே இருக்க வேண்டும்.

* கே. கணேஷ், சென்னை — 6.

? 'குழந்தைகள் காங்கிரஸைத் துவக்க வேண்டும்' என்ற சிறுமி சோயாவின் வேண்டுகோளும் 'உன் யோசனையைப் பரிசீலிக்கிறேன்' என்று பிரதமர் கொடுத்த வாக்குறுதியும் எதைக் காட்டுகின்றன?

! 'உடனடியாகக் குழந்தைகள் காங்கிரஸை ஆரம்பித்து அதற்கு ராகுலைத் தலைவராகப் போட வேண்டும்' என்று எல்லா மாநில, மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகளும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கோடி காட்டுகின்றன! த. நா. கா. க. தூங்கி விடாமல் முந்திக் கொள்ளட்டும்!

* சி. மணி, புத்தனாம்பட்டி.

? இதுவரை எந்த அரசியல் கட்சியாவது உண்மையிலேயே மக்கள் நலனுக்காகப் பாடுபட்டதுண்டா?

! உம். காங்கிரஸ் உழைத்தது — சுதந்திரத்துக்கு முன்பு.

* ந. இளங்கோவன், தலைஞாயிறு.

? ஜோக் ஒன்று சொல்லுங்களேன்?

! 'கமிஷனே யாருக்கும் தரப்படவில்லை. கமிஷன் தரப்படவில்லை; ஏஜெண்ஸியை ரத்து செய்ததற்கான நஷ்ட ஈட்டுத் தொகையே தரப்பட்டது. முக்கிய தேவையான பணிகளைச் செய்ததற்குப் பணம் தரப்பட்டிருக்கலாம்; அதில் தவறென்ன? கமிஷன் தரப்படவில்லை என்று சொல்லவேயில்லை; ஸி. பி. ஐ. ஆராய்கிறது. கமிஷன் தரப்படவில்லை என்று சொல்லவேயில்லை என்று சொல்லவேயில்லை!' — நன்றி: ராஜீவ் காந்தி.

* வி. அருண், சீரமங்கலம்.

? எப்படிப்பட்ட ஆட்சி அமைய வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?


! சில தினங்களுக்கு முன் தில்லியில் ஓர் அமைச்சர் வீட்டில் திருட்டுப் போய் விட்டது. ஏராளமான பணமும் நகைகளும் திருட்டுப் போய் விட்டதாகப் போலீஸில் புகார் செய்திருக்கிறார். ஆனால் எவ்வளவு பணம் என்று அவரால் கூற முடியவில்லை. நகைகளின் பட்டியலைத் தர முடியவில்லை (விரும்பவில்லை?) இப்படி திருடனுக்குத் தேள் கொட்டியது போல் அமைச்சர்கள் தவிக்காத ஆட்சி வர வேண்டும். மந்திரி வீட்டில் திருட நுழைவது தண்டம் என்று திருடர்கள் எண்ணும் காலம் மலர வேண்டும்.

* அ. கிருஷ்ணமூர்த்தி, நரிப்பாளையம்.


? 'இந்திய ராணுவத்தைப் பழிப்பவர்கள் தேசத்துரோகிகள்' என்று ராஜீவ் கூறுவது சரியா?


! நூற்றுக்கு நூறு சரி. ராணுவம் ஒரு செயலில் இறங்க நேர்ந்ததற்கான ஆட்சியின் கொள்கையைப் பழிக்கலாம். ராணுவத்தை அல்ல.

* அரசியல் ஸ்டண்ட்










துணிச்சல்.



தேசிய பொய்யர்கள் கழகம்


• ரிஷிகுமாரன் நீர் மொள்ள, அந்தச் சப்தத்தைக் கேட்டு வனவிலங்கு நீர் அருந்துவதாக எண்ணி, அந்தத் திக்கு நோக்கி அம்பு எய்து விட்டான் தசரதன் என்றும் அதனால் அவன் தன் மகனைப் பிரிந்து வாழும் சாபம் பெற்றான் என்றும் அறிவோம். இதாலியில் சமீபத்தில் இரு நண்பர்கள் கரடி வேட்டை ஆடச் சென்றனர்! வெகு நேரம் தேடியும் கரடி ஏதும் அகப்படவில்லை. நண்பர்களில் ஒருவன் புதர்களுக்கிடையில் ஒளிந்து கொண்டு கரடி மாதிரி உறுமினான், மற்றவனை ஏமாற்ற. விளையாட்டு வினையாயிற்று! சத்தம் வந்த திக்கு நோக்கி மற்றவன் சுட..... நல்ல வேளை, தோட்டா காலில் பாய்ந்தது; உயிர் தப்பியது!

• இந்தியன் ஏர்—லைன்ஸில் விமான விபத்துக்கள் நிறைய ஏற்படுகின்றன என்பதால் பம்பாய் பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் முரளி தியோரா ஓர் அற்புதமான யோசனை தெரிவித்திருக்கிறார். எல்லா விமானங்களிலும் பெரிய பெரிய கண்களைப் படம் வரைய வேண்டுமாம்! அதைப் பார்த்ததும் பறவைகள் பயந்து ஓடிவிடுமாம்! எனவே பறவைகள் இஞ்சினுக்குள் உறிஞ்சி இழுக்கப்படுவதால் ஏற்படும் விபத்துக்கள் இல்லாமல் போய் விடுமாம். இந்த அரிய யோசனையை ஏற்றுக் கொண்டு அமுல்படுத்திப் பார்ப்பதாக விமானத்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் உறுதி அளித்திருக்கிறார்!

• ராஜீவ் காந்தி பிரமாதமாகப் பொய் சொல்கிறார் என்பதால் அவர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என்பது வி. பி. சிங், ஹெக்டே ஆகியோரது முடிவான அபிப்பிராயம் என்று நாளிதழ்களில் படிக்கிறோம். அமெரிக்காவில் 'தேசிய பொய்யர்கள் புகழ் கழகம்' ஒன்று உள்ளது. இது ஆண்டுதோறும் புகழ்பெற்ற பொய்யர் ஒருவருக்கு விருது அளித்துக் கௌரவிக்கிறது. இந்த ஆண்டுக்கான விருது, ஒரு விவசாயப் பத்திரிகையாளருக்குக் கிடைத்தது. இவர், 'ஒஹியோ மாநிலத்தில் வறட்சி மிக அதிகமாகி விட்டதால் அங்குள்ள ஒரு பாதிரி மதுவை நீராக்க முயற்சி மேற்கொண்டார்' என்று எழுதி, வாசகர்களை நம்ப வைத்து விட்டார்! ஒரு முக்கிய விஷயம் கவனிக்க வேண்டும்: இந்தக் கழகம் அரசியல்வாதிகளைச் சேர்த்துக் கொள்வதில்லை! கௌரவிப்பதும் இல்லை. இதற்குக் கழகத்தின் காரியதரிசி கூறும் காரணம்: ''பொய்யையே முழு நேரத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு எங்கள் கழகத்தில் இடமில்லை! அதனை ஒரு ஹாபியாகப் பயிலும் அமெச்சூர்களைத்தான் சேர்த்துக் கொள்கிறோம்.''


• இலங்கையில் நடக்கும் இனக் கலவரங்களுக்கு இணையாக இன்னொரு பெரும் தொல்லை உண்டென்றால் அது, குடித்து விட்டுக் கும்மாளமிடும் வௌவால்கள் தானாம்! கள் இறக்கப் பனை மரங்களில் பானை கட்டியிருக்கிறார்கள் அல்லவா? அந்தப் பானையிலிருந்து வௌவால்கள் குடித்து விடுகின்றன. பிறகு ஏகமாகச் சத்தம் போட்டுத் தாறுமாறாகப் பறக்கின்றன! மக்களைத் தூங்க விடுவதேயில்லை! கள் இறக்குவோர், அறுவடை குறைவதால் துயரமடைந்திருக்கிறார்கள்.

• ஜப்பானியருக்கு முட்டைக் கோஸ் ரொம்பப் பிடிக்கும். ஆனால் திரும்பத் திரும்பப் பச்சை நிற முட்டைக் கோஸ் சாப்பிட்டு அவர்களுக்கு அலுத்து விட்டதாம். அதனால் பீட்ரூட்டையும் காபேஜையும் ஒட்டுப் போட்டு, ஆரஞ்சு நிற முட்டைக் கோஸ் தயாரித்துள்ளனர் விஞ்ஞானிகள். ருசியும் அபாரமாய் இருக்கிறதாம்!




Marvel
மார்வல்–இதம் தரும் தன்மை
காஞ்சிப்பட்டுப் போன்ற மென்மை.
ஸ்பன் ஸில்க் போன்ற தன்மை. காஞ்சீவரம் பட்டுப் போன்ற மென்மை. தேங்காய் எண்ணெயின் இயற்கையான நற்குணங்கள் தரும் நுரைவளத்தின் செழுமை.

வெறும் பாசத்தினால் மட்டுமே இவர்களின் மருத்துவக் கட்டணங்களை செலுத்த முடியாது



மெடிக்ளைம் உதவியால் செலுத்த முடியும்

ஆம், மெடிக்ளைம்—ஒரு ஹாஸ்பிடலைசேஷன் மற்றும் டொமிசிலியரி ஹாஸ்பிடலைசேஷன் பெனிஃபிட் பாலிஸி, இது உங்கள் குடும்பத்தினர்க்கு ஒரு வரப்பிரசாதம்.

நீங்கள் எத்தனை அன்பு செலுத்தினாலும் சரி... உங்கள் கம்பெனி எத்தனை மருத்துவத் திட்டம் வழங்கினாலும் சரி... அவை உங்களுக்கு ஏற்படும் பெரிய நோய்கள், அறுவை சிகிச்சைகள், விபத்துகள் போன்றவைகளுக்குத் தேவைப்படும் மருத்துவ பராமரிப்புக்கு ஆகும் கட்டணங்களை செலுத்திவிட முடியாது.

ஆகவே உங்களுக்குத் தேவை மெடிக்ளைம்.

உங்களுடைய தேவைகளுக்கு ஏற்ப - பலரக மருத்துவ வசதிகளை வழங்குகிறது மெடிக்ளைம்.

வீட்டில் இருந்து கொண்டே மருத்துவமனையில் பெறும் சிகிச்சை வசதிகளுக்கும் கூட பாதுகாப்பளிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் குடும்பத்தினர் அனைவருக்கும் பாதுகாப்பு செய்து கொண்டால், பிரிமியத்தில் தள்ளுபடியும், வரிவிலக்கும் கிடைக்கும்.

பாசத்தின் பிரதிபலிப்பாக உங்கள் குடும்பத்தினர்களுக்கு, மெடிக்ளைம் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு செய்து கொள்ளுங்கள்.

இதற்கு ஆகும் செலவோ மிகச் சொற்பம், உங்களுக்கு இதன் மூலம் கிட்டும் பலனோ மிக்க அதிகம்.

இத்திட்டம் உங்கள்பால் மிக்க அக்கறை காட்டுகிறது.

ஆண்டொன்றுக்கு பிரிமியம் ரூ.	ஹாஸ்பிடலைசேஷன் ரூ.	டொமிசிலியரி ஹாஸ்பிடலைசேஷன் ரூ.
200	10,500	3,100
250	17,600	—
350	25,500	—
600*	37,750	5,250
840*	52,750	7,400
1300*	82,500	11,500

வயது வரம்பு: 5-70 ஆண்டுகள்

* கூடுதல் பிரிமியம் செலுத்துவதின் பேரில் பர்சனல் ஆக்ஸிடென்ட் காப்பு கிடைக்கும்.

MED+CLAIM

மெடிக்ளைம் வழங்குவோர் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

NEW INDIA ASSURANCE

A subsidiary of the General Insurance Corpn. of India

எந்த விபத்திற்கும் நாங்கள் பாதுகாப்பு அளிக்கிறோம்!

CONTOUR ADS-NIA-278E/87


துப்பறியும்
சூர்யா – கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்
யாரோ கதவைத் தட்ட, கிரண் ஒளிந்து கொண்டாள். குரானா ஆய்வினைத் தொடர்ந்தார்.
மூன்று குண்டர்கள் நுழைந்து......
இந்தப் பக்கம் ஒரு பெண் வந்தாளா?
இல்லையே!
மூவரும் அறையை நோட்டம் பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பினர்.
கிரண் மீண்டும் வெளிப்பட்டு...
அவர்கள் மறுபடி வருவார்கள். என்னைக் கண்டுபிடித்தால் உங்களைச் சித்திரவதை செய்வார்கள்.
தப்பிக்க வழி இருக்கிறதா?
இந்தச் சாக்கடை கடலை நோக்கிச் செல்கிறது. ஆய்வுக் கூடத்தின் கழிவுப் பொருள்களை இதில்தான் கொட்டுகிறோம்.
கவலை வேண்டாம். இந்த வடிகால் மூலம் வெளியேறி விடுகிறேன்.
வடிகால் ஆழமாக இருந்தது. நீண்டு கொண்டே போயிற்று.
(தொடரும்)
17



• அழகு மிளிரும் ஒரு (மாலத்) தீவு...

அமைதித் தீவில் அதிரடி நடவடிக்கை

மாலத்தீவுகளின் ஜனாதிபதி மாமூன் அப்துல் கயூமின் ஆட்சியைக் கவிழ்க்க முயன்ற கூலிப் படையினரை இந்திய ராணுவம் தலையிட்டு முறியடித்த விஷயம் அனைவரும் அறிந்த ஒன்று. இந்தக் கவிழ்ப்பு முயற்சிக்கு என்ன காரணம்? 'அரசியல் காரணங்களாக இருக்க வாய்ப்பே இல்லை' என்கிறார்கள், மாலத்தீவுகளுடன் வியாபார மற்றும் தொழில் ரீதியாகத் தொடர்புடைய சிலர். பெயர்களை வெளியிட விரும்பாத அவர்கள் என்னதான் சொல்கிறார்கள்? மாலத்தீவுகள் பற்றிய விவரங்களோடு அவர்கள் சொல்லும் அந்தக் கோணத்தையும் விளக்குகிறது இக்கட்டுரை......

இலங்கைக்குத் தென்மேற்கே சுமார் 650 கி. மீ. தூரத்தில் உள்ள மாலத்தீவுகள். திருவனந்தபுரத்திலிருந்து சென்றால் சுமார் முக்கால் மணி நேர விமானப் பயணம். ஆயிரத்து நாற்றுத் தொண்ணூறு தீவுகளைக் கொண்ட ஒரு கூட்டம்தான் மாலத்தீவுகள் என்றாலும் மக்கள் வசிக்கும் தீவுகளின் எண்ணிக்கை இருநூறு மட்டும்தான். மதம் முழுக்க முழுக்க இஸ்லாம். ஆயினும் கடுமையான ஆசாரங்கள் கிடையாது. பெண்கள் கூட எந்த நேரத்திலும் வெளியில் சென்று வரலாம். எந்த பயமும் கிடையாது. மக்கள் சாதாரணமாகவே சமாதானப் பிரியர்கள் என்பதால் நிர்வாகத்திற்குத் தேவையான அளவுக்கு மட்டுமே ராணுவம்.

தேங்காயும், மீனும்தான் ஏற்றுமதிப் பொருள்கள். இந்தத் தீவுகள் அனைத்துமே மிதமான சீதோஷ்ண நிலையில், தென்னைகள் சூழ்ந்திருக்க, நீலக்கடல் தாலாட்டும் அழகு கொஞ்சும் தீவுகளாக இருப்பதால் மே. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து ஆண்டொன்றுக்கு லட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. எனவே, சுற்றுலா வருமானம் ஏராளம். மொத்தத்தில் ஆண்டொன்றுக்குப் பதினாறு மிலியன் டாலர்கள் அந்நியச் செலாவணி சம்பாதிக்கிறது மாலே. தேங்காய், மீன் ஆகியவற்றைத் தவிர மற்ற அனைத்தையும் இறக்குமதிதான் செய்ய வேண்டும். ஆனால் வருவாயுடன் ஒப்

பிட இதற்காகும் செலவு மிகவும் குறைவு. குடிநீருக்குப் பெய்யும் மழை நீரைச் சேமித்து வைத்துத்தான் உபயோகப் படுத்த வேண்டும். வேறு வழியில்லை.

எல்லாத் தீவுகளிலும் சேர்த்தால் கூட மக்கள் தொகை இரண்டு லட்சத்தை எட்டாது. தலைநகராக உள்ள தீவின் பெயர் மாலே. ஒன்றரை மைல் நீளம், அரை மைல் அகலம் கொண்டது இத்தீவு. முக்கியமான வீதிக்கு மஜீதி மாகு (மாகு என்றால் தெரு) என்று பெயர். இங்கு இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்து குடியேறியவர்கள் ஏராளம். அதனால் இந்தக் கலவையா



* வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் தீவு...



* ஜனாதிபதி கயூம்

கவே கலாசாரமும் இருக்கும். அனைவருக்கும் ஆங்கிலம் தெரியும். தேசிய மொழி திவேஹி. இது சமஸ்கிருதமும் அராபியும் கலந்த ஒரு கலவை மொழி.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட குளுகுளு கார்கள் இருந்தாலும் அங்குள்ள மக்கள் சைக்கிளையே உபயோகிக்கிறார்கள். ஒவ்வொரு தீவும் சைக்கிளில் சென்று விடக் கூடிய அளவுக்கே நீள அகலம் கொண்டவை என்பதால் அமைச்சர்கள் கூட சைக்கிளையே உபயோகப்படுத்துவார்கள். அடுத்த தீவுகளுக்குச் செல்ல வேண்டுமானால் படகுச் சவாரிதான். யாரும் டவுன் பஸ் விடச் சொல்லிக் கோரிக்கைவிட முடியாது!

இந்தியாவிலுள்ளது போலவே அங்கும் வடக்கு, தெற்கு வேறுபாடுகள் உண்டு. தெற்கில் உள்ளவர்கள் மற்றவர்களைவிட நாகரிகமாக இருப்பதால் மற்றவர்களுக்குக் — குறிப்பாக வடக்கத்தியர்களுக்கு உள்ளூற ஒரு பொறாமை உணர்ச்சி உண்டு. எனினும் இது அத்தீவுகளின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய அளவுக்கு வெறியாக வளர்ந்துவிடவில்லை என்பது சந்தோஷமான விஷயம்.

இப்படிப்பட்டதொரு சூழ்நிலையில் தான் ஆட்சிக் கவிழ்ப்புச் சதி நடந்து முறியடிக்கப்பட்டிருக்கிறது. இது முதல் சதி அல்ல. 78 — இல் ஆட்சிக்கு வந்த கயூமை 80 — இல் ஒரு முறையும், 83 — இல் ஒரு முறையும் கவிழ்க்கப் பார்த்தார்கள். இப்போது மூன்றாவது முறையாக முயற்சி நடந்திருக்கிறது. முன்பு நடந்த சதிகளுக்குப் பிரிட்டிஷ் கூலிப்படை பயன்படுத்தப்பட்டது. இப்போது போரிட இலங்கையில் திரட்டப்பட்ட போராளிகள் தருவிக்கப்பட்டனர்.

சதிக்கு என்ன காரணம்?

ஜனாதிபதி கயூமின் மைத்துனர் இலியாஸ் இப்ராஹிம் என்பவர்தான் தேசியப் பாதுகாப்பு மற்றும் வர்த்தக அமைச்சர். இவருக்கு லண்டன் ஹைட் பார்க் பகுதியில் ஓர் எட்டு மாடிக் கட்டடம் சொந்தமாக இருக்கிறது. அதோடு மாலத் தீவுகளிலேயே அதிக உயரமான கட்டடமும் இவருக்கே சொந்தமானது என்கிறார்கள். ஓர் ஆணியைக் கூட இறக்குமதி செய்தால்தான் உண்டு என்கிற நிலையில் அத்தனை உயரமான கட்டடம் கட்ட வேண்டுமானால் எத்தனை செலவு பிடித்திருக்கும்? அதற்குப் பணம் எப்படி வந்திருக்க முடியும் என்று கேட்கிறார்கள்.

மாலத் தீவுகளைப் பொறுத்தவரை 'ஸ்டேட் டிரேடிங் ஆர்கனைசேஷன்' என்ற அமைப்பின் ஏகபோக்கியத்துக்கு உட்பட்டுத்தான் எல்லா வர்த்தகர்களும் இயங்க வேண்டும். அது வைத்ததுதான் சட்டம்; நிர்ணயித்ததுதான் விலை. அது வர்த்தக அமைச்சரின் கட்டுப்பாட்டுக்குள் என்றால் அமைச்சருக்கு என்ன குறை இருக்க முடியும் என்கிறார்கள்.

மேலும் மாலத் தீவுகளில் எல்லாமே தாற்காலிக(adhoc)ச் சட்டங்கள்தான் என்பதால், சைக்கிளில் விளக்கில்லாமல் செல்லும் ஒரு பதினாறு வயதுச் சிறுவனைக் கூட அக்குற்றத்திற்காக நாடு கடத்திவிட முடியும்! இந்நிலையில், தேசியப் பாதுகாப்புக்கும் வர்த்தகத் துறைக்கும் ஒருவரே அமைச்சர் என்றால் அவர் நினைத்தால் என்னதான் செய்ய முடியாது என்கிறார்கள்.

இந்த நிலையில்தான் வர்த்தக அமைச்சரின் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக அல்லது 'கொட்டிக் கொடுத்து' மாளாத வியாபாரிகள் சிலர் முன்னாள் தொழிலதிபர் அப்துல்லா லதூஃப் தலைமையில் ஒன்று சேர்ந்து, தங்கட்குத் துணையாக இலங்கைத் தமிழ்ப் போராளிகள் பிரிவில் ஒன்றான பிளாட்(PLOT)டையும் சேர்த்துக் கொண்டு இந்த அதிரடி நடவடிக்கையில் அல்லது மோசமான இந்தமிரட்டலில்ஈடுபட்டிருக்கலாம் என்கிறார்கள். பிளாட் இதை மறுத்து விட்ட போதிலும் 'பிளாட்' போராளிகள் ஒத்துழைத்ததாக அப்துல்லா லதூஃப்பே கூறியிருக்கிறார்.

எது எப்படியோ, மாலத்தீவு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியை முறியடித்த இந்தியாவைப் பாராட்டுகிற அதே நேரத்தில், நமது இந்திய உளவுத் துறையின் மெத்தனத்தையும் கடுமையாக விமர்சித்திருக்கின்றன சில ஆங்கிலப் பத்திரிகைகள். எப்படி?


மாலத்தீவு ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு இலங்கையிலுள்ள கூலிப் படைகள் உதவியிருக்கும் போது, இலங்கையிலேயே இருபத்து நான்கு மணி நேரமும் நமது ராணுவம் இருந்து செயல்படும் ஒரு நிலையில், நமது உளவுத் துறைக்கு இந்தச் சதித் திட்டம் பற்றி முன்கூட்டியே தெரிந்திருக்க வேண்டாமா என்பதுதான் அவை எழுப்பியுள்ள கேள்வி!

— நமது நிருபர்கள்.

அட்டையில், மாலத்தீவுக் காட்சிகள்.

இப்போது ஹார்லிக்ஸ் கூடுதல் கால்ஷியத்துடன்





"அப்படி என்றால் ஒவ்வொருவருக்கும் கூடுதல் ஆரோக்கியம்"

ஹார்லிக்ஸ் இப்போது கூடுதல் கால்ஷியத்துடன் செறிவூட்டப் பட்டிருக்கிறது—வளரும் குழந்தைகளின் வலுவான பற்களுக்கும், ஆரோக்யமான எலும்புகளுக்கும், குடும்பத்தினர் அனைவரின் ஆரோக்யத்திற்கும் ஹார்லிக்ஸ் மிகவும் முக்கியமானது. கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு மிகவும் தேவையான கூடுதல் கால்ஷியம் கிடைப்பதிலும் இது உதவுகிறது.

ஹார்லிக்ஸ் முழுவதும் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது—புரோட்டீன், விட்டமின்கள், மினரல்கள், மற்றும் கார்போஹைட்ரேட்டுகள்—இவை சக்தியும், ஊட்டமும் அளிக்கின்றன. இப்போது கூடுதல் கால்ஷியத்தினால், கூடுதல் ஆரோக்யம்.

சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HTA 6038 TAM

போட்டிக் கதை — 13

விளாம்பழ ஓடுகள்

ஈஸிசேரில் சாய்ந்தபடி அன்றைய தினசரியை மடியில் கிடத்திக் கொண்டு, மூக்குக் கண்ணாடியை எடுத்து மேல் துண்டினால் துடைத்துக் கொண்டிருந்தார் கும்பேஸ்வரர். அவர் முன் இருந்த சிறிய ஸ்டூலில் காப்பி தம்ளரை வைத்து விட்டுத் தரையில் முற்றத்தின் தூணில் சாய்ந்தபடி அமர்ந்தாள் அவரது மனைவி அம்முலக்ஷ்மி.

அவர் காப்பி சாப்பிட்டு முடிக்கும் வரை காத்திருந்தவள், ''ஏங்க, சந்துருவுக்கு லெட்டர் போய்ச் சேர்ந்திருக்குமில்லே?'' என்று கேட்டாள்.

பேப்பரிலிருந்து பார்வையை அவள் மீது திருப்பியவர் லேசாகச் சிரித்தார்.

இந்த சிரிப்பிற்கு என்ன பொருள்?

இதையே நான்கு நாட்களாக ஏன் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருக்கிறாய்?' என்று பொருளா, 'ஏன் மனசைப் போட்டுப் பிசைந்து கொள்கிறாய்' என்று பொருளா?

''நீதானே எழுதி போஸ்ட் பண்ணினே? போயிருக்கும்.''

''பதில் வரலியே. இன்னிக்கு வந்திடும்னு படறது.''

''சரி.''

''இல்லே, பிள்ளைகளுக்கு லீவுதானே. சந்துருவே பிள்ளைகளோட புறப்பட்டு வருவானோ?''

''வரட்டும்.''

''உங்களுக்கு என்ன தோணறதுன்னு சொல்லுங்களேன்.''

ஆர்வமாக அவரைப் பார்த்தவளுக்கு ஒரு சிரிப்புத்தான் பதிலாகக் கிடைத்தது.

இந்தச் சிரிப்பு என்ன சொல்கிறது?

பைத்தியக்காரி அவன் வரமாட்டாண்டி என்றா? அல்லது சந்துரு ஏற்பாடு செய்யாமலா இருந்திடுவான் என்றா?

கும்பேஸ்வரருக்குப் பூர்வீகமே கும்பகோணந்தான். அங்கேயே டவுன் ஹைஸ்கூலில் படித்துப் பின்னர் பிரசித்தி பெற்ற கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜில் பட்டம் முடித்து, அதே டவுன் ஹைஸ்கூலில் ஆசிரியராகப் பதவியேற்று அங்கேயே ஹெட்மாஸ்டராகி ரிடையராகிப் போனவர். வேலைக்குச் சேர்ந்த கையோடு பெரியவர்களாகப் பார்த்து நிச்சயிக்கப்பட்டு அம்முலக்ஷ்மியை மணந்தார். அம்முவிற்கு ஸ்ரீரங்கம் பக்கம். கழுத்திலும், காதிலும் கொஞ்சம் போட்டுக் கொண்டு சில தட்டு முட்டுப் பாத்திரங்களோடு வந்து சேர்ந்தாள்.

கும்பேஸ்வரர் தன் பெற்றோர்க்கு ஒரே மகன். அப்பா காலமாகி விட அம்மாவால் வளர்க்கப்பட்டு, அவளும் இவருக்குத் திருமணம் செய்த கையோடு கண்மூடிக் கொண்டாள். சொத்து என்று சொல்லிக் கொள்வதற்கு இருப்பது இந்த தாய்வழிப் பாட்டியின் பூர்வீக வீடு ஒன்றுதான். இந்த வீட்டின் மீது ஏற்பட்டுப் போயிருந்த பாசத்தின் காரணத்தால் அவருக்கு தஞ்சாவூர் கலெக்டர் ஆபீஸில் நல்ல உத்தியோகம் கிடைத்தும் கூட அவர் போகவில்லை.

இவர்களுக்கு ஒன்றன் பின் ஒன்றாக நான்கு குழந்தைகள். கலாவதியும், பிரபாவும் பிறந்த பின்னால் உப்பிலியப்பன் கோயிலில் வேண்டிக் கொண்டு அம்முலக்ஷ்மி விரதமிருந்ததும் மூன்றாவதாகச் சந்துரு பிறந்தான். கடைசியாகக் கௌரி.

பெண் பிள்ளைகளுக்கெல்லாம் எட்டாவது பதினோராவதோடு படிப்பை நிறுத்தி விட்டுச் சந்துருவை மட்டும் பி.காம் படிக்க வைத்தார். கௌரி பிளஸ்டு வரை போனாள்.

இவரது வருவாயில் பாட்டி சொத்தாகிய பிரியமான வீட்டை அவ்வப்போது பழுது பார்த்துக் கொண்டே மூத்தவளை மாயவரத்தில் ஒரு முனிசிபாலிடி கிளார்க்குக்கும், இரண்டாவது மகளைப் பட்டீஸ்வரத்தில் ஒரு சிறிய மளிகைக் கடை சொந்தக்காரரின் ஒரு பிள்ளைக்கும் கட்டி வைத்தார்.

ஒரே மகனான சந்துரு படிப்பில் சமர்த்து. டைப்ரைட்டிங் ஹையர் முடித்து ராஷ்ட்ர பாஷா பாஸாகி பாங்க் பரீட்சை எழுதித் தானே ஒரு வேலையைத் தேடிக் கொண்டான். அவனுக்குப் பெண், அவன் வேலையிலிருக்கும் சென்னையிலிருந்தே தேடி வந்தது. ஆபீஸில் லோன் போட்டுக் கச்சிதமாக ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டு, இரண்டு குழந்தைகளோடு வாழ்கிறான். அனிதா எட்டாவது படிக்கிறாள். ரமேஷ் மூன்றாவது.

முன்பெல்லாம் ஒவ்வொரு லீவிற்கும் பெற்றோரைப் பார்க்க வந்து கொண்டிருந்தவன், வெய்யில், தண்ணீர்ப் பிரச்னை என்றும், பிள்ளைகள் பொழுது போக்கிற்கு டி.வி., பீச் என்று எதுவும் இல்லையென்றும் இப்போதெல்லாம் வருவதேயில்லை. தவிரவும் அவன் மனைவிக்குக் கும்பகோணமும், அந்தக் கொசுக்களும் பிடிக்காமல் போனது இன்னொரு முக்கியமான விஷயம்.

கடைக்குட்டி கௌரிக்கு, கும்பேஸ்வரர் ரிடையர் ஆனவுடனேயே ஓராண்டிற்கு முன்தான் கிரேஜுவிடி, ப்ராவிடெண்ட் ஃபண்ட் எல்லாமும் போட்டு விமரிசையாகத் திருமணம் செய்து வைத்தார். அவள் அழகிற்குச் சில சம்பந்தங்கள் தேடி வந்தும் கூட, அம்முலக்ஷ்மியின் பிரியத்தின் பேரில், பக்கத்திலேயே திருபுவனத்தில் மாப்பிள்ளை பார்த்தார். பையன் கும்பகோணம் தாலுகா ஆபீஸில் கிளார்க். அவன் அப்பாவுக்குப் பட்டு வியாபாரம்.

சென்ற தீபாவளிக்குச் சரியாகச் சீர் செய்யவில்லையென்று பிறந்தகம் அனுப்பப்பட்ட கௌரி வந்து ஆறு மாதமாகிறது.

ஓர் ஐந்து சவரன் இருந்தால் அவளை அனுப்பி வைக்கலாம். ஆனால், அம்முலக்ஷ்மியின் கழுத்தில் கிடந்த வஸ்துவெல்லாம் ஏற்கெனவே அவ்வப்போது பிறந்து கொண்டிருந்த பேரன், பேத்திகளுக்குச் சீர் செய்து போட்டே தீர்ந்து போயிருந்தன. தற்போது ஜீவனம் அவர் வாங்கும் பற்றாக் குறை பென்ஷனில் மட்டுமே.


'கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்—ரிடையர் ஆகிப் போன பழைய வாத்தியாரின் வார்த்தைகளுக்குத் திருபுவனத்தார் மசியவில்லை. 'அவசரமில்லை, கௌரியை நிதானமாக அனுப்புங்கள்' என்று சொல்லி விட்டனர்.


ஆனால், அவ்வப்போது மாப்பிள்ளை மட்டும் அவருடைய வீட்டிற்குத் தெரியாமல் வந்து போய்க் கொண்டுதான் இருந்தார். விளைவு, கௌரி உண்டாகிப் போயிருந்தாள்.

இனியும் தாமதித்தல் கூடாது என்று, இவள் விஷயமாகத்தான் பணம் கேட்டுச் சந்துருவிற்கு மூன்று கடிதங்கள் போட்டு விட்டிருந்தாள் அம்முலக்ஷ்மி.

வீட்டு வாசலில் மாட்டு வண்டி நிற்கும் சத்தம் கேட்கவே வாசலுக்கு ஓடினாள் அம்முலக்ஷ்மி.

வண்டியிலிருந்து சிறிய துணிப்பையோடு பட்டீஸ்வரம் சம்பந்தி சுந்தரமூர்த்தி இறங்கினார்.





மனைவி (எழுத்தாளரிடம்):

"நீங்க சஸ்பென்ஸ் கதைகள் நிறைய எழுதி வாசகர்களைத் திணற அடிச்சிருக்கீங்க, சரி. அதுக்காக, நம்ம பெண்ணோட திருமணப் பத்திரிகையில் முகூர்த்தத் தேதி போடாம அச்சிடப் போறேன்னு அடம்பிடிக்கிறது கொஞ்சங்கூட நல்லா இல்ல...."

— மணியன் தர்மலிங்கம்.

"வாங்கோ... வாங்கோ..." என்று அவரை வரவேற்றாள் அம்முலக்ஷ்மி.

"அப்பா, பிரபாக்கா மாமனார் வந்திருக்கார்" என்று கௌரி அறிவிக்கவும், சாப்பிட உட்கார்ந்த கும்பேஸ்வரர் எழுந்து வந்து, "வாங்க, லெட்டர்கூட போடலியே, எல்லோரும் சௌக்கியந்தானே?" என்றார்.

அதற்குள் அம்முலக்ஷ்மி செம்பில் ஜலம் கொண்டுவந்து, "வாங்க, டிபன் சாப்டுட்டு அப்புறமாப் பேசலாம்" என்றாள்.

"எல்லாம் ஆச்சு, காப்பி போதும்" என்றவர், காப்பி வரவும் சாப்பிட்டார்.

சுந்தரமூர்த்தி பையிலிருந்து ஒரு சிறிய தட்டை எடுத்து அதில் மஞ்சள் தடவிய திருமணப் பத்திரிகை, வெற்றிலை, வாழைப் பழங்களை வைத்துத் தம் பெண் திருமணத்திற்கு அவசியம் இரண்டு நாள் முன்னதாக வந்திருந்து நடத்தித் தர வேண்டும் என்று நீட்டினார்.

பிறகு மாப்பிள்ளை வீட்டாரைப் பற்றியெல்லாம் பேசினார்கள்.

"ருக்மணிக்கு இன்னும் கொஞ்சம் பெரிய இடமாகப் பார்த்திருக்கலாம்" என்றார் கும்பேஸ்வரர்.

"ம்.. வசதியாவது வெண்டைக்காயாவது" என்று சலித்துக் கொண்ட சுந்தரமூர்த்தி, பாண்டிச்சேரியில் இருக்கும் தம் பெரிய பிள்ளையைக்கூட அழைக்கப் போவதில்லை "என்றார்.

"ஏன்?" என்று கும்பேஸ்வரர் ஆச்சரியத்தோடு வினவினார்.

"என் பிள்ளையே இல்லை அவன். தலை முழுகிட்டேன்" என்றார். பிறகு விலாவாரியாக எப்படி அவன் சிறிது சிறிதாகப் பெண்டாட்டிதாசனாக மாறி விட்டான், மருமகள் எப்படியெல்லாம் அவனை ஆட்டிப் படைக்கிறாள்; தம்பி, தங்கை மீதெல்லாம் எப்படி அவனுக்குப் பாசமில்லாமல் போனது, இந்த திருமணத்திற்கென்று எப்படி அவன் ஒரு துரும்பையும் கிள்ளிப் போடாமல் — எடுத்துச் செய்தால் செலவுதான் என்று ஒதுங்கிக் கொள்கிறான். எவ்வளவு ஆசையாகப் பாசத்தைக் கொட்டிச் சொத்தையெல்லாம் விற்றுப் படிக்க வைத்துத் திருமணம் செய்ததற்குக் கிடைத்த பலன் என்ன?— என்பதையெல்லாம் ஒரு பாட்டம் சொல்லித் தீர்த்து — "நன்றியில்லாதவன் பிள்ளையாக இருந்தால் என்ன, பகைவனாக இருந்தால் என்ன? இனி அப்பன் பிள்ளை பேச்சுக்கே இடமில்லை" என்று முடித்தார்.

"அவருக்கு என்ன நிலைமையோ? என்னென்ன சிரமங்களோ? குடும்பம்னு ஆயிட்டது இல்லையா? அதையெல்லாம் நினைக்காமல் வார்த்தைகளைக் கொட்டாதீர்கள்" என்று கும்பேஸ்வரர் கேட்டுக் கொண்டார்.

அவரோ "ம்.... பெத்த மனந்தாங்க பித்து" என்று ஒரே வரியில் சொல்லி, தலைக்கு மேலே வேலை இருக்கிறது. பெற்றதற்குத் தாம் தானே அழுது தீர வேண்டுமென்று சலித்துக் கொண்டே புறப்பட்டார்.

புறப்படும்முன் கௌரியை அழைத்துத் தோட்டத்தில் காய்த்தது என்று கொஞ்சம் விளாம்பழங்களைக் கொடுத்துப் போனார்.

அவர் சென்றதும், "என்னங்க, இப்படி மனம் வெதும்பிப் பேசறாரு. இதுக்கு எதுக்கு பிள்ளைகளைப் பெத்துக்கணும், வளர்க்கணும்?" என்று கணவனைப் பார்த்துக் கேட்டாள் அம்முலக்ஷ்மி.

"இந்த மாதிரி பெத்தவங்க மனம் தவிச்சா அது பிள்ளைகளுக்கு ஆகுமா? இதுவெல்லாம் எப்படி இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குத் தெரியாமல் போகுதோ?" என்று தொடர்ந்து அங்கலாய்த்துக் கொண்டிருந்தவள், நடுநடுவே, "ஏங்க, தபால்காரர் வந்துட்டுப் போயிட்டாரா? குரல் கேட்டுதா? நீங்க கவனிச்சீங்களா?" என்றும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

கௌரி இரண்டு விளாம்பழங்களைக் கொணர்ந்து அம்மாவிடம் கொடுத்து, "அம்மா, அப்பாவுக்கு ரொம்ப பிடிக்குமே, உடைக்கலாமா பாரு" என்றாள்.

அம்முலக்ஷ்மி பழங்களைக் காதருகே கொண்டு சென்று ஆட்டிப் பார்த்து, "ஆமாம், நல்லாப் பழுத்திருக்கு. ஏங்க, சாப்பிடறீங்களா? — சர்க்கரை கலந்து தர்றேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே வாசலில் "போஸ்ட்" என்று குரல் கேட்டது.

கௌரி விரைந்து சென்று வாங்கி, "அம்மா, அண்ணா லெட்டர் போட்டிருக்கார்" என்றபடியே வந்தாள்.

"பார்த்தீங்களா? சொன்னேனில்லே, இன்னிக்கு வரும்னு பட்றதுன்னு. இந்தாங்கோ" என்று கௌரியிடமிருந்து கடிதத்தைப் பெற்று அவரிடம் நீட்டினாள்.

"நீயே படிச்சுச் சொல்லு" என்றார் அவர்.

பிரித்து மனத்துக்குள்ளாகவே படித்த அம்முலக்ஷ்மி, படிக்கப் படிக்கக் கொஞ்சங் கொஞ்சமாக சுவாரஸ்யம் இழந்தாள். அவள் முகத்தில் ஒரு வாட்டம் குடிகொண்டது. ஒன்றுமே பேசாமல் கடிதத்தை அவர் கால்மாட்டில் மடித்து வைத்து விட்டு எழப் போனவளை,

"என்ன விஷயம்... ம்?" என்று வினவினார் கும்பேஸ்வரர்.

முகத்தைத் திருப்பி அவர் பாராவண்ணம்



''என்ன சார் இது? சிறுகதைன்னு சொல்லிட்டு, நாவலை எழுதிட்டு வந்திருக்கீங்களே?''

''சிறுகதை தந்தால், சுருக்கித் துணுக்காப் போடறீங்க! அதான் நாவல் கொண்டாந்துட்டேன்! சுருக்கி சிறுகதையாப் போடுங்க!''

— குத்தாலம் ராஜா.

கண்ணோரங்களை முந்தானையால் ஒற்றிக் கொண்டு, எச்சில் விழுங்கி, ''ஒண்ணுமில்லே... எல்லாம் சௌக்கியமாம். கௌரி எப்படியிருக்கா? வெயில் காலம் வந்துட்டதே உங்க ஆஸ்துமா தேவலாமான்னு கேட்டிருக்கான். கௌரியை டாக்டர்கிட்டே அழைச்சுப் போய் நல்லா கவனிக்கச் சொல்லியிருக்கான்...'' என்றாள்.

எல்லாவற்றிற்கும் ''ம்'' கொட்டிக் கொண்டே வந்த கும்பேஸ்வரர், ஏன் நிறுத்தி விட்டாள் என்று பெரிதாக ஒரு ''ம்'' போட்டார்.

''அப்புறம்... அனிதாவுக்கு ராணி சீதை ஹால்லே அடுத்த மாசம் ஆறாம் தேதி டான்ஸ் அரங்கேற்றம் பண்ணப் போறானாம். அதுக்கு வரச் சொல்லியிருக்கான்.''

''அடடே.... அப்படியா! இதையில்லே முதல்லே சொல்லியிருக்கணும். என் பேத்தி அரங்கேற்றம் அளவுக்கு வந்திட்டாளா?'' பேப்பரை மடித்து விட்டு ஆனந்தமாகச் சிரித்தார்,

''இப்பவே நேரா புறப்பட்டுப் போயிடுவீங்க போலிருக்கே?''

''பின்னே. என் பேத்தி, அந்தச் சின்னப் பொண்ணு ஆடறதை முதல் வரிசையிலே உட்கார்ந்து கண்கொட்டாம பார்க்கறதை விட எனக்கு வேறே என்ன சந்தோஷம் இருக்க முடியும்னு நினைக்கறே? உனக்கு மட்டும் சந்தோஷம் இல்லையா:... ம்...'' மீண்டும் சிரித்தார்.

''உங்களாலே எப்படி சிரிக்க முடியறது?''

''ஏன்?''

''ஏனா? ஏங்க, நான் ராத்திரியும் பகலும் பிரார்த்தனை செய்துகிட்டு என்ன எதிர் பார்த்திட்டிருக்கேன்? அவன் என்ன எழுதியிருக்கான்?''

''என்ன எழுதியிருக்கான்?''

''ஏங்க, அரங்கேற்றம் பண்ணறதுக்கு நிறையச் செலவாகாது?''

''தாராளமா ஆகுமே.''

''அந்தப் பணத்திலே நம்ம கௌரிக்குச் செஞ்சு, அவளைப் புருஷன் வீட்டுக்கு அனுப்பலாமே?''

''ஓஹோ. நீ அப்படிச் சொல்லறியா?''

''நான் சொன்னாப் போறாதுங்க. நீங்க அவங்கிட்ட எடுத்துச் சொல்லணும். புரிய வைக்கணும்.''

மனைவியைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தவர் நிமிர்ந்து உட்கார்ந்து பேசினார்.

''லக்ஷ்மி, நாம அவங்கிட்டே எதிர்பார்க்கிறது தப்பு. அவன் நமக்குக் கடன்பட்டிருக்கிறதா நாம நினைக்கிறது நம்மோட தவறு. பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குறதுதான் பெத்தவங்க கடன். அவனோட பிள்ளைகளுக்குச் செய்யறது அவனோட கடன். அதுலே அவன் தப்புச் செய்தா நாம தலையிடலாம். நமக்கு அவன் செய்யணும்னு எதிர்பார்த்துக்கிட்டே இருக்கிறது நம்மோட பார்வையின் தவறு. நாம அவனை எப்படியெல்லாம் வளர்த்தோமோ, அப்படியெல்லாம் அவன் தன்னோட குழந்தைகளை வளர்க்கறதுதான் அவனோட பொறுப்பு. நம்ம குழந்தைங்க நம்மகிட்டேயிருந்து கத்துக்க வேண்டியதே அவங்க குழந்தைகளுக்கு அவங்க எப்படி செய்யணும்கிறதைத்தான். அதை அவன் முறைப்படி கத்துக்கிட்டதுதான் நம்மோட வெற்றி. அதுதான் இயற்கை.''

''எது? பிள்ளைங்க அவங்க குடும்பத்தை மட்டுமே பார்த்துக்கிறதா?''

''ஆமா, குருவிகளைப் பாரு. தன் குஞ்சுகளுக்கு ஊட்டி, இறக்கை முளைக்கிறவரை பாதுகாத்து, பறக்கக் கத்துக் கொடுத்து அனுப்பிடுது. அதைத் தன்னோட கடமையாக் கருதி அது செய்யுது. குஞ்சுங்ககிட்டேயிருந்து பிரதிபலனா அதுங்க எதையுமே எதிர்பார்க்கலே.''

அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் அம்முலக்ஷ்மி. கும்பேஸ்வரர் குனிந்து அருகிலிருந்த விளாம்பழத்தைக் கையிலெடுத்தார்.

''லக்ஷ்மி, இந்த விளாம்பழமிருக்கே... காயா இருக்கும்போதுதான் அதோட இந்த ஓடு ஒட்டிக்கிட்டிருக்கும். பழுத்ததும் இந்த ஓடு விலகிடுது. நாமும் இந்த ஓடு மாதிரிதான். குழந்தைகளை வளர்த்து ஆளாக்குகிற வரை நாம அவங்களோட ஒட்டி உறவாடணும். அவங்களுக்குன்னு ஒரு குடும்பம் ஏற்பட்டவுடனே இந்த விளாம்பழ ஓடு மாதிரி ஒட்டியும், ஒட்டாமலும் விலகி வாழக் கத்துக்கணும். தெரியுதா? விளாம்பழம் பழுத்துடுத்து லக்ஷ்மி.''

''அப்போ... கௌரியை எப்பிடி... அனுப்பறது?'' என்றாள் கலங்கிய கண்களோடு.

அவளது தோளைத் தட்டிய கும்பேஸ்வரர் வீட்டைச் சுற்றிலும் மேலும் கீழும் ஒவ்வொரு திசையாகப் பார்த்தார்.

நாளுக்கொருதரம் 'என் பாட்டி வீடு, என் பாட்டி வீடு என்று சொல்லிச் சொல்லி மாள்பவர், என்ன இது இப்படி புதிதாகப் பார்க்கிறாரே?' என்று நினைத்தவள், ''என்ன இது? புதுசா வீட்டைப் பார்க்கிற மாதிரி பார்க்கறீங்க?'' என்றாள்.

''இல்லே, வித்தா எவ்வளவு போகும்னு பார்க்கறேன்'' என்றார், அவருக்கே உரிய சிரிப்போடு!

அதி நவீன பட்டு வகைகள்



உங்கள் உலகில் முக்கிய பங்கு
பெறுவது வண்ணங்கள்...
அவைகளின் அழகு ஜாலங்களை
பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு
வகைகளில் உங்களுக்குக்
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

100% கலப்படமற்ற பட்டு
உத்தரவாதமான சரிகை

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை
கைத்தறி வகைகள்.

DPR/1766/MS88/HTA

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள் • இணையில்லா புதுமைகள், எண்ணிலா வகைகள்

பொன்னியின் செல்வன்

மூன்றாம் அத்தியாயம்

பருந்தும் புறாவும்

ஆதித்த கரிகாலன் சுட்டிக் காட்டிய திசையில் ஆற்றங்கரை மண்டபம் ஒன்று இருந்தது. அது கல் வேலையினால் ஆன மண்டபம். வழிப் போக்கர்கள் வெயிலிலும் மழையிலும் தங்குவதற்காக யாரோ தர்மவான் அதைக் கட்டியிருக்க வேண்டும். அந்த மண்டபம் வெயிலிலும் மழையிலும் வெகுகாலம் அடிபட்டு முதுமையின் அறிகுறிகளைக் காட்டிக் கொண்டிருந்தது. மண்டபத்தின் முனைகளில் சிற்ப வேலைப்பாடு உடைய உருவங்கள் சில காணப்பட்டன. அவை இன்னவை என்று கிழவராகிய மலையமானுக்குத் தெரியவில்லை.

''பார்த்தீர்களா, தாத்தா!'' என்றான் ஆதித்த கரிகாலன்.

''குழந்தாய்! அந்த மண்டபத்தைத் தானே சொல்லுகிறாய்? அதில் வேறு ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே? மண்டபமும் வெறுமையாகத்தான் இருக்கிறது. அதில் யாரும் இருப்பதாகக் காணவில்லையே!'' என்றார்.

''தாத்தா! உங்களுக்கு வயதாகி விட்டது என்று இப்போதுதான் எனக்கு நன்றாய்த் தெரிகிறது. அதனால் கண் பார்வை குன்றியிருக்கிறது. அதோ பாருங்கள்! ஒரு பெரிய இராஜாளி! எத்தனை பெரிது? அதன் சிறகுகள் எவ்வளவு விசாலம்? கொடுமை! கொடுமை! அது தன் கால்களில் ஒரு சின்னஞ்சிறு புறாவைப் பிடித்துக் கொண்டிருக்கிறதே. தெரியவில்லையா? இராஜாளியின் கூரிய நகங்கள் கிழித்துப் புறாவின் இரத்தம் சிந்துகிறதே, தெரியவில்லையா? கடவுளே! இது என்ன விந்தை! அதோ இன்னொரு புறாவைப் பாருங்கள், தாத்தா! அந்தப் பயங்கரமான இராஜாளியின் அருகில் வட்டமிடுகிறது! அது இராஜாளியிடம் எப்படிக் கெஞ்சுகிறது? இராஜாளியின் கால்களில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் புறா அதனுடைய காதலனாக இருக்க வேண்டும்! காதலனுக்கு உயிர்ப் பிச்சை கொடுக்கும்படி அது கெஞ்சுகிறது! தாத்தா! அந்தப் புறா கெஞ்சுகிறதா? அல்லது இராஜாளியிடம் சண்டைக்குப் போகிறதா? இறகை அடித்துக் கொள்வதைப் பார்த்தால் சண்டைக்குப் போவதாகவே தோன்றுகிறது. கடவுளே! அந்தப் பெண் புறாவுக்கு என்ன தைரியம் பாருங்கள்! இராஜாளியுடன் சண்டைக்குப் போகிறது! காதலனுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக அந்தப் பயங்கர ராட்சதனுடன்

அமரர் கல்கி

போராடப் போகிறது! தாத்தா! இராஜாளி மனம் இரங்கும் என்று நினைக்கிறீர்களா? இரங்காது! இரங்காது! ஒருநாளும் இரங்காது! இம்மாதிரி எத்தனையோ புறாக்களை அது கொன்று தின்று கொழுத்துக் கிடக்கிறது! சண்டாள இராஜாளியே! இதோ உன்னைக் கொன்று போடுகிறேன்!'' என்று கூறிக் கொண்டே ஆதித்த கரிகாலன் பக்கத்தில் கிடந்த ஒரு கூழாங் கல்லை எடுத்து வீசி எறிந்தான். அந்தக் கூழாங்கல் மண்டபத்தை நோக்கிச் சென்று அதன் ஒரு முனையில் பட்டு விட்டுக் கீழே விழுந்தது.

ஆதித்த கரிகாலன், ''ராட்சதனே! உனக்கு நன்றாய் வேண்டும்!'' என்று சொல்லிவிட்டு, இடி இடி என்று பயங்கரமாகச் சிரித்தான்.

பேரப் பிள்ளையின் சித்த சுவாதீனத்தைப் பற்றி ஏற்கெனவே கிழவருக்குச் சிறிது சந்தேகம் இருந்தது. அது இப்போது இன்னும் அதிகமாயிற்று.

''தாத்தா! ஏன் என்னை இப்படி வெறித்துப் பார்க்கிறீர்கள்? மண்டபத்தின் அருகில் போய்ப் பாருங்கள்!'' என்றான் கரிகாலன்.

அவ்விதமே மலையமான் மண்டபத்தைச் சற்று நெருங்கிச் சென்று கரிகாலனின் கல் விழுந்த இடத்தை உற்றுப் பார்த்தார். அங்கே ஒரு சிற்பம் காணப்பட்டது. அந்தச் சிற்பத்தில் இராஜாளி ஒன்று தன் கால் நகங்களில் ஒரு புறாவைக் கொத்தித் தூக்கிக் கொண்டிருப்பது போலவும், இன்னொரு புறா அந்த இராஜாளியின் மீது கோபத்துடன் பாயப் போவது போலவும் தத்ரூபமாக அமைக்கப் பட்டிருந்தது.

மலையமான் திரும்பி வந்து, ''குழந்தாய்! எனக்கு வயதாகி விட்டது என்பது உண்மைதான்! கண் பார்வை முன் போல் துல்லியமாக இல்லை. அருகில் சென்று உற்றுப் பார்த்த பிறகு தான் தெரிந்தது. நல்ல சிற்ப வேலை!'' என்றார்.

''நல்ல சிற்ப வேலையா? சிற்ப அற்புதம் என்று சொல்லுங்கள், தாத்தா! மகேந்திர வர்மர் — மாமல்லர் காலத்துச் சிற்ப சக்கரவர்த்தி யாரோ ஒருவன் இதையும் செய்திருக்க வேண்டும்! முதலில் பார்த்ததும் உண்மையாகவே நடப்பது போலவே எனக்குத் தோன்றிவிட்டது!'' என்றான் கரிகாலன்.

''ஆதித்தா! அற்புதம் அந்தக் கல்லிலே மட்டும் இல்லை! உன் கண்ணிலும் இருக்கிறது; உன் மனத்திற்குள்ளேயும் இருக்கிறது. இந்த வழியாக எவ்வளவோ பிரயாணிகள் தினந்தோறும் போகிறார்கள். அவர்களில் முக்கால்வாசிப் பேர் இந்தச் சிற்ப அற்புதத்தைக் கவனித்துக்கூட இருக்க மாட்டார்கள். மற்றும் பலர் பார்த்தும் பார்க்காதது போலவே போய் விடுவார்கள். உன்னைப் போல் ஒரு சிலர் தான் ஒரு சிற்பத்தைப் பார்த்து இவ்வளவு ஆச்சரியப்படுவார்கள்!...''

''நான் ஆச்சரியப்படவில்லை, தாத்தா! கோபப்படுகிறேன். அந்தச் சிற்பத்தை இப்போதே இடித்துத் தள்ளிவிட வேண்டுமென்று எனக்கு ஆத்திரம் உண்டாகிறது. இவ்வளவு கொடூரமான சிற்பத்தை அமைத்தவனை அதிகமாகப் புகழ்ந்து பாராட்டுவது கூட எனக்குப் பிடிக்கவில்லை!...''

''கரிகாலா! இது என்ன விந்தை! உன்னுடைய வைர நெஞ்சு எப்போது இவ்வளவு இளக்கம் கொடுத்தது? இராஜாளி புறாவைக் கொன்று தின்பது அதனுடைய இயற்கை. சிங்க ராஜா ஆட்டினிடம் இரக்கம் கொள்ள ஆரம்பித்தால் அது சிங்க ராஜா அல்ல; அதுவும் ஆடாகத்தான் போய் விடும். சிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசு புரிய ஆசைப்படுகிறவர்கள் பகைவர்களையும் சதிகாரர்களையும் கொன்றுதான் ஆக வேண்டும். சக்கரவர்த்தியாயிருந்து உலகை ஒரு குடை நிழலில் ஆளப் பிறந்தவர்கள் பகையரசர்களைக் கொன்றுதான் தீர வேண்டும். இராஜாளி புறாவைக் கொல்லாவிட்டால், அது இராஜாளியாயிருக்க முடியுமா? இதைப் பற்றி ஏன் உனக்கு இவ்வளவு கலக்கம்?'' என்றார் மலையமான்.

''தாத்தா! நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான்! ஆனால் அந்தப் பெண் புறா அப்படித் தவிப்பதைப் பார்த்த பிறகு இராஜாளிக்கு இரக்கம்

வரவேண்டாமா? பெண்ணுக்கு இரங்கி ஆணை விடுதலை செய்ய வேண்டாமா? ஐயா! நீங்களே சொல்லுங்கள். உங்கள் பகைவன் ஒருவனை நீங்கள் கொல்லப் போகும் சமயத்தில்அவனுடையகாதலிகுறுக்கேவந்து புருஷனுக்கு உயிர்ப் பிச்சை கேட்டால் என்ன செய்வீர்கள்? அப்போது உங்கள் மனம் இரங்காமலிருக்குமா?'' என்று கரிகாலன் கேட்டான்.

''அப்படி ஒரு பெண் குறுக்கே வந்தால் அவளை என் இடது காலினால் உதைத்து விட்டு என் பகைவனைக் கொல்லுவேன். கரிகாலா! அதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. பகைவர்கள் 'தொழுத கையினில்' ஆயுதம் வைத்திருப்பார்கள் என்றும், அவர்கள் 'அழுத கண்ணீரிலும்' ஆயுதம் மறைந்திருக்கும் என்றும் வள்ளுவர் கூறியிருக்கிறார். ஆண்களின் கண்ணீரைக் காட்டிலும் பெண்களின் கண்ணீர் அபாயமானது. ஏனெனில், பெண்களின் கண்ணீருக்கு இளகச் செய்யும் சக்தி அதிகம் உண்டு. அப்படி மனத்தை இளக விட்டு விடுகிறவனால் இவ்வுலகில் பெரிய காரியம் எதையும் செய்ய முடியாது. அவன் பெண்களிலும் கேடு கெட்டவனாவான்!''

''தாத்தா! இது என்ன? பெண்களைப் பற்றி ஏன் நீங்கள் இவ்வளவு குறைவாகப் பேசுகிறீர்கள்! பெண்களைப் பற்றிக் குறைவாய்ப் பேசுவது என் தாயாரையும் குறைவு படுத்துவதாகாதா?...''

''குழந்தாய்! கேள்! உன் தாயாரிடம் நான் வைத்திருந்த அன்புக்கு இந்த உலகத்தில் இணை ஒன்றுமே இல்லை. எனக்கு ஆறு மகன்கள் பிறந்தார்கள். பீமனையும்அர்ச்சுனனையும் ஒத்த வீரர்களாய் வளர்ந்தார்கள். அவ்வளவு பேரையும் யுத்தகளத்தில் பலிகொடுத்து விட்டேன். அவர்கள் இறந்த செய்தி வந்த போதெல்லாம் நான் வருத்தப்படவில்லை. ஆனால் உன் தாயாரை மணம் செய்து கொடுத்து அனுப்பி வைத்த போது, அவள் சாம்ராஜ்ய சிங்காதனத்தில் அமரப் போகிறாள் என்று தெரிந்திருந்தும் என் மனம் அடைந்த வேதனையைச் சொல்ல முடியாது. ஆனால் அந்த வேதனையை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டேனா? இல்லை! அவளிடந்தான் வெளியிட்டேனா? அதுவும் இல்லை! உன் தாயை மணம் செய்து கொடுப்பதற்கு முதல் நாள் அவளைத் தனியாக அழைத்து என்ன சொன்னேன் தெரியுமா? கேள், கரிகாலா! 'மகளே! மாநிலம் புரக்கப் போகும் மன்னனை நீ மணந்து கொள்ளப் போகிறாய்! அதற்காகக் கர்வங்கொள்ளாதே! மன்மதனையொத்த சுந்தர புருஷனை நீ மணந்து கொள்ளப்போகிறாய்! அதற்காகவும் நீ கர்வம் அடையாதே! அவ்வளவு புகழ் வாய்ந்த கணவனை மணந்து கொள்வதினால் உனக்குக் கஷ்டந்தான் அதிகமாயிருக்கும். உன் அரண்மனையில்பணிசெய்யும்பணிப் பெண்கள் பலரும் உன்னைக் காட்டிலும் சந்தோஷமாயிருப்பார்கள். துக்கப்படுவதற்கும் வேதனைப்படுவதற்கும் உன்னை நீ ஆயத்தம் செய்து கொள்! உனக்குக் குழந்தைகள் பிறக்காவிட்டால் உன் புருஷன் வேறு ஸ்திரீகளைக் கட்டாயம் மணந்து கொள்வான். அதை நினைத்து நீ வேதனைப்படக் கூடாது. உனக்கு மக்கள் பிறந்தால் அவர்களை வீர மக்களாய் நீ வளர்க்க வேண்டும். அவர்கள் போர்க்களத்தில் உயிர் விட்டதாகச் செய்தி வந்தால் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடக் கூடாது. உன் கணவன் சந்தோஷமாயிருந்தால் நீயும் சந்தோஷமாயிரு! உன் புருஷன் துக்கப்பட்டால் நீ அவனைச் சந்தோஷப் படுத்தப் பார்! உன் பதி நோய்ப்பட்டால் நீ அவனுக்குப் பணிவிடை செய்! உன் கணவன் இறந்தால் நீயும் அவனுடன் உடன்கட்டை ஏறி விடு! உன் நெஞ்சில் உதிரம் கொட்டினாலும் உன் கண்களில் மட்டும் கண்ணீர் சொட்டக் கூடாது! மலையமான் வம்சத்தில் பெண்களுடைய குலாச்சாரம் இது!' என்று இவ்விதம் உன் அன்னைக்குப் புத்திமதி கூறினேன். அம்மாதிரியே உன் அன்னை இன்று வரை நடந்து வருகிறாள்; நடத்தி வருகிறாள். கரிகாலா! உன்னையும் உன் சகோதரனையும் இணையில்லாத வீரர்களாக வளர்த்து வந்திருக்கி

றாள். உன் தந்தை நோய்ப்பட்ட பின்னர் இரவு பகல் அவர் பக்கத்திலிருந்து அவளே எல்லாப் பணிவிடைகளையும் செய்து வருகிறாள். உன் அன்னையை என் மகளாகப் பெற்றதை நினைக்கும்போதெல்லாம் என் தோள்கள் பூரிக்கின்றன!'' என்றார் மலையமான்.

''தாத்தா! என் தாயை நினைக்கும்போதெல்லாம் நான் அடையும் பெருமிதத்துக்கும் அளவில்லை. ஆனால் ஒன்று கேட்கிறேன், சொல்லுங்கள்! என் தந்தையின் கொடிய பகைவன் ஒருவன் அவரைக் கொல்லுவதற்குக் கத்தியை ஓங்கிக் கொண்டு வருவதாக வைத்துக் கொள்ளுங்கள். என் தாயார் அப்பொழுது என்ன செய்வாள்? முன்னால் நின்று கண்ணீர் பெருக்கிக் கணவனைக் காப்பாற்றும்படி அப் பகைவனை வேண்டிக் கொள்வாளா? முக்கியமாக, அப்படி வருகிற பகைவன் என் அன்னைக்குத் தெரிந்தவனாகவும் இருந்து விட்டால்...''

''குழந்தாய்! உன் தாயார் ஒரு நாளும் அப்படிப் பகைவனிடம் உயிர்ப் பிச்சை கேட்க மாட்டாள். மலையமான் மகள் அவ்விதம் ஒருகாலும் தான் பிறந்த குலத்தையும் புகுந்த குலத்தையும் அவமானப்படுத்த மாட்டாள். அவளுடைய புருஷனுடைய பகைவனைத் தனக்கும் கொடிய பகைவனாகவே கருதுவாள். பகைவன் முன்னால் கைகூப்ப மாட்டாள்; கண்ணீரும் விட மாட்டாள். கணவன் உயிர் துறந்தால் உடனே அவன் மீது விழுந்து தானும் உயிரை விடுவாள்! அல்லது மனத்தைக் கல்லாகச் செய்து கொண்டு உயிரோடிருப்பாள்; பகைவனைப் பழிக்குப் பழி வாங்குவதற்காக மட்டுமே உயிரை வைத்துக் கொண்டிருப்பாள்!''

இதைக் கேட்ட ஆதித்த கரிகாலன் ஒரு நெடிய பெருமூச்சு விட்டு, ''தாத்தா! நான் போய் வரவா?'' என்றான்.

''அவசியம் போகத்தான் வேண்டுமா?''





''அதைப் பற்றி இன்னும் என்ன சந்தேகம், தாத்தா! பாதி வழிக்கு மேலே வந்தாகி விட்டதே!''


''ஆம்; பாதி வழிக்கு மேல் வந்தாகி விட்டது. நானும் முதலில் உன்னைப் போக வேண்டாம் என்றேன். அப்புறம் போகும்படி சொன்னேன். உன் தம்பியைப் பற்றிய செய்தி கேட்ட பிறகு நீ போவதே நல்லது என்று தீர்மானித்தேன். அருள்மொழிவர்மன் இறந்திருப்பான் என்று நான் நம்பவில்லை....''

''நானும் அதை நம்பவில்லை...''

''உன் தந்தையின் இளம்பிராயத்தில் சில காலம் அவர் இருக்குமிடம் தெரியாமலிருந்தது. அது போல் அருள்மொழியும் ஏதேனும் ஒரு தீவில் ஒதுங்கியிருப்பான். சில நாளைக்கெல்லாம் வந்து சேர்வான் என்றே நம்புகிறேன்! ஆனாலும் அச்செய்தி சோழ நாடெங்கும் கொந்தளிப்பை உண்டாக்கி விட்டிருக்கிறது என்று அறிகிறேன். உன் பெற்றோர்களும் கவலையில் ஆழ்ந்திருப்பார்கள். இச்சமயம் அவர்கள் பக்கத்தில் இருந்து நீ ஆறுதல் சொல்லுவது அவசியம். அப்படிப் போகும் போது பழுவேட்டரையர்களின் விரோதியாகப் போவதைக்காட்டிலும்சிநேகமாகப்போவது நல்லது. ஆகையினால்தான் நீ சம்புவரையர் அழைப்புக்கு இணங்கிப் போவதற்குச் சம்மதித்தேன். அவன் வேண்டுமென்றே என்னை அழைக்கவில்லை. அழைத்திருந்தால் நானும் வந்திருப்பேன்......''

''தாத்தா! எனக்காக அவ்வளவு தூரம் நீங்கள் பயப்படுகிறீர்களா? என்னை அவ்வளவு கையினாலாகாதவன் என்று எண்ணி விட்டீர்களா?'' என்று கேட்டான் கரிகாலன்.

''இல்லை, தம்பி! இல்லை! நீ எத்தகைய வீராதி வீரன் என்பது எனக்குத் தெரியாதா? கொடிய ஆயுதங்களைத்



"எதுக்கு இவ்வளவு உயரமான கொடி கம்பம்...?"

"தலைவர் ஹெலிகாப்டர்ல வரும் போது அப்படியே கொடி ஏத்திடலாம்னு ஏற்பாடு...!"

— ஏ. ஆர். வீரராகவன்.

தரித்த பதினாயிரம் பகைவர்களின் நடுவில் நான் உன்னைத் தன்னந்தனியாக நம்பி அனுப்புவேன். ஆனால் கண்ணீர் பெருக்கி உன் மனத்தைக் கலங்கச் செய்யக் கூடிய ஒரு பெண்ணின் முன்னால் உன்னைத் தனியாக அனுப்புவதற்கு மட்டும் பயப்படுகிறேன்......"

"சம்புவரையர் மகள் அப்படியெல்லாம் ஜால வித்தையில் தேர்ந்தவள் என்று நான் கேள்விப்படவில்லை! தாத்தா! ஆண் மக்கள் முன்னால் வருவதற்கே அஞ்சக்கூடிய பெண்ணாம் அவள். கந்தமாறன் சொல்லியிருக்கிறான். நானும் அப்படியெல்லாம் அவசரப்பட்டுத் தாய் தந்தையர் சம்மதம் இல்லாமல் ஒரு காரியத்தைச் செய்துவிட மாட்டேன். உங்களுடைய பழங்குடியில் பிறந்த இரண்டு பெண்கள் இன்னும் மணமாகாமல் இருக்கிறார்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்......"

"ஆதித்தா! அதைப் பற்றிச் சிந்தனையே எனக்கு இல்லை. என் மூத்த மகனுடைய பெண்கள் இரண்டு பேர் திருமணப் பிராயம் வந்தவர்கள் இருக்கிறார்கள்தான். ஆனால் அவர்களை உன் கழுத்தில் கட்டும் எண்ணம் எனக்குச் சிறிதும் இல்லை. ஏற்கெனவே சோழ நாட்டுச் சிற்றரசர்கள் பலரும் என்மீது பொறாமையும் பகைமையும் கொண்டிருக்கிறார்கள். இதுவும் வேறு சேர்ந்து விட்டால் கேட்க வேண்டியதில்லை. அதற்குப் பதிலாகச் சம்புவரையர் மகளையே நீ கட்டிக் கொண்டால் நான் ஒருவாறு திருப்தி அடைவேன். எனக்கோ வயது அதிகமாகி விட்டது. உடல் தளர்ந்து விட்டது. சில சமயம் உள்ளமும் நெகிழ்ந்து விடுகிறது. மறுபடியும் என் அருமைப் பேரனைக் காண மாட்டேனோ, இதுதான் உன்னை நான் பார்ப்பது கடைசிமுறையோ என்றெல்லாம் சில சமயம் எண்ணிக் கொள்கிறேன். இனிமேல் என்னால் உனக்கு உதவி எதுவும் இல்லை. புதிய சிநேகிதர்கள் சிலர் உனக்கு அவசியம் வேண்டும். உன் விஷயத்தில் சிரத்தை கொள்ளக் கூடியவர்கள் வேண்டும். ஆகையால் சம்புவரையர் மகளை நீ மணந்து கொண்டால் நான் உண்மையில் மகிழ்ச்சியே அடைவேன்."

"தாத்தா! உங்கள் மகிழ்ச்சிக்காகக் கூட அதை நான் செய்ய முடியாது. சம்புவரையர் மாளிகைக்கு நான் விருந்தாளியாகப் போவது அவருடைய சிநேகத்தை விரும்பியும் அல்ல; அவர் மகளை மணம் புரியவும் அல்ல. நீங்கள் அதுபற்றி நிம்மதியாயிருக்கலாம்."


"அப்படியானால் எதற்காகப் போகிறாய், குழந்தாய்! என்னிடம் உண்மையைச் சொல்லக் கூடாதா? உன்னுடைய நண்பர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததில் சில வார்த்தைகள் அவ்வப்போது என் காதில் விழுந்தன. பெரிய பழுவேட்டரையன் அறுபது வயதுக்கு மேல் கல்யாணம் செய்து கொண்டானே, அந்த மோகினிப் பிசாசு உனக்கு ஓலை அனுப்பியிருக்கிறாள் என்றும், அதனாலேதான் நீ கடம்பூர் வரச் சம்மதித்தாய் என்றும் அவர்கள் பேசிக் கொண்டார்கள், அது உண்மையா?"

"ஆம், தாத்தா! அது உண்மைதான்!" என்றான் ஆதித்த கரிகாலன்.

"கடவுளே! இது என்ன காலம்? கரிகாலா! நான் சொல்வதைக் கேள். நீ பிறந்த சோழ குலம் இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழையடி வாழையாக வந்து பெருமை பெற்ற குலம். உன்னுடைய மூதாதைகள் சிலர் உலகத்தை ஒரு குடையில் ஆண்ட சக்கரவர்த்திகளாயிருந்திருக்கிறார்கள். சில சமயம் உறையூரையும் அதன் சுற்றுப்புறத்தையும் மட்டும் ஆண்ட

ஆம்ப்ரோ மில்க் பேஸ்

ஸ்கூல் குழந்தைகளின் பிஸ்கெட்



பாலில் உள்ள எல்லா ஊட்டச்சத்துக்களும் அடங்கியது.



அவன்: பெட்டிக்கடை ராமசாமி உன்னை உதைத்ததற்கு வெயில்தான் காரணமா...?

இவன்: ஆமாம்! ஐஸ் சர்பத் குடித்த வகையில் அவனுக்கு நான் 537 ரூபாய் தரணும்!

— உ. ராஜாஜி

குறுநில மன்னர்களாயிருந்திருக்கிறார்கள். சிலர் ஏகபத்தினி விரதங் கொண்டு இராம பிரானைப் போல் இருந்ததுண்டு. சில பல தாரங்களை மணம் செய்து கொண்டு வீரப் புதல்வர்கள் பலரை ஈன்றதுண்டு. சிலர் சிவபக்தர்கள்; சிலர் திருமாலின் பக்தர்கள். சிலர் 'சாமியுமில்லை; பூதமுமில்லை' என்றும் சொல்லி வந்தவர்கள். ஆனால் அவர்களில் யாரும் தங்கள் நடத்தையில் களங்கமுண்டாக்குமாறு நடந்ததில்லை. பிறன் மனை விழைந்ததில்லை. குழந்தாய்! கன்னிப் பெண்களாயிருப்பவர்கள் எத்தனை பேரை வேண்டுமானாலும் மணந்து கொள். உன் பாட்டனின் தந்தை — புகழ்பெற்ற பராந்தக சக்கரவர்த்தி, ஏழு பெண்களை மணந்து கொண்டார். அவரைப் போல் நீயும் மணந்து கொள். ஆனால் பெரிய பழுவேட்டரையனை மணந்து கொண்ட மாயமோகினியைக் கண்ணெடுத்தும் பாராதே!''

''மன்னிக்க வேண்டும் தாத்தா! அந்த மாதிரி குற்றம் ஒன்றும் நான் செய்ய மாட்டேன். சோழ குலத்துக்கும் மலையமான் குலத்துக்கும் களங்கம் உண்டு பண்ண மாட்டேன்!''

''அப்படியானால் அவள் அழைப்புக்காக ஏன் போகிறாய், குழந்தாய்?''

''உண்மையை உங்களிடம் சொல்லி விட்டே போகிறேன். அவளுக்கு ஒரு சமயம் நான் ஒரு பெரிய தீங்கு செய்தேன். அதற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளப் போகிறேன்!'' என்றான் கரிகாலன்.

''இது என்ன வார்த்தை? ஒரு பெண்ணிடம் நீ மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவாவது? என் காதினால் கேட்கச் சகிக்கவில்லையே?'' என்றார் மலையமான்.

ஆதித்த கரிகாலன் சிறிது நேரம் தலை குனிந்த வண்ணமாக இருந்தான். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பாட்டனாரிடம் பழைய வரலாற்றை ஒருவாறு கூறினான். வீர பாண்டியனைத் தான் தேடிச் சென்று அவன் ஒளிந்திருந்த இடத்தைக் கண்டுபிடித்ததையும், நந்தினி குறுக்கிட்டு உயிர்ப்பிச்சை கேட்டதையும், தான் அதைக் கேட்காமல் ஆத்திரப்பட்டு அவனைக் கொன்றதையும், அது முதல் தன் மனம் நிம்மதியில்லாமல் அலைப்புறுவதையும் பற்றி விவரமாகக் கூறினான்.

''அந்த ஞாபகம் என்னை ஓயாமல் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறது, தாத்தா! அவளை ஒரு தடவை பார்த்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் தான் என் மனம் நிம்மதி அடையும். அவளும் போனதையெல்லாம் மறந்து விடத் தயாராயிருப்பதாகக் காண்கிறது. இராஜ்யத்தில் குழப்பம் விளையாமல் பார்த்துக் கொள்வதிலும் சிரத்தை கொண்டிருக்கிறாள். அதற்காகவே என்னை அழைத்திருக்கிறாள். போகும் காரியத்தை முடித்துக் கொண்டு வெகு சீக்கிரமாகவே காஞ்சிக்குத் திரும்பி விடுவேன், தாத்தா! திரும்பி வந்ததும் என் தம்பியைக் கண்டுபிடித்துக் கொண்டு வருவதற்காகக் கப்பல் ஏறிப் புறப்படுவேன்'' என்றான் ஆதித்த கரிகாலன்.

கிழவர் மலையமான் ஒரு பெருமூச்சு விட்டு, ''இதுவரையில் விளங்காமலிருந்த பல விஷயங்கள் இப்போது எனக்கு விளங்குகின்றன. இன்று வரை மர்மமாக இருந்த பல காரியங்கள் அர்த்தமாகின்றன. விதியை வெல்ல யாராலும் முடியாது என்பது நிச்சயந்தான்!'' என்றார்.

(தொடரும்)

எதிரொலிகள்

கோபிக்குக் கால் முன்னால் எழவில்லை. திகைப்பு. அன்னியக் காட்சி. யார் இவள்? அவளை அவ்வீட்டில் அதற்கு முன் அவன் பார்த்ததில்லை. மேலும், அபரிமித அழகு என்பதே ஓர் ஆச்சரியம். பழகியவர்களையே கூட ஓர் அகஸ்மாத்தில் மலைத்து நிற்க வைத்துவிடும்.

வீட்டுக்காரம்மாள் ஹாலுக்குள் நுழைந்த போது வாசற்கதவருகில் அவனைப் பார்த்தாள்.

''மிஸ்டர் கோபாலன், ஏன் அங்கேயே நிக்கறீங்க? உள்ளே வாங்க'' என்று வரவேற்ற பின், ''இவள் என் தங்கை சாரதா. மதுரையிலேர்ந்து வந்திருக்கா. இவ புருஷன் கே. நடராஜன் அங்கே ஒரு பெரிய பிரைவேட் கம்பெனியில் வேலை பார்க்கிறார். சாரு, இவர் மிஸ்டர் கோபாலன். உன் அத்தானுடைய ஃப்ரெண்ட். அவர் ஆபீஸ்லதான் இவருக்கும் உத்தியோகம்'' என்று அறிமுகம் செய்வித்தாள்.

''வணக்கம்'' என்று குவிந்த கோபியின் கைகள் லேசாய் நடுங்கின.

சாரதா அசைந்தாள். அதுவே ஓர் உலக மகா அதிசயம் போல் இருந்தது. திரும்பியவன் எதிரே பார்த்துப் பதில் வணக்கம் செய்த போது கோபியின் விழிப் பரவசம் அவள் அழகுக்குச் சாட்சியாய் நின்றது.

''மூர்த்தி வீட்ல இருக்கானில்ல மிஸஸ் மூர்த்தி?'' என்று கேட்டுக் கொண்டே கோபி ஹாலுக்கு வந்தான்.

''இருக்காரே! மாடியில் இருக்கார். இதோ வரச் சொல்றேன். நீங்க ரெண்டு பேரும் உட்கார்ந்து பேசிக்கிட்டிருங்க'' என்று கூறி மூர்த்தியின் மனைவி உள்ளே சென்றாள்.

இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள். கோபியின் கண்கள் எதிரிலிருந்த உருவத்தையே தொழுதன. அதனால் சிறிதும் பாதிக்கப்படாமல் — ஒருகால் அதைக் கவனிக்காமலே கூட — சாரதா மௌனமாய் அமர்ந்திருந்தாள்.

''மதுரையில் நீங்க எங்கே இருக்கீங்க?'' என்றான் கோபி.

அவள் நிமிர்ந்து நோக்கினாள். பதில் சொன்னாள். எல்லாம் மனம் ஒட்டாத செயல்கள் போல் தோன்றின. அவள் அங்கே இருந்ததே ஏதோ தற்செயலாய் நிகழ்ந்ததைப் போன்ற தோரணையில் அவள் காணப்பட்டாள். தன் நீண்ட வாளிப்பான உடலும் அதன் மாசுமறுவற்ற சந்தன நிறமும் தலைக்குப் பின்னே ததும்பும் அடர்ந்த பெரிய கொண்டையும் ஜன்னல் காற்றில் லேசாய் அசையும் நீலச் சேலையின் முன்றானையும் தன்னை உருவாக்கிக் காட்டி விட முடியாது என்று வேறொரு பரிமாணத்திலிருந்து உணர்த்துபவள் போல் அவள் உட்கார்ந்திருந்தாள்.

ஏதோ பேசினார்கள். அவன் தன் பேச்சின் வெளியே நின்று அவளைக் கண்களுக்கு அனுபவமாக்கிக் கொண்டிருந்தான். மிஸஸ்; மாற்றான் மனைவி. மனம் அவ்வப்போது சம்பிரதாயமாய் ஆட்சேபித்தது.

மூர்த்தி மனைவி தொடர அறைக்குள் வந்தான். ''வா கோபி. என் ஸிஸ்டர்—இன்—லாவை மீட் பண்ணினியா? அவள் பெரிய ஸோஷியல் ஒர்க்கர், தெரியுமா...? கமலா, எல்லாருக்கும் காப்பி கொண்டு வரச் சொல்லேன்.''

சமையற்காரப் பையன் தட்டில் வைத்துக் காப்பி தம்ளர்களை எடுத்து வந்த போது, சாரதாவும் எழுந்து அவற்றை விநியோகிப்பதில் சகோதரிக்கு உதவினாள்.

''நாங்க பேசிக்கிட்டிருந்தப்ப, தான் ஒரு ஸோஷியல் ஒர்க்கர்னு மிஸஸ் நடராஜன் சொல்லவே இல்லையே!'' என்றான் கோபி.

''என்னை மிஸஸ் நடராஜன்னு குறிப்பிட வேண்டாம். எங்கப்பா, அம்மா எனக்கு வச்ச பேர் சாரதா.''

கோபி துணுக்குற்றான். இது என்ன பேச்சு? இதுவரை ஏதோ நிழலுக்குக் குரல் வந்தது போல் பேசியிருந்தவள் இப்போது ஒரு கத்திக் கூர்மையுடன் இதைச் சொன்னாள். கமலாவும் மூர்த்தியும் ஒரு சங்கடத்துடன் அவளை ஏறிட்டுப் பார்த்தார்கள்.


''வெளி மனுஷங்களெல்லாம் உன்னைச் சாரதான்னா கூப்பிடுவாங்க? மிஸஸ் நடராஜன்னு சொல்றதுதான் முறை'' என்று கமலா தங்கையைத் தீவிரமாய்ப் பார்த்தவாறு கூறினாள்.

சாரதா ஒரு புன்னகையுடன் மௌனமானாள். புன்னகைகள் பல ரகம் என்று கோபி இப்போது உணர்ந்தான். சில நட்புடன் கதவைத் திறந்து வரவேற்பவை. இதுவோ விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் புன்னகை.

மறுபடியும் உரையாடல்கள். சாரதா அதிகம் கலந்து கொள்ளவில்லை. ஆனால் முழுக்க மௌனமாகவும் இல்லை. அங்கங்கே ஒரு வார்த்தை, ஒரு வாக்கியம். நேர்க் கேள்விகளுக்குச் சுருக்கமான பதில்.

''ஹலோ அங்கிள்!''

ஆர். சூடாமணி



மூர்த்தி — கமலா தம்பதியின் பதினான்கு வயது மகள் — ஒரே குழந்தை — நளினி குதித்துக் கொண்டு ஓடி வந்தாள்.

''என்னடி அப்படி ஒரு ஓட்டம், ரேஸ் குதிரையாட்டமா? பொண்ணாய்ப் பிறந்தவளுக்கு அடக்கம் வேணாம்? நாளைக்கே கல்யாணம் ஆகி இன்னொருத்தர் வீட்டுக்குப் போக வேண்டியவ....'' என்று கமலா மகளைக் கடிந்து கொண்டாள்.

''அங்க்கிள், என் சித்தியைப் பார்த்தீங்களா? ரொம்ம்ம்ப அழகாயில்லே?''

கோபி நெளிந்தான். 'ஆமாம் ஆமாம்' என்று அண்டம் எதிரொலிக்க முழங்க

வேண்டும் போல் இருந்தது. நளினி ஓடிப் போய்ச் சாரதாவை நாற்காலியின் பின்புறத்திலிருந்து கட்டிக் கொண்டாள். சாரதா இடது கையை உயர்த்தி அவள் கன்னத்தை மெல்லத் தீண்டித் தன்னுடன் லேசாய் அழுத்திக் கொண்டாள். அந்த அசைவு கூட மிக ஒயிலாய், இணக்கமாய், சுநாதத்தில் எழுந்த ஒரு பிர்க்கா போல் இருந்தது. மீண்டும் கோபி அந்த அழகில் தன்னை இழந்தான். இப்போது சற்றுத் தைரியமாகவே அவளை வெறித்தான். தன்னை மிஸஸ் நடராஜன் என்று அழைக்க வேண்டாமென அவள் சொன்னது சில மானசீகத் தடைகளைத் தளர்த்தி விட்டாற்போல் இருந்தது.

"வெளியே போய்ட்டு வந்தா இப்படியா நேர வந்து மேல விழுவாங்க? உள்ளே போய் முதல்ல கால், கை கழுவிக்க, போ" என்றாள் கமலா மகளிடம்.

"போம்மா, எப்ப பார்த்தாலும் ஏதானும் குத்தம் சொல்லிக்கிட்டு."

"முடி கூட நிறைய வளர்ந்துட்டாப்பல இருக்கே நளினி! கட் பண்ணிக்க நாளாகலே?" என்று மூர்த்தி கேட்டான்.

"இல்லேப்பா, நான் இனிமே ஷார்ட் ஹேர் வச்சுக்கப் போறதில்லே. முடியை நீளமா வளர்த்துக்கிட்டுச் சித்தி மாதிரி கொண்டை போட்டுக்கப் போறேன்."

"அடி செருப்பால! பதினாலு வயசில் கொண்டை போடப் போறாளாம். சித்தி செய்யறதையெல்லாம் நீ செய்யலாமாடி? சிநேகிதி வீட்டுலேர்ந்து திரும்பினவ இன்னும் தெருப்புழுதியைக் கழுவினபாடில்லே. போடி உள்ள! இப்போ எழுந்து வந்தேன்னா தெரியும் சேதி."

"க்கும்" என்று தாயின் அதட்டலுக்கு உதட்டுச் சுழிப்புக் காட்டி விட்டு நளினி உள்ளே போனாள்.

கமலாவின் கோபம் சற்று அளவு மீறினதாகவே கோபிக்குத் தோன்றியது. இந்தக் குடும்பத்தோடு பல ஆண்டுகளாய்ப் பழகுகிறான். கமலாவோ மூர்த்தியோ தம் மகளைக் கடிந்து பேசிக் கேட்டதில்லை. இப்போது இது ஏன்?

"சித்தி செய்யறதையெல்லாம் செய்யறாளாம், கழுதை" என்று முணுமுணுத்த கமலா, முகத்தில் கவலை தெரியச் சகோதரியின் பக்கம் நோக்கினாள். சாரதாவின் அமைதி கலையவில்லை.

"நீ கொஞ்சம் அவளுக்கு எடுத்துச் சொல்லேன் சாரு" என்றாள் கமலா.

"என்னன்னு?"

"பெண்ணாய் லட்சணமாய் இருக்கணும்னுதான், வேறென்ன? இப்படித் தலை தெறிக்க ஓடறது, குதிக்கறது...."

"குழந்தையாயிருக்கிற வரைக்கும்தானே குதிக்க முடியும்?"

"ஏன், சில பெரியவங்க கொஞ்சமாவா குதிக்கறாங்க?" — ஒரு கணம் சகோதரிகளின் பார்வைகள் மோதிக் கொண்டன.

"சாரதாவை ஒரு நல்ல சினிமாவுக்கு அழைச்சிட்டுப் போகலாம்னு இருக்கோம் கோபி. நீ எதை 'ரெகமண்ட்' பண்றே? உனக்குத் தெரியுமா சாரு? கோபி பெரிய சினிமாப் பைத்தியம்" என்று மூர்த்தி சொன்ன போது, பேச்சை மாற்றும் அவனுடைய பரிதாப முயற்சி துல்லியமாய்த் தெரிந்தது. சிலை கூடச் சிரித்து விட்டதா என்ன? அந்தப் புன்னகைக் கீற்றில் கோபி சிக்கி மூச்சுத் திணறினான்.

சமாளித்துக் கொண்டு உணர்வடைந்த போது, "....இல்லையா கோபி? என்ன பதிலையே காணோம்?" என்ற மூர்த்தியின் குரல் திகைப்பூட்டியது. அவன் என்ன கேட்டிருந்தான் கடைசியாக?

நல்ல வேளை, கமலா கணவனுக்குப் பதில் சொன்னாள். "நீங்க சொல்ற படம் எதுவும் எனக்குப் பிடிக்கலே. மாடர்ன்னு பேர் வச்சுக்கிட்டு ஒரு முழு வடிவம் கொடுக்காம கதையை எடுக்கறாங்க."

"முழு வடிவம்னா எப்படிச் சொல்றே? 'அண்ட் தென் தே லிவ்ட் ஹாப்பிலி எவர் ஆஃப்ட்டர்' பாணியா?" என்று மூர்த்தி சிரித்தான்.

"ஏன், என்ன தப்பு? ஏதோ, கஷ்டம் வந்தது, நிவர்த்தியாச்சுன்னா மனசுக்கு ஒரு சந்தோஷம். அந்த நாள் படங்கள்ல புருஷன் பெண்டாட்டிக்குள் மனஸ்தாபம் வரும், பிரிஞ்சு போவாங்க. ஆனா கடைசியில ஒண்ணு சேர்ந்துடுவாங்க. நமக்கும் எழுந்து வரப்ப திருப்தியாயிருக்கும். நான் சொல்றது சரிதானே சாரு?"

சாரதா எழுந்து போய் ஜன்னல் அருகில் நின்று வெளியே தோட்டத்தைப் பார்த்தாள். மழை மெல்லியதாய், சல்லாத் துணியை விரித்தது போல் உதிர்ந்து கொண்டிருந்தது. பிறகு வலுத்தது. செடிகளில் கனகாம்பரத்தின் ஆரஞ்சு நிறமும் வேலியில் படர்ந்திருந்த போகன்வில்லாவின் மஜெந்தா வண்ணமும் யாரோ ஓவியன் தூரிகையால் தீட்டிய வண்ணப் பதிவுகள் போல் பளிரென்று தெரிந்தன.


கோபி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கமலாவும் தங்கையைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்களில் கவலை, இன்னும் ஏதோ ஒன்று. திகைப்பு? கோபம்?

"என் ரூமுக்கு வரியா கோபி? புத்தகத்தை வாங்கிக்கலாம்..." என்று மூர்த்தி நண்பனை அழைத்தான். தான் அவனிடமிருந்து ஒரு நூலகப் புத்தகத்தை இரவல் வாங்கத்தான் அவனிடம் தெரிவித்திருந்தபடி வந்திருக்

"உங்களை எந்தக் கமிட்டியிலேயும் போட இடம் காலியில்லாததால, புதுசா இன்னும் என்னென்ன கமிட்டிகள் உருவாக்கலாம்னு யோசனை சொல்றதுக்காகவே ஒரு கமிட்டி ஏற்படுத்தி உங்களை அதோட தலைவரா நியமிச்சிருக்கேன்...!"

— என். வி. ரமணி.




PHILIPS
PHILIPS
வளமான
வாழ்வு வழங்குவது
பிலிப்ஸ்
பிலிப்ஸ் வீட்டுபயோக சாதனங்கள்
உங்கள் சொகுசான வசதியான வாழ்விற்கேற்ப விசேஷமாக அழகுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன—பிலிப்ஸ் வீட்டுபயோக சாதனங்கள்—நீங்கள் சிறப்பாகவும் விரைவாகவும் வேலை செய்திட உதவிடும். ஆகவே உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் நேரம் மிச்சம்.
பிலிப்ஸ் இஸ்த்திரி பெட்டியால் இஸ்த்திரி செய்வதே அலாதி மகிழ்ச்சி. அட்டாச்மெண்ட்டுடன் கூடிய மிக்ஸர் கிரைண்டர் மூலம் சமையல் வேலைகள் செய்வதில் சலிப்பே இல்லை. அத்துடன் பிலிப்ஸ் சிட்ரஸ் பிரஸ்ஸில் நொடியில் சாறு பிழியலாம்.
அது, ஆரோக்கியத்துடன் கூடிய அற்புத சுவை அளிக்கிறது. பிலிப்ஸ் சுவற்றுக் கடிகாரம் மற்றும் மேஜை கடிகாரம் உங்களுக்கு நல்ல நேரம் காட்டுகின்றன.
பிலிப்ஸ் நம்பிக்கை – சிறந்த வாழ்க்கை
CLARION/B/P/302/244 TML


10 கணக்குகள் போட வேண்டும்.
ஆங்கில பாடத்தில் வீட்டு வேலை.
பூகோளப் பரீட்சைக்குப்படிக்க வேண்டும்.
மேலும், நாளைக்கு அவனுக்கு கிரிக்கெட்
மேட்ச் வேறு இருக்கிறது.
"அம்மா, இந்த கொசுத்தொல்லைக்கு ஏதாவது செய்யேன்!"
BANISH
மாலை, இரவு நேரங்களில் கொசுவுடன் விடாது போராட வேண்டியிருந்தால், பள்ளிப்பாடத்தில் மட்டுமல்ல, விளையாட்டிலும் சாம்பியனாக இருப்பது அவ்வளவு எளிதல்ல.
ஆகவே இன்றே பேனிஷ் வாங்குங்கள்.
அது மிகவும் பாதுகாப்பானது. (உங்கள் குழந்தை அதைக் கையாளலாம்.) அத்துடன், அது கொசுக்களை விரைவாக ஒழிக்கும் மிக நவீனமான சாதனம்.
அதில் உள்ள விசேஷ எலக்ட்ரானிக் சிப், தொடர்ந்து ஒரே சீராக சூடாவதற்கு உறுதி செய்கிறது. மிகவும் செறிவாக மருந்து பூசப்பட்ட வில்லைகள், எந்த வில்லைகளையும் விட அதிக சக்தியுடன் செயலாற்றுகின்றன. பேனிஷ் இருந்தால் கொசுத்தொல்லையே இருக்காது.
நேரத்திலிருந்து, காலை
கண் விழிக்கும் நேரம் வரை
12 மணி நேரத்திற்குத் தொடர்ந்த
பாதுகாப்பு
BANISH
HTA 7003
மிகவும் சக்தி வாய்ந்த எலக்ட்ரானிக் கொசு விரட்டி.

கிறோம் என்பது கோபிக்கு மெள்ள நினைவு வந்தது. "இதோ" என்று மன மின்றி எழுந்தான். நண்பனுடன் மாடிக்குச் செல்லும் போது, படியிலிருந்து ஒருமுறை திரும்பிப்பார்க்காமல்இருக்கமுடியவில்லை. மூர்த்தி அவளை அப்படிப் பாராமல் இருக்கிறானே, இது எப்படிச் சாத்தியம்? ஒவ்வொரு மனிதனுள்ளும் ஒரு கலைஞன் உறங்குகிறான். அழகின் முன்னிலையில் அவன் விழித்தெழுகிறான். மூர்த்திக்குள் கலைஞன் மடிந்தே போய் விட்டானா?

"உன் மைத்துனி மிக மிக அழகாயிருக் கிறாள்" என்று வேண்டுமென்றே அவ னைச் சீண்டினான். ஆங்கிலத்தில் அதைக் கூறிய போது பாராட்டைச் சட்டம் போட் டுக் காட்டினாற் போல் உணர்ந்தான்.

மூர்த்தி "யெஸ்" என்றான், வேறேதோ யோசனையில் ஆழ்ந்தவனாக.

"அவங்க மட்டும்தான் வந்திருக்காங் களா? அவங்க வீட்டுக்காரர் வரல்லையா?"

"ரெண்டு பேருக்குள் ஏதோ தகராறு போலிருக்கு. நடராஜன் இவ மனசைப் புரிஞ்சுக்காம ரொம்ப இம்சிக்கறாராம். திடீர்னு கிளம்பி வந்திருக்கா. ஏதேதோ சொல்றா."

இப்படிப்பட்ட அப்சரஸுடன் தகராறு செய்யும் கணவன் எத்தகைய மடையனாய் இருப்பான்! அவளை நினைத்து விட்டு உடனே தன் மனைவியை நினைத்துப் பார்த்த கோபிக்கு, அவன் மனைவி உண்மை யில் அத்தனை கறுப்பாகவோ குள்ளமா கவோ இல்லாவிட்டாலும் மிகக் கறுப்பாக வும் குள்ளமாகவும் தோன்றினாள்.

மூர்த்தி மௌனமாக இருந்தான். நண் பனைத் தன் அறைக்கு அழைத்து வந்து புத்தகத்தை எடுத்துக் கொடுத்தான்.

"என்ன இப்படி டல்லடிக்கறே மூர்த்தி! என்ன விஷயம்?"

"வேறென்ன! கவலைதான்."

"எதைப் பத்தி? சாரதாவைப் பத்தியா?" நடராஜன், மிஸஸ் போன்ற எந்தச் சேர்க் கையும் இல்லாமல் அப்படி அவள் பெயரை மட்டும் தனிப்படுத்திச் சொன்னதில் ஒரு சின்ன புளகம் மனசில், அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டது போல்.

மூர்த்தி பதில் சொல்லவில்லை. ஒரு சிறு மௌனம். திடீரென்று, "அந்த நடராஜனை உதைக்கணும்" என்றான் மூர்த்தி.

"நிஜந்தான். பாவம், இவங்களை — அதான் சாரதாவை — நினைச்சா பரிதாப மாயிருக்கு. இல்லே?"

"பயமாயிருக்கு... இப்படி உட்காரு, பேசிக்கிட்டிருப்போம்..." என்றான் மூர்த்தி.

பொழுது போக்காய்ப் பேசிக் கொண் டிருக்கையில் மழை நின்றது. வெகு நேரமாய் ஓடிக் கொண்டிருந்த ஒரு ஜெனரேட்டர் இயந்திரத்தை அணைத்தது போல் கும் மென்று ஒரு நிசப்தம். கோபி எழுந்து கொண்டான்.

"என்ன அதுக்குள் கிளம்பிட்டே?"

"மழை கொஞ்சம் விட்டிருக்கறப்பவே போயிடறேன் மூர்த்தி. வீட்டை விட்டுக் கிளம்பறப்ப மழை இல்லாததால் ரெய்ன் கோட் கூடக் கொண்டு வரல்லே."

"அப்போ சரி, கிளம்பு. புத்தகத்தை அடுத்த புதன் கிழமை லைப்ரெரியில் திருப் பிக் கொடுக்கணும். அதுக்குள் படிச்சுட்டு என்கிட்ட கொடு."

கீழே இறங்கி வந்தார்கள். முன் அறை இப்போது காலியாயிருந்தது. நண்பனிட மும் அவன் மனைவியிடமும் விடைபெற் றுக் கொண்டு கோபி வாசலுக்கு வந்தான். உள்ளேயிருந்து கமலாவின் குரல் லேசாய்க் கேட்டது. கணவனுடன் பேசுகிறாள் போலும்.

".... ஸோஷியல் ஸர்வீஸ் பண்ணிட்டா ஆயிடிச்சா? பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு அடக்கம் வேணும். புருஷனுக்குப் பணிஞ்சு தான் போகணும்."

"நீ சொல்றது ரொம்பச் சரி கமலா... ஹ்ம், உனக்கும் அவளுக்கும்தான் எத்தனை வித்தியாசம்!"

"இப்படி ஒருத்தி ஒரு குடும்பத்துக்குப் போதாதா?"

கோபி தோட்டத்துள் இறங்கினான். வானத்தில் இப்போதும் விட்டு விட்டு மின் னல் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. குழல் விளக்கு எரியுமுன் மினுக்குவது போல்.

தோட்டத்தில் நிறுத்தியிருந்த, லேசாய் மழை ஈரம் மின்னுகிற, தன் ராஜ்தூத்தை அணுகி அதில் புத்தகத்தை வைத்து விட்டு நிமிர்ந்த கோபி இமைக்க மறந்தான். எதிரே தெரிந்த சௌந்தரியம் அனைத்தையும் ஒருங்கே ஏந்திக் கொள்ள விழையும் தவிப் பில் கண்கள் விரிந்து கொண்டே போயின. முல்லைச் செடி ஒன்றின் அருகில் அவள் அசையாமல் நின்றிருந்தாள். இறுகி வரும் மாலை இருளில் அவளுடைய ஸ்தூலத் தன்மை சிறிது சிறிதாய் நுண்ணியதாகிக் கவிதையாய்க் கரைந்து கொண்டிருப்பது போல் உணர்வு எழுந்தது.

"நான்.... நான் போய்ட்டு வரேன் மிஸஸ் நடராஜன்!"

ஈரக் காற்று சிலையினுள் ஊதி உயிரூட்டி யது போல் சாரதா மெல்ல அசைந்தாள். திரும்பி அவனைப் பார்த்தாள்.

"என்னை மிஸஸ் நடராஜன்னு கூப்பிட வேணாம். நான் நடராஜனை விவாகரத்து செய்யப் போறேன்."

அவன் ஒரு கணம் அதிர்ந்து போனான். தீ சுட்டாற் போல் சுரீரென்று ஒரு பயம். பெண்ணின் எதிர்ப்பைக் கண்டு ஆணுக் குள் எழும் பயம். ஒருவித சங்கடம் உறைத் தது இப்போது அவளைப் பார்க்கையில்.

மீண்டும் மழையோ என்று கண நேரம் பிரமை ஏற்படுத்தியபடி மர இலைகள் ஈரம் உதிரச் சலசலத்தன.

அவன் தலையைத் திருப்பிக் கொண்டு வேகமாய் ஸ்கூட்டரில் ஏறிப் புறப்பட்டுச் சென்றான்.

17 நீரில் மிதக்கும்

''ஐலவ் யூ பிருத்வி.''

பிருத்விராஜ் நம்ப முடியாமல் ஒருமுறை ஷில்பாவை நேருக்கு நேர் பார்த்தான். ஷில்பா தலைகுனிந்து கொண்டாள்.

''எனக்கு ஒன்னை மாதிரி சட்னு சொல்ல வரலை. ஆனா உள்ளுக்குள்ள நானும் அப்படித்தான் நெனைச்சிட்டிருந்தேன். என்னிக்காவது ஒரு நாள் தைரியமாச் சொல் லிடலாம்... சொல்லிட்லாம்னு... நீ சொல் லிட்டே...''

''நெஜமாவா?''

''எது?''

''நீங்களும் என்னை லவ் பண்றதாச் சொல்றது?''

''ஆமா... ஏன்?'' என்று புருவங்களை உயர்த்திக் கொண்டு கேட்டான் பிருத்வி ராஜ்.

இல்ல... நீங்க எப்பவுமே உங்க மதுமதி, மதுமதின்னு கொல்லுவீங்களே... வாழ் நாள் முழுக்க நீங்க உங்க மதுமதியைத்தான் லவ் பண்ணிக்கிட்டே இருப்பீங்கன்னு நெனைச்சேன்.''

''மதுமதியை நான் லவ் பண்ணினேன். பண்றேன். பண்ணுவேன். ஆனா அது வேற மாதிரி லவ். நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்து வராத லவ்வு. சிம்மாசனத்தில ராணியை உட்கார வச்சிட்டுத் தூரத்திலேர்ந்து ஜனங்க எல்லாம் பார்த்து லவ் பண்றதில்லையா...



அந்த மாதிரி... மதுமதியை நான் லவ் பண்றேன். காமிரா இல்லாம, லைட் இல்லாம கட், ஸ்டார்ட் இல்லாம நாம ரெண்டு பேரும் காதல் வசனம் பேசிட்டோம் ஷில்பா.. இதே சினிமா ஸீனா இருந்தா நீ உட்கார்ந்திருக்கற ஹோட்டல் நாற்காலி ஒரு சிம்மாசனம் ஆய்டும். நான் உட்கார்ந்திருக்கற நாற்காலி ஒரு சிம்மாசனம் ஆய்டும். ஒனக்கு ஒரு கிரீடம். எனக்கு ஒரு கிரீடம். ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பாத்துக்கிட்டே இருந்து கனவுலகத்துக்குப் போய் ஒரு டூயட் பாடணும்..."

"நாம நெஜமா ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்கிட்டு லவ் பண்றவங்க பிருத்வி. நமக்கு டூயட் வேண்டியதில்ல. ஒரு மரத்தடி போதும். பேசணும்; நெறையப் பேசணும். உங்க ரசனை, உங்களோட பார்வை, என் ரசனை, எம் பார்வை எல்லாத்தைப் பத்தியும் பேசணும். சோறு வேணாம். தண்ணி வேணாம். ஒண்ணும் வேணாம்..."

"அது நடக்காது ஷில்பா."

"ஏன் பிருத்வி?"

"நீ ஷூட்டிங்ல பிஸியா இருக்கப் போறே.. உங்கூட எப்பவுமே உங்கப்பா. நானும் தொழிலைக் கத்துக்கற இன்ட்ரெஸ்டோட இருக்கேன். நமக்குப் பேசறதுக்கு நேரமே இருக்காது. அதுவுமில்லாம நீயும் நானும் இப்பத் தனியாப் போய் உக்காந்து பேசினோம்... அவ்வளவுதான். உன்னைப் பத்தி வதந்தி மேல வதந்தி உருவாய்டும். நியூஸ் பேப்பர்ல எல்லாம் அடிபட ஆரம்பிச்சிடும்.. அதனால நாம லவ் பண்ணணும்னா நம்ம கல்யாணத்துக்கு அப்புறந்தான்..."

"பண்ணிக்கலாம் பிருத்வி... உடனே கல்யாணம் பண்ணிக்கலாம். எனக்கு இந்த சினிமா வேணாம். நான் ஹீரோயின் ஆக வேணாம். எதுவுமே வேணாம். ஒரு குடும்பப் பொண்ணா இருந்தாப் போதும். காலைல என்ன டிஃபன், மத்தியானம் என்ன கொழம்பு, நைட்டுக்கு என்ன பொரியல்னு கவலைப்பட்டுக்கிட்டு, ரெண்டு கொழந்தைங்களைப் பெத்து வளத்தாலே எனக்குப் போதும்..."

"ப்ச்: என்ன ஷில்பா இது? இவ்வளவு உணர்ச்சிவசப்பட்டா எப்படி? கையை வுடும்மா. சப்ளையர் ஒரு மாதிரி பாக்கறான். நாம கல்யாணம் பண்ணிக்கலாம். என்னால முடியும். உன்னால முடியுமா? உன்னை நம்பிப் பணம் போட்டாச்சி. எப்படியும் இந்தப் படம் முடியற வரைக்கும் நீ ஃபீல்ட்லேர்ந்து வெளில வர முடியாது. நாம ஒருவேளை இன்னிக்கே, இப்பவே கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் அதை வெளில சொல்ல முடியாது. படம் முடியற வரைக்கும் பொத்திப் பொத்தித்தான் அந்த ரகசியத்தைக் காப்பாத்தணும். அப்புறம் உங்கப்பா, ராணி, திலகா இவங்களையெல்லாம் அப்படியே விட்டுட்டு உன்னால வந்துட முடியுமா? சொல்லு... அவங்களுக்கு ஏதாவது ஒரு வழி பண்ணணும் இல்ல...?"

ஷில்பா அவன் கையை விடுவித்தாள். இரு கன்னங்களிலும் இரு கைகளை வைத்து ஏந்திக் கொண்டாள். ஒரு பெருமூச்சு விட்டாள்.

"போலாமா ஷில்பா?"



ஷில்பா வீட்டுத் தெரு முனையில்

ஆட்டோ நின்றது. ஆட்டோவிலிருந்து ஷில்பா இறங்கினாள்.

"வரேன் பிருத்வி" என்றாள். வீட்டைப் பார்த்து நடந்தாள்.

பிருத்விராஜ் வீடு வரை வருவதில் சம்மதமில்லை என்று சொல்லி விட்டான். ஒரு வேளை ஜூபிடர் ரத்தினம் வீடு வந்து சேர்ந்திருந்தால் தர்மசங்கடத்தை விலை கொடுத்து வாங்க வேண்டும்.

ஷில்பா வீட்டு வாசல்படியில் காலை வைக்கும் போது அவளை "போடி வெளியே" என்ற இரண்டு வார்த்தைகள் துரத்தின.

ஷில்பா திடுக்கிட்டாள். ராணியின் குரல். ஆவேசமாக இருந்தது. யாரிடம் இவ்வளவு கோபமாகப் பேசுகிறாள்?

ஷில்பா உள்ளே நுழைந்தாள். முதல் வேலையாக வாசல் கதவைச் சாத்தினாள்.

சோபாவில் திலகா உட்கார்ந்திருந்தாள், கால் மேல் கால் போட்டுக் கொண்டு. ராணி சமையலறை வாசல்படியில் நின்று கொண்டிருந்தாள். கையை வாசலைப் பார்த்து நீட்டிக் கொண்டிருந்தாள். அவள் உடம்பு லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

"என்னக்கா திலகா மேல் அவ்வோ கோவம்?"

"கேளு ஷில்பா... நீயே கேளு..." என்றாள் திலகா, திடீரென்று ஊசிப் பட்டாசு வெடிக்கிறாற் போல.

"ஷ்... நான்தான் கேக்கறேனில்ல நீ எதுக்குக் குறுக்கில?"

"படிக்கிற பொண்ணு.. வீட்டுக்கு வந்திருக்கிற நேரத்தைப் பாத்தியா ஷில்பா. ஸ்பெஷல் கிளாஸ், ஸ்பெஷல் கிளாஸ்னு சொல்லி என் கண்ல மொளகாப் பொடியைப் போட்டுட்டு ஓடிப் போனா... இப்ப என்னடான்னா காதலாம். எவனோ ஒருத்தன் மாருதி காரை எடுத்துட்டு வந்தா அவன் பின்னாடி போயிடணுமா... போய்ட்டே இல்லை... அப்படியே போய்டுன்னு சொல்றேன். மூணு இலை விடலை ஷில்பா. அதுக்குள்ள லவ்வு..."

ராணியின் வார்த்தைகள் ஷில்பாவை அறைந்தன. வீட்டில் அக்கா ஒருத்தி இருக்கும் போது, பிருத்விராஜிடம் அவ்வளவு அப்பட்டமாகச் சொன்னது தப்போ என்று கூடப் பட்டது.

"உனக்குக் காதலைப் பத்தி என்ன தெரியும் ராணிக்கா? உப்பு..மொளகா தெரியும். பருப்பு. புளி தெரியும். எந்நேரமும் அரிமுஞ்சியோட கிச்சன்லயே இருக்கே. வெளிய வந்து பாத்தா இல்ல தெரிஞ்சிருக்கும். நான் லேட்டா வந்ததுக்கு இவ்வளவு கத்தறே. நான் லவ்வுனு சொன்னதுக்கு இப்படிப் படபடங்கறே... ஷில்பாவும் உனக்குத் தங்கச்சிதானே... என்னை விட லேட்டாத்தான வந்திருக்கா. அவளைக் கேக்கறது தானே. அந்த ஹிப்பி ஹீரோ பிருத்விராஜ் இவளைப் பாக்கற பார்வையும், இவ அவனைப் பாக்கற பார்வையும் அப்படி என்ன அண்ணன் தங்கச்சி பார்வையா? அம்பிகாபதி — அமராவதி லுக் கொடுக்கறாங்களே நம்ம வீட்லயே. அவளைக் கேக்கறதுதானே...."

"திலகா..." தொண்டை நரம்பு புடைக்கக் கத்தினாள் ராணி. "ஷில்பாவைப் பத்திப் பேசறதுக்கு ஒனக்கு அருகதை கெடையாது. அவளாலதான் நீ இப்படி வேளா வேளைக்குச் சாப்பிடறே... டிரஸ் பண்றே... வெளியில போய்ட்டு வந்து லவ் அது இதுன்னு அசிங்கமாப் பேசறே... ஷில்பா லவ் பண்றாளா... பண்ணட்டுமே. அவ இந்த வீட்ல யாரையும் நம்பி இல்ல. அவ லவ் பண்ணலாம். நீ சொல்லக் கூடாது அந்த வார்த்தையை...."

"ஓஹோ... சம்பாதிச்சிட்டு வந்தா நீ ரைட்டுனு சொல்லுவே அ வ் வ ள வு தானே..."

"ஐயோ திலகா... உனக்கு வயசு பத்தாதும்மா. உன் வயசுக்கு வெளி வேஷம், கார், பங்களா, பகட்டு இதெல்லாம்தான் தெரியும். அதிலயே நீ வுழுந்துடுவ. நல்ல ஆம்பளையா உன்னால பொறுக்க முடியாது.."

"சம்பாதிக்க ஆரம்பிச்சா வயசு பத்தும். அப்படித்தானே சொல்ற... நானும் சம்பாதிக்கப் போறேன். ஷில்பா மாதிரி... எப்படியாவது... அப்ப ஓம் மூஞ்சியைப் பார்க்கப் போறேன். ஒனக்கு ஒடம்பு அலையுது. எங்களையெல்லாம் பாத்தாப் பொறாமையா இருக்குது... அதான் இப்படிப் பேசறே.. நீயும் வெளிய போயேன். எவன் கூடயாவது கையைக் கோத்துக்கயேன்..."

ஷில்பா திலகாவை ஒளி வேகத்தில் அணுகினாள். கையை வீசினாள். திலகாவின் கன்னத்தில் மின்னல் தெறித்தது. திலகாவின் மண்டைக்குள் ஆயிரம் நட்சத்திரங்கள் பூப்பூவாய்ச் சிதறின.

"யார் கிட்ட என்ன பேசறோம்ங்கறதை யோசிச்சிப் பேசு திலகா."

வெளியே கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

திலகா நொடித்துக் கொண்டு எழுந்தாள். வேக வேகமாகச் சென்று கதவைத் திறந்தாள்.

"ஹாய் ஷில்பா..." என்று தொடங்கிய அஸ்வின் குமார் திலகாவைப் பார்த்துத் திகைத்துப் போனான்.

"அஸ்வின்" என்றாள் திலகா இரண்டு கைகளையும் உயரத் தூக்கி.

மேலே நிலா தனித்து நின்றது. மேகங்கள் சாமரம் வீசின. சற்று தூரத்தில் கடல். அலைகளைக் கரைக்கு அனுப்பிக் கொண்டிருக்க, அலைகள் நகருக்குள் நுழையப் பயந்து பின்வாங்கிக் கொண்டிருந்தன.

ஸ்ரீநாத் மணலில் இரு முழங் கைகளையும் ஊன்றி மல்லாக்காகப் படுத்திருந்தான். எதிரில் பிருத்விராஜ் உட்கார்ந்திருந்தான்.

"புனிதாவைப் பத்தி நீ என்ன நெனைக்கறே பிருத்வி?"

ஐஸ்க்ரீம் வண்டிக்காரனை நோக்கிப்

போய்க் கொண்டிருந்த புனிதாவையே பார்த்துக் கொண்டிருந்த பிருத்விராஜ், ஸ்ரீநாத்தின் கேள்வியால் தாக்கப்பட்டுத் திரும்பினான்.

"ஒரே வார்த்தையில சொல்லணும்னா—ஜெம்."

ஸ்ரீநாத் இன்னமும் ஐஸ்க்ரீம் வண்டிக் காரனை நோக்கிப் போய்க் கொண்டிருந்த புனிதாவைப் பார்த்தான். அவள் ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும் போதும் மணல் கெந்தி எடுக்கப்பட்டுத் தூசியுடன் பறந்தது.

"அவளை வெச்சிக் காப்பாத்த முடியலை அந்த மடையனால..."

"யாரைச் சொல்றே ஸ்ரீநாத்?"

"அவளோட புருஷனைத்தான். பெரிய ஆபீஸர். அவளைக் கட்டிக் கொடுக்கறப்ப அவனுக்குக் கார் இருந்தது. கம்பெனி கொடுத்த கார். நல்ல படிப்பு. நான் ஒவ்வொண்ணா எல்லாத்தையும் பாத்துப் பாத்துத்தான் புனிதாவை அவனுக்குக் கட்டிக் கொடுத்தேன்... ஒண்ணுலதான் பெரிசா ஏமாந்துட்டேன்...

பிருத்விராஜ் எதுவும் பேசவில்லை. ஸ்ரீநாத்தே சொல்லட்டும் என்று காத்திருந்தான்.

"அவன் காரெக்டரைப் பத்திக் கவலைப் படாம இருந்துட்டேன் பிருத்வி. அவன் பெரிய குடிகாரன். கல்யாணம் பண்ணி வச்சாச் சரியாய்டும்னு ஜோசியன் சொன்னானாம். அவனோட அப்பா, அம்மா புனிதாவுக்கு மூக்கணாங்கயிறு மாட்றா மாதிரி அவளை இழுத்துட்டுப் போய்ட்டாங்க. ஃபர்ஸ்ட் நைட்லயே அளவுக்கு மீறிக் குடிச்சிட்டு ஃப்ளாட் ஆன ஒரே மாப்பிள்ளை என் புனிதாவோட புருஷனாத்தான் இருக்க முடியும். காலைல எழுந்தவுடனே காபியோட பிராந்தியைக் கலந்து குடிக்கற மாப்பிள்ளை எங்க வீட்டு மாப்பிள்ளையாத்தான் இருக்க முடியும். ஒரு வருஷம்... முந்நூத்து அறுபத்தஞ்சி நாள்.. ஹெல். புனிதா அந்த வீட்ல இருந்து பாத்தா. தாங்க முடியாம கடைசில எங்கிட்ட சொன்னா. கூட்டிட்டு வந்துட்டேன். நான் அவ உடம்புல ஒரு தூசி கூட படாம வளத்தேன் பிருத்வி. சாட்டையால அடிச்சிருக்கான். ஸாடிஸ்ட். எதுக்கு? அவன் கிளாஸ்ல ஊத்திக் கொடுக்கலைன்னு. சிரிப்பும், கொம்மாளமுமா இருந்தவ எப்படி ஆய்ட்டா தெரியுமா? கூட்டிட்டு வந்துட்டேன். என்னால சோறு போட முடியாதுன்னா அவளை இன்னொருத்தனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சேன். நல்லா வாழணும்ங்கறதுக்காகய்யா... அவளை வெச்சுக்கத் தெரியல்லியே.. ராஸ்கல். நீயெல்லாம் ஒரு மனுஷனாடா... த்தூ... என் புனிதாவை என்னால ராணி மாதிரி வச்சிக் காப்பாத்தத் தெரியும். அவளுக்கு விதம் விதமா ட்ரஸ் வாங்கிக் கொடுக்க முடியும். நகை நட்டுன்னு என்னன்னவோ வாங்கித் தர முடியும். ஒரு வருஷமாச்சு டைவர்ஸ் வாங்கி. ஒரு வருஷமா எல்லாம் நானே பாத்துப் பாத்துச் செய்றேன். இருந்தாலும் அவளுக்குச் சந்தோஷத்தை வாங்கித் தர முடியலையேன்னு கில்டியாச் சுத்திக்கிட்டிருக்கேன். இளங்குமரனைப் பத்தி ஒனக்கு ஓரளவுதான் தெரியும். எனக்கு நெறையத் தெரியும். ஃப்ரண்ட்தான். புனிதாவைக் கல்யாணம் பண்ணிக் குடுன்னு கேட்டான். முதல்ல நானும் ஒத்துக் கலாம்னுதான் நெனைச்சேன். புனிதாவைக் கேக்காம செய்யக் கூடாதுன்னு அவளைக் கேட்டேன். முடியாதுன்னுட்டா. இளங்குமரனுக்கு அதனாலயும் எம்மேல கோவம். அவனும் குடிக்க ஆரம்பிச்சிட்டான். குடிகாரங்களைப் பாத்தாலே எனக்கு வெறுப்பா இருக்கு பிருத்வி... நீ குடிப்பியா?"

"நானா...?" என்று பிருத்விராஜ் திகைத்தான்.

"நீதான். நாங்கூட அப்பப்ப எப்பவாவது கம்பெனி குடுக்கறதுக்காகக் குடிச்சிருக்கேன். தெளிஞ்சவுடனே எனக்கு எம்மேலயே வெறுப்பா இருக்கும். நீ கம்பெனி குடுக்கறதுக்கு, டேஸ்ட் பாக்கறதுக்கு அதுக்கு, இதுக்குன்னு குடிச்சிருக்கியா?"

"இல்ல..." என்றான் பிருத்விராஜ்.

"நெனைச்சேன். உங்கிட்ட ஒரு கேள்வி கேக்கப் போறேன். பதில் சொல்றியா? யோசிச்சு! நிதானமா! ரெண்டு நாள் கழிச்சு."

பிருத்விராஜுக்குக் குப்பென்று உடலில் ஒரு மின் அலை பரவியது. ஸ்ரீநாத் என்ன கேட்கப் போகிறான் என்று தெரிந்து விட்டது. வேண்டாம், ஸ்ரீநாத். என்னைக் கேட்காதே. அந்தக் கேள்வியை என்னிடம் கேட்காதே. என்னிடம் கேட்காதே.

"என்ன ஸ்ரீநாத்?" என்றான் பிருத்விராஜ் நாக்குத் தடுமாற.

ஸ்ரீநாத் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு புகையை ஊசி நூல் போல் வெளியில் விட்டு அதை ஒரு கையால் கலைத்தான். தொண்டையைக் கனைத்தான்.

ஸ்ரீநாத், வேண்டாம், கேட்காதே!

(தொடரும்)



டாக்டர்: உங்களுக்கு என்ன பிரச்னை?

அவர்: வீட்டுக் கவலையால் ஆபீஸில் தூங்க முடியல... ஆபீஸ் கவலையால் வீட்டில் தூங்க முடியல, டாக்டர்!

— மணியன் தர்மலிங்கம்.

உறவுகள்

சத்தியப்ரியன்

அம்மா ஒரு தெளிவில்லாமல் என்னைப் பார்த்தாள். கையில் ஒரு புடைவை. ஜாக்கட் சுருட்டித் திணிக்கப்பட்ட மஞ்சள் பை. கண்களில் கலக்கம். ஆத்திரம் கலந்த வருத்தம்.

''எனக்கு இருபது ரூபா பணம் கொடு.''

எனக்கு அயர்ச்சியாக இருந்தது.

''மணி ஏழும்மா. ஒன்பது மணி ஆகும் காரைக்குடி போய்ச் சேர. மாதி சம்பந்தி வீட்டில் ராத்தங்கறதாத் தீர்மானிச்சிட்டியா? ஏன் புரியாம இருக்க?''

''எனக்கு இருபது ரூபா பணம் கொடு.''

''தனியாப் போக முடியுமா உன்னால? ஏன் இந்த வயசுக் காலத்தில இன்னம் நகை, பணம்னு கெடந்து அலையறே?''

''சும்மா இல்லைடா. இருபது பவுன் நகை. மந்திரம் போட்டு வரலை.. அஞ்சு பவுனுக்கு இன்னும் கடன் நிக்கறது. விட்டுட்டு ஏமாளியா நிக்கச் சொல்றியா?''

''மதிச்சு லெட்டர் போட்டாளா அவா?''

''நம்ம பணம்; நம்ம நகைடா. நாமதான் போகணும். நானும் ரெண்டு மாசமா ஒரு நடை போய்ட்டு வந்துடு, போய்ட்டு வந்துடுங்கறேன். கேக்கறயா? சரசுவுக்குக் கல்யாணம் ஆறதுக்கும் நான்தான் அலைஞ்சேன். அவளோட நகையை வாங்கிண்டு



வரவும் நான்தான் அலையணும்னு விதி... இருபது ரூபா பணம் கொடு.''

இது ஒரு விநோத வழக்கு. சரஸ்வதி என்னுடைய மூத்த சகோதரி. அவளுக்கு மேலே தாமோதரன். நான் கடைசி. சரஸ்வதி ஒரு சராசரிப் பெண்ணாகத் தன்னளவில் டெய்லரிங், டைப்ரைட்டிங் எல்லாம் கற்றுக் கொண்டு, ஒரு தனியார் நிறுவனத்தில் எண்ணூறு ரூபாய்ச் சம்பளத்தில் வேலை பார்த்தாலும் இருபத்தெட்டு வயசு வரையிலும் அவளுக்குக் கல்யாணம் ஆகாத காரணம், அவளுடைய மாறுகண். தட்டிக் கழித்த வரன்களுக்கெல்லாம் இரவெல்லாம் அழுதாள். அம்மா இரண்டாந்தாரமாக ஆனாலும் பரவாயில்லை என்று வரன் தேடி அலைந்தாள். முப்பத்திரண்டு வயசில் முன் தலை வழுக்கை விழுந்து முதல் பிரசவத்தில் மனைவியைப் பறி கொடுத்த ஒரு எல்.டி.ஸி. மாப்பிள்ளையாக வந்தார். காரைக்குடியில் சொந்த வீடு உண்டு. அப்பா, அம்மாவுக்கு ஒரே பிள்ளை.



''பொண்ணுக்கு எந்தக் குறையும் இருக்காது. மூத்தவ ஞாபகமா எதுவும் கிடையாது. கொழந்தையும் செத்துத்தான் பொறந்தது. அதைக் கொண்டு வா இதைக் கொண்டு வான்னு கேக்கற வம்சமில்லை. உங்க இஷ்டப்படி செய்ங்கோ. எவ்வளவு செய்யறதா இருக்கேள்?''

''பத்துப் பவுன்.''

''காதுக்குக் கேக்க நன்னாவா இருக்கு? சபைல சொல்லிக்கும்படியாவா இருக்கும்?''

இருபது பவுனில் வந்து நின்றது.

திருமணமாகி சரஸ்வதி எண்ணி ஆறு மாதம்தான் கிரிதரனோடு வாழ்ந்தாள். முற்றிய மஞ்சள் காமாலையால் இறந்து விட்



டாள். கிரிதரன் பச்சைக் குழந்தை மாதிரி அழுதான்.

கிட்டத்தட்ட ஆறு மாதமாகி விட்டது. எங்களுக்கும், அவர்களுக்கும் மேலோட்டமாகத்தான் தொடர்பு இருந்து கொண்டிருந்தது. அதுவும் அம்மா வாரம் தவறாமல், 'சரஸ்வதியின் கல்யாணத்திற்குப் போட்ட நகைகளையும், ரொக்கப் பணத்தில் ஐயாயிரத்தையும் திருப்பித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்' என்று போடும் லெட்டர்களின் மூலம் நின்று போனது.

அம்மா மட்டும் பிடிவாதமாக இருக்கிறாள்.

''கார்த்தால ஆபீஸுக்கு லீவு போட்டுட்டு நானும் வரேன். ரெண்டு பேருமாப் போகலாம்'' என்றேன்.

சரஸ்வதியின் நினைப்பு ஒரு நிழலாக நெஞ்சில் இருக்கிறது. அவளுடைய புறக் குறைபாடு தவிர அவள் ஒரு பொக்கிஷம். அழகாகப் பாடுவாள். கல்யாணியில் ஏத்தாவுனரா பாடினால் ராமரே கீழே இறங்கி வந்து விடுவது போலிருக்கும். சமையல் மிகப் பிரமாதமாகப் பண்ணுவாள். அதட்டல், பதற்றம் எதுவுமே இல்லாமல் காரியம் செய்வாள்.

மறுநாள் காலையில் மணிகண்டன் வீட்டில் என் லீவு லெட்டரைக் கொடுத்து விட்டு ஏழு மணி பஸ்ஸில் நானும் அம்மாவும் காரைக்குடிக்குக் கிளம்பினோம்.

கிரிதரன் வீட்டுக்குப் போன பொழுது மணி எட்டரை இருக்கும். கிரிதரனின் அப்பா வாசலில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். எங்களைப் பார்த்ததும் ஒரு மாதிரி தடுமாறிப் போய் எங்களை 'வா' என்று கூப்பிட மறந்து ''அலமேலு! அவா வந்திருக்கா'' என்றார். ஒரு சின்ன மௌன இடைவெளியில் நானும் அம்மாவும் பரிதாபமாக நிற்க வேண்டி வந்தது.

கிரிதரனின் அம்மா வெளியில் வந்தாள்.

''வாங்கோ'' என்றாள்.

[illegible]ங்கள் உள்ளே போனோம்.

''காப்பி சாப்பிடறேளா?''

''வேண்டாம். வழில டிபன் சாப்பிட்டுட்டு வந்தோம்.''

''கை நனைக்கக் கூடாது இந்நாத்துலங்கற முடிவோடதான் வந்திருக்கேள் போல....''

எனக்கு சுருக்கென்றது.

திரும்பவும் ஒரு அவமான மௌனம் விழுந்தது.

''மாப்பிள்ளை இல்லையா?'' என்றேன்.

''வெளில போயிருக்கான். வந்திடுவான்'' வாசலிலிருந்து கிரிதரனின் அப்பா குரல் கொடுத்தார்.

''நாலஞ்சு லெட்டர் போட்டிருந்தோமே'' அம்மா ஆரம்பித்தாள். எனக்கு திக், திக் என்றது...

''கௌசல்யா சித்த அடுப்பைப் பார்த்துக்கோ...'' சமையல்கட்டுக்குச் சென்ற கிரிதரனின் அம்மா தானும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு எங்கள் முன்னால் வந்து உட்கார்ந்தாள். ஒரு பெண் எட்டிப் பார்த்துச் ''சரி'' என்றது.

மிகப் பிரமாதமாக வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. பெண், பையன் இரண்டு பேருடைய குணம், குற்றம் ஆகியவை தட்டுத் தட்டாக நிறுக்கப்பட்டது. பெண்ணுக்கு மாறுகண், பையனுடைய முதல் தார இழப்புக்கு நேர். தொக்கி நிற்கும் செவ்வாய்

அருள்வாக்கு

ஒவ்வோர் அவயவத்தாலும் ஏற்படக் கூடிய தோஷத்தைப் போக்கிக் கொள்ள அந்த அவயவத்தாலேயே செய்யக் கூடிய புண்ய கர்மாக்கள் இருக்கின்றன. குப்பைத் தொட்டியான மனஸைச் சுத்தம் பண்ண அந்த மனஸாலேயே த்யானம் செய்ய முடிகிறது. கண்டதைப் பேசுகிற நாக்கைச் சுத்தப்படுத்திக் கொள்ள அந்த நாக்காலேயே பகவந் நாமாவைச் சொல்ல முடிகிறது. குயுக்தி எல்லாம் பண்ணும் மூளையைச் சுத்தமாக்கிக் கொள்ள அந்த மூளையாலேயே தத்வ ஆராய்ச்சி பண்ண முடிகிறது. இப்படியே இந்த சரீரத்தால் — கையாலும் காலாலும் உடம்பாலும் — எத்தனையோ தப்பு தண்டா பண்ணுகிறோமல்லவா? அதை இந்தச் சரீரத்தாலேயேதான் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். சரீரப் பிரயாசையே சித்த சுத்தியையும் தரக் கூடியது. ஏனென்றால் சரீரத்தால் செய்கிற இந்தக் கார்யங்களுக்கு மூலமாகப்




பரோபகாரம் என்ற எண்ணம் நம் சித்தத்தில் இருப்பதுதான்.

தயை என்பது ஒவ்வொருவர் மனஸிலும் இருக்க வேண்டிய உயர்ந்த குணம். அந்தத் தயைக்கு உருக் கொடுக்கும்படியான ஒரு காரியத்தைச் சரீரத்தினாலும் அவசியம் செய்ய வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னேற்றத்திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆங்கில அறிவு ஒரு தடையாக இருந்திருந்தால்,......

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண்டும் அதற்கு ஆங்கிலத்திலேயே பதிலளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

நீங்கள் பல வழிகளில் முயன்றும், பலபுத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டு போதும்.

ஆமாம் !

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்கமின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத்திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல்களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொள்ளலாம்.

நேர்முகப் பயிற்சி பெற விரும்புவோருக்கு தனி வகுப்புகள் உண்டு.


என்ன?.......எங்கே கிளம்பி விட்டீர்கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி :

விவேகானந்தா கல்வி நிலையம்
த. பெ. எண். 4 986.
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17

NAGA



இந்த மனிதர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர தகுதியுடையவர்.

இவரை அடையாளம் காண எங்களுக்கு உதவுவீர்களா?

நாங்கள் இந்தப் மனிதரைச் சந்திக்க விரும்புகிறோம். மேலும் இவரைப் போன்ற இலட்சக்கணக்கானவர்களையும் சந்திக்க விரும்புகிறோம். ஒரு நெருக்கடியான நேரத்தில் நாங்கள் அளிக்கக்கூடிய சிறிதளவு பாதுகாப்பு பற்றி அவர்களுக்குச் சொல்ல நினைக்கிறோம். இதனைச் செய்ய நீங்கள் எங்களுக்கு உதவ முடியும். ஏனெனில், நீங்கள் இவர்களை அன்றாடம் சந்திக்கிறீர்கள் - உங்கள் பணியாளர், சலவைத் தொழிலாளி, தோட்டக்காரர், பாதை ஓரத்தில் பணி புரியும் செருப்புத்தைப்பவர். இவர்களைச் சந்திக்கும் போது, தனிநபர் விபத்து சமூகப் பாதுகாப்புத்திட்டம் பற்றி எடுத்துக் கூறுவதன் மூலம், நீங்கள் அவர்களுக்கு ஒரு சிறந்த உதவி புரிந்தவர்கள் ஆவீர்கள்.

பாம்புக்கடி, உயரமான இடத்திலிருந்து கீழே விழுதல், நச்சு உணவு, நீரில் மூழ்குதல் இது போன்ற விபத்து, ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கும் நபரின் விலைமதிப்பில்லா உயிரைப் பறிக்கக்கூடும். ஆண்டு வருமானம் ரூ. 7200க்குக் குறைவாகப் பெறும் குடும்பங்களில், 18 முதல் 60 வயது வரையுள்ள சம்பாதிக்கும் நபர்களுக்கு இந்த தனி நபர் விபத்து சமூகப் பாதுகாப்புத் திட்டம் பொருந்தும். இந்த வருமான வரம்புக்கு உட்பட்ட குடும்பத்தில் சம்பாதிக்கும் நபர்களில் யாரேனும் ஒருவர் விபத்து காரணமாக இறக்க நேர்ந்தால், அந்தக் குடும்பம் ரூ. 3000 நஷ்ட ஈடு பெறத் தகுதிபெறுகிறது. இதற்கு, முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவோ, கட்டணம் செலுத்தவோ தேவையில்லை. இத்திட்டம் பற்றிய விபரங்களை மகிழ்வோடு உங்களுக்கு அளிக்க தென்னிந்தியாவிலுள்ள "யுனைடெட் இந்தியா" வின் அலுவலகங்கள் காத்திருக்கின்றன.

இதற்கிடையில், இத்திட்டம் பற்றி அனைவருக்கும் தெரிவிப்பீர்களா?

இந்திய அரசு

தனி நபர்விபத்து சமூகப்பாதுகாப்புத்திட்டம்

யுனைடெட் இந்தியா
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவின் ஒரு அங்கம்)
24, ஒயிட்ஸ் சாலை, சென்னை - 600 014.

இத்திட்டம் பற்றி அனைவர்க்கும் உணர்த்த எங்களுக்கு உதவுவீர்.

Mudra:M:UI:3598 Tam

தோஷம், அவளுக்குப் போட்ட நகைகளுக்கு நேராகி விடுமோ என்று அம்மா கலவர உச்சத்திற்குப் போய் விட்டாள். நடுவில் சரஸ்வதியை மறந்து போனார்கள். அவள் இறப்பைச் சாதாரண மனிதாபிமானத் தோடு கூட பார்க்காமல் வியாபாரம் பேசிக் கொண்டிருந்தார்கள். சரஸ்வதி இரண்டா வது முறையாகச் செத்துக் கொண்டிருப்பது போல இருந்தது.

''கிரிதரன் வந்துட்டான்'' மாமனார் குரல் கொடுத்தார்.

கிரிதரன் உள்ளே வந்தார். எங்களைப் பார்த்ததும் சம்பிரதாயமாகச் சிரித்தார். என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு ''ஸி.ஏ. ஐ.ஜ.பி. ரிஸல்ட் வந்துடுத்தா?'' என்றார்.

''திருப்பியும் அக்கவுன்டன்ஸியில் போயி டுத்து'' என்றேன்.

இன்னொரு மௌனம் விழுந்தது.

கிரிதரன் அம்மாவைப் பார்த்தார். அம் மாவுக்கு என்ன தோன்றியதோ 'ஓ'வென்று அழத் தொடங்கி விட்டாள். நிலைமை அசிங்கமானது. அவளுக்கு நிஜமாகவே துக்கம் இருக்கலாம். பெண் வாழக் கொடுத்து வைக்கவில்லையே என்ற துக்கம். அல்லது அழுவது சுலபமாகக் காரிய ஜெயிப் பில் கொண்டு விடும் என்று தெரிந்து வைத் திருக்கலாம்.

''என்ன மாமி?'' என்று பதறினார் கிரி தரன்.

கிரிதரனின் அம்மா விஷயம் சொன் னாள்.

''நீ பீரோவிலேருந்து நகையெல்லாம் எடுத்துண்டு வாம்மா'' என்றார்.

அவள் உள்ளே போய் நகைகளைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''சரியா இருக்கா? பார்த்துக்கோங்கோ. லாக்கரில் வெச்சிருந்தது. எடுத்துண்டு வரச் சமயமில்லை. உங்களுக்கும் பதில் லெட்டர் எழுதக் கை வரல்லை. தப்புத்தான்'' என் றார் கிரிதரன்.

வியாபாரம் இவ்வளவு சுளுவில் முடிந்து விடும் என்று அம்மாவே நினைத்திருக்க மாட்டாள்.

ரெட்டை வடத்தில் கோதுமைச் செயின்; கிருஷ்ணன் டாலர் பதித்த கொடி; ஒரு பவுனில் திருமாங்கல்யம்; நாலு ஜோடி வளையல்கள்; ஒரு ஜோடி தோடு; ஒரு மூக்குத்தி....

''சரியா இருக்கு'' என்று அம்மா சொல்லி விட்டுக் காகிதத்தில் சுருட்டிப் பையில் போட்டுக் கொண்டாள்.

''அப்படியே அவளுடைய பொட்டியை யும் எடுத்து வைடா கிரி'' என்றாள் கிரிதர னின் அம்மா.

சரஸ்வதியின் சூட்கேஸ் வந்தது. உள்ளே அவளுக்கு வாங்கிய புடைவைகள், உள்ளா டைகள் எல்லாம். ஒரு சிக்கல். இந்தத் துணிக்குவியலில் கிரிதரன் கல்யாணத்துக் குப் பிறகு வாங்கிக் கொடுத்த புடைவையும், ஜாக்கெட்டும் இருந்தால் வியாபாரம் நேர் ஆகாதே என்று தோன்றியது.

அடுத்த இதழில்...



•• எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு 97 பேர் இருந்த ஜானகி அணியை ஆதரிக்காமல், 33 பேர் இருந்த ஜெய லலிதா அணியை ஆதரித்தது எப்படி ஜனநாயகமாகும்?

•• அ.தி.மு.க.வுக்குள் ஜெயலலிதா வந்த போது பரவலானதோர் எதிர்ப்பு இருந்தது. அப்போது உங்கள் நிலை என்ன?

•• எம்.ஜி.ஆர். இருந்த போதே கட்சி யின் மூத்த உறுப்பினர்களை ஜெய லலிதா மதிக்கவில்லை என்னும் நிலையில் உங்களிடம் எப்படி நடந்து கொண்டார்?

•• கருணாநிதியின் ஊழல் ஒரு பக்கம் இருக்கட்டும்; ஜெ. அணி — ஜா. அணி என்று இருதரப்பிலும் மாறி மாறிக் கூறப்பட்ட ஊழல் குற்றச் சாட்டுக்கள் பற்றி என்ன சொல்லு கிறீர்கள்?

•• எம்.ஜி.ஆர்: தவறே செய்யவில்லை என்கிறீர்களா? ஆனந்த விகடன் ஆசிரியரைச் சிறையில் அடைத்தது எம்.ஜி.ஆர். அரசுதானே?

•• ஆரம்ப காலத்திலிருந்தே உங்களுக் கும், காங்கிரஸுக்கும் இடையில் ஒரு மறைமுகமான உறவு இருந்து கொண்டேதான் இருக்கிறது என் கிறார்களே?

— இப்படி இன்னும் ஏராள மான கேள்விகளுக்கு மனம் திறந்து பதிலளிக்கிறார் பண்ருட்டி ராமச் சந்திரன்.

''கிரஹப்பிரவேசம், நிச்சயதார்த்தம், நலுங்குக்கு... இதுக்கெல்லாம் எடுத்த புடைவைகளையெல்லாம் நாங்களே வெச்சிண்டிருக்கோம். சங்கடப்பட வேண்டாம்'' என்றாள் கிரிதரனின் அம்மா.

''எவர்சில்வர் பாத்திரமெல்லாம் புழக்கத்தில் இருக்கு. பாத்திரத்தில் பேர் அடிச்சு வாங்கிக்கறது எவ்ளோ நல்லதாப் போச்சு... பிரிச்செடுத்து லாரியில் அனுப்பித் தர்றோம். லாரி வாடகை மட்டும் கொடுத்து வாங்கிக் கோங்கோ'' என்றாள்.

சுத்தம். மரத்தைச் சாய்த்து, இலைகளை உதிர்த்து, கிளைகளை வெட்டி எறிந்தாகி விட்டது. 'மரம் இருந்த அடையாளம் இல்லை.

நானும் அம்மாவும் கிளம்பினோம்.

''பஸ்—ஸ்டாண்ட் வரைக்கும் நானும் வரேன்'' என்று கிரிதரனும் கூட வந்தார். சூட்கேஸை அவர்தான் தூக்கிக் கொண்டு வந்தார்.

''ஆறு மாசம்தான் விஸ்வம் சரஸ்வதி என்னோடு இருந்தா. ஆனா ஆறு யுகமோன்னு ஒரு பிரமிப்பை ஏற்படுத்திட்டுப் போய்ட்டா. என் முதல் மனைவியோட நடந்த கல்யாணம் ஒரு கல்யாணம் மட்டும் தான். ஒருத்தரை ஒருத்தர் ஏத்துக்கறதுங்கறது மின்னல் மாதிரி சடார்னு வரணும். அது எனக்கும் சரஸ்வதிக்கும் வந்தது. என் குறைகள், அவள் குறைகள் எல்லாவற்றையும் மீறி, ரெண்டு பேரும் நேசித்தோம். எல்லாம் கனவு மாதிரி ஆயிடுத்து. அம்மா இன்னொரு கல்யாணத்துக்குத் திரும்பவும் நச்சரிப்பாள். அது சரஸ்வதி மேல நான் ஏற்படுத்திக்கிட்ட பிரியத்தை அவமானப் படுத்தறா மாதிரி ஆயிடும்.''

பஸ்ஸில் கூட்டமில்லை. ஏறி உட்கார்ந்து கொண்டோம். டிரைவர் வருவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்லை.

கிரிதரன் பர்ஸைத் திறந்து காட்டினார். அதற்குள் சரஸ்வதி சிரித்துக் கொண்டிருந்தாள்.

''மாமி! ஒரு சின்ன விண்ணப்பம்'' என்றார்.

''என்ன?'' என்றாள் அம்மா.

''அவளோட புடைவை, அவளோட நகை, அவளோட பாத்திரம்னு இருந்த வரைக்கும் சரஸ்வதி என் கூடவே இருக்கிற மாதிரி உணர்ந்தேன். ஆனா இப்போ... தயவு செஞ்சு அவளுக்குப் பண்ணி போட்ட திருமாங்கல்யக் கொடியை மட்டும் என் கிட்டே தருவேளா? அது, இருந்தா சரஸ்வதியே என்னோட இருக்கிற மாதிரி இருக்கும்... எனக்கும் ஒரு தார்மீக பலம் கிடைக்கும்...''

அம்மாவும், நானும் ஆடிப் போய் விட்டோம். அம்மா பதிலே சொல்லாமல் பொட்டலம் பிரித்துக் கொடியையும், திருமாங்கல்யத்தையும் அவரிடம் கொடுத்தாள். அம்மா அழவில்லை. எனக்குச் சட்டென்று நெற்றியில் அடித்தது.

சரஸ்வதி இன்னும் சாகவில்லை.

4

இன்று இறப்பு விழா

கமிஷனர் ஹில், காருக்கு அருகில் இரண்டு போலீஸ் அதிகாரிகளை நிறுத்தி வைத்துவிட்டு மூடப்பட்ட அந்த ஜன்னலைக் குறிவைத்துக் கொண்டு மாடி வீட்டை நோக்கிப் போனார். குறுகலான சந்தின் திருப்பத்திலேயே அந்த வீடு திம்மென்று நின்றிருக்க வாசற்படி ஏறி கதவின் நெற்றியில் இருந்த காலிங் பெல்லைத் தொட்டார். அது உள்ளே விறிட்டது.

அரை நிமிஷ சாவகாசத்தில் கதவு திறந்தது. கட்டிய லுங்கியும் வெற்று மார்புமாய் — கபில்தேவின் முகத்தை ஞாபகப்படுத்திக் கொண்டு அந்த இளைஞன் நின்றிருந்தான். கமிஷனர் ஹில்லின் முகத்தைப் பார்த்ததும் — தன் முகத்திலிருந்த ரத்தத்தைத் தொலைத்தான்.

''க்... க்... க்யா சாஹியே சாப்...?''

ஹில்லும் இந்தியில் கேட்டார். ''மாடியில் யார் இருக்கிறார்கள்...?''

''இது பிளாட் சிஸ்டம் ஸார்... மொத்தம் மூன்று குடித்தனம். நான் க்ரௌண்ட் ப்ளோர்.''

''இரண்டாவது ப்ளோரில் யார் இருக்கிறார்கள்?''

''மிஸ்டர் சிந்தியா...''

''ஃபர்ஸ்ட் ப்ளோரில்.''

''மிஸ் நாட்டியா...''

'ஜன்னல் கதவை மூடிய பெண் அவளாகத்தான் இருக்க வேண்டும்' — ஹில் யோசனை செய்து கொண்டே — பக்கவாட்டில் 'S' போட்டுக் கொண்டு போன — மாடிப்படிகளில் ஏறினார். அந்த நிமிஷம் மாய்வதற்குள் முதல் மாடியின் கதவருகே நின்றிருந்தார்.

''டொக், டொக்...'' வலது கையின் முஷ்டியால் தட்டினார். உள்ளே வளையல் சத்தம் — நடைச் சத்தம் இரண்டும் கலந்து கதம்பமாய்க் காற்றில் கலந்து வெளியே நின்றிருந்த ஹில்லின் காது மடலை ஸ்பரிசித்தது.

''ப்ளக்.''

கதவின் தாழ்ப்பாள் விலக்கப்பட்டு — பின்வாங்கிய கதவுக்குப் பின்னால் அவள் நின்றிருந்தாள். கருநீல நைட்டியில் உடம்பை நுழைத்திருந்த அவளுக்கு இருபத்தைந்து வயது இருக்கலாம். வெளிச்ச நிறம். சதைப் பிடிப்பான நீள்வட்ட முகத்தில் கண்களும் உதடுகளும் முதல் வகுப்பில் தேறியிருக்க — மூக்கு மட்டும் பழைய ஸ்ரீதேவியை ஞாபகப் படுத்தியது. மழித்த புருவங்களுக்குப் பதிலாக — அழுத்தமான இரண்டு மைக் கோடுகள். பிடரியில் அடர்த்தியான 'பாப்' கேசம்.

கமிஷனர் ஹில்லைப் பார்த்ததும் —

அவசர அவசரமாய் வியர்த்து — பய எச்சிலை விழுங்கினாள் அவள்.

''...எஸ்...

கமிஷனர் அவளை உற்றுப் பார்த்து விட்டு மெல்லிய குரலில் கேட்டார். ''நீ... நீ... காபரே டான்ஸர்... நாட்டியாதானே?''

''ஆமா ஸார்'' — தலைகுனிந்து கையிலிருந்த நெயில் பாலிஷைப் பார்த்தாள்.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி... என்னைப் பார்த்ததும் ஜன்னலை மூடியது நீதானே...?''

நெற்றியில் வியர்வை அரும்ப ''ஆ... ஆமா... ஸார்'' என்றாள்.

ஹில் வீட்டுக்குள் நுழைந்தார். தெருவைப் பார்த்தபடி இருந்த ஜன்னலருகே போய் நின்று — வெளியே எட்டிப் பார்க்க — கீழே குப்பைத் தொட்டிக்குப் பக்கத்தில் நின்றிருந்த காரும் — ஜீப்பும் தெரிந்தன.

திரும்பி நாட்டியாவைப் பார்த்தபடி கேட்டார். ''என்னைப் பார்த்ததும் ஜன்னலை எதுக்காக மூடினேன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

''பயம்தான்... ஸார்.''

''பயமா? நீ எதுக்காகப் பயப்படணும்?''

''ஸார்...! அந்தக் கார் கடந்த முக்கால் மணி நேரமாகவே அங்கே நின்னுட்டிருக்கு. மொத்தம் மூணு பேர் அந்தக் கார்ல இருந்தாங்க... இங்கிருந்து பார்க்கும் போது — காருக்குள்ளே கைகலப்பும் வாக்குவாதமும் — வெளியே சத்தம் வராமே... நடந்துட்டிருந்தது. எனக்கொண்ணும் புரியலை. ஒரு பத்து நிமிஷத்துக்குள்ளே... இரண்டு பேர்... காரிலிருந்து இறங்கிப் போயிட்டாங்க. மீதியிருந்த ஒருத்தர் என்ன ஆனாருன்னு தெரிஞ்சுக்க ஆசைப்பட்டு — ஜன்னல் பக்கத்திலேயே நின்னுக்கிட்டிருந்தேன். போலீஸ் ஜீப் வந்ததும் என்னோட ஆர்வம் இன்னும் அதிகமாயிடுச்சு... 'என்னதான் நடந்திருக்கு'ன்னு தெரிஞ்சுக்கிறதுக்காக ஜன்னல்லேருந்து எட்டிப் பார்த்திட்டிருந்தப்பத்தான் நீங்களும் தலையை உயர்த்தி என்னைப் பார்த்துட்டீங்க. நான் பயந்து போய் ஜன்னலைச் சாத்திட்டேன்...''

நாட்டியா பேசப் பேச — அவளுடைய

ராஜேஷ்குமார்

முகத்தையே உன்னிப்பாய்ப் பார்த்தார் ஹில். அவள் பொய் பேசவில்லை என்பது கண்களிலேயே தெரிந்தது. இருந்தாலும் அவளை மிரட்டிப் பார்க்கிற எண்ணத்தோடு — தம் முகத்தை எஃகுத்தனமாய் வைத்துக்கொண்டு உறுமினார். ''போலீஸ்கிட்டே பொய் உதவாது நாட்டியா. உனக்கு அந்தக் கார்ல வந்தவங்களைப் பத்தி... ஏதோ ஓர் உண்மை தெரிஞ்சிருக்கு. நல்லதனமா கேட்கும் போதே சொல்லிடு. யார் அவங்க...?''

நாட்டியா உலர்ந்து போன உதடுகளோடும் — பயத்தில் விக்கித்துப் போன விழிகளோடும் — ஹில்லை ஏறிட்டாள். ''ஸார்! சத்தியமா அவங்க யார்ன்னு எனக்குத் தெரியாது. சாட்சி... கோர்ட்... விசாரணைன்னு அலையணுமேங்கிற பயத்துலதான் — ஜன்னலை மூடினேன்...''

''சரி! அந்தக் கார்... எவ்வளவு நேரமா அங்கே நின்னுட்டிருந்ததுன்னு தெரியுமா?''

''சுமார் நாற்பத்தஞ்சு நிமிஷமா...?''

''கார்ல இருந்தவங்க எத்தனை பேர்?''

''மொத்தம் மூணு பேர்...''

''ரெண்டு பேர் மட்டுந்தானா கார்லேயிருந்து இறங்கிப் போனாங்க...?''

''ஆமாம்...''

''அவங்க போய் இப்போ எவ்வளவு நேரமிருக்கும்...?''

''இருபது நிமிஷமிருக்கும்.''

''ஆட்கள் எப்படியிருந்தாங்கன்னு சொல்ல முடியுமா...?''

''எனக்கு அடையாளம் சொல்லத் தெரியலை ஸார்... ஆனா ரெண்டு பேருமே நல்ல உயரம். மறுபடியும் பார்த்தா அவங்களை அடையாளம் காட்டிடுவேன்...''

''கிட்டத்தட்ட நாற்பத்தஞ்சு நிமிஷமா... அந்தக் காரையே பார்த்துக்கிட்டு ஜன்னல் பக்கத்துல நின்னுட்டிருந்திருக்கே. காருக்குள்ளே நடந்த வாக்குவாதத்தையும், கைகலப்பையும் பார்த்திருக்கே...! போலீஸுக்கு ஏன் தகவல் தரலை...?''

''போலீஸ் விசாரணைக்கு என்னை உட்படுத்திக்க நான் விரும்பலை... ஸார்... இந்த காபரே டான்ஸர் தொழிலை... கல்கத்தாவில் இருக்கிற என்னோட ஃபேமிலிக்குத் தெரியாமே பண்ணிக்கிட்டிருக்கேன். நான் போலீஸுக்குத் தகவல் கொடுத்தா... என்



னோட பேரும் தொழிலும் பேப்பர்லே வந்து வெட்ட வெளிச்சமாயிடும்... அதனால தான்......''

ஹில் குறுக்கிட்டார். ''நீ இப்போ... எந்த ஹோட்டல்லே டான்ஸரா இருக்கே...?''

''ஹோட்டல் ராஜ் திலக்...

ஹில் அவளை நெருங்கினார். ''நாட்டியா! உன்னைப் பற்றிப் பேப்பர்லே நியூஸ் வராத படி நான் பார்த்துக்கிறேன். ஆனா நீ போலீஸுக்கு உதவணும்.''

''உதவணும்னா எப்படி ஸார்...?''

''கார்ல வந்த ஆசாமிகளை உனக்கு அடையாளம்தெரிஞ்சிருக்கு. இந்தவிவகாரத்திலே நாங்க சந்தேகப்படுகிற நபர்களை உனக்குக் காட்டுவோம். நீ பார்த்து 'அவன்' குற்றவாளியா... இல்லையான்னு சொல்லணும். உன்னே விசாரணைங்கிற பேர்ல கோர்ட்டுக்கோ... ஸ்டேஷனுக்கோ கூட்டிட்டுப் போக மாட்டோம்...

'சரி' என்கிற பாவனையில் — நாட்டியா பயமாய்த் தலையசைத்தாள்.

கமிஷனர் ஹில் கீழே வந்தார். மற்ற இரண்டு போர்ஷனைச் சேர்ந்தவர்கள் ஒரு சின்னக் கும்பலாய் நின்று — நாட்டியா இருந்த போர்ஷனை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரையும் ஒரு பொதுப் பார்வை பார்த்தபடி கேட்டார் ஹில்.

''உங்க பிளாட்டுக்குக் கொஞ்சம் தள்ளியிருக்கிற குப்பைத் தொட்டிக்குப் பக்கத்திலே ஒரு கார் கடந்த நாற்பத்தஞ்சு நிமிஷ நேரமா... நின்னுட்டிருக்கு. அந்தக் காரையும், கார்ல வந்த நபர்களையும் உங்கள்ல யாராவது கவனிச்சீங்களா?''

கும்பலில் மௌனம்.

பத்து விநாடி மௌனத்திற்குப் பின் —

அவர்களில் 'யாருமே பார்க்கவில்லை' — என்று தீர்மானமாய்த் தலையாட்ட ஹில் சோர்வும் எரிச்சலுமாய் ஜீப்புக்கு வந்தார்.

டெலிவிஷன் ஸ்டாண்ட்டுக்குக் கீழே இருந்த — வீடியோ டெக்கின் வாய்க்குள் அந்த கேஸட்டைத் திணித்தார் போலீஸ் அதிகாரி ஒருவர்.

பம்பாய் போலீஸ் ஹெட்குவார்ட்டரின் அந்தரங்க அறை அது. மொத்தம் இருந்த பத்து நாற்காலிகளில் — ஐந்து நாற்காலிகளில் மட்டும் நட்சத்திரப் பட்டைகளோடு அதிகாரிகள். கமிஷனர் ஹில்லும் பூபேஷும் பக்கம் பக்கமாய் உட்கார்ந்திருந்தார்கள். முகங்களில் கிலோ கணக்கில் கலக்கம்.

போலீஸ் அதிகாரி பட்டனைத் தட்ட — டீ. வி. திரையில் வெளிச்சப் பூச்சிகள் பறந்தன. அருவி கொட்டுகிற மாதிரி பின்னணி இசை, கூடவே எழுந்தது.

அதிகாரிகள் டீ. வி. திரையையே பார்த்துக் கொண்டிருக்க — பின்னணி இசை சட்டென்று நின்று — திரையில் சில கழுகுகள் பறந்தன. நிசப்தமாய்ப் பறந்தன. பின்னணியில் ரத்தச் சிவப்பாய்ச் சூரியனின் அஸ்தமனம்.

முப்பது விநாடிகளுக்குப் பின் —

ஹிந்தியில் — ஒரு குரல் கரகரத்தது. செங்கல்லை வைத்து உப்புக் காகிதத்தில் தேய்த்த மாதிரியான தொனி.

''இந்த கேஸட்டைக் கண்ணுறும் போலீஸ் அதிகாரிகள் அனைவருக்கும் 'இந்தியக் கழுகுகள்' எனப்படும் எங்கள் இயக்கத்தின் சார்பாக வணக்கங்கள். ஹாக்கி குழு கேப்டன் உத்தம், கோச் குருதேவ் சிங் ஆகியோர் சின்னச் சின்னசதைத் துணுக்குகளாய்ச் சிதறிய சம்பவத்துக்கு நாங்களே காரணம். நாங்கள் ஏன் அப்படிச் செய்தோம்...? எங்களுக்குத் தனிப்பட்ட முறையில் உத்தம் பேரிலோ... குருதேவ் சிங் பேரிலோ கோபம் ஏதுமில்லை... இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் மீதுதான் எங்களுக்குக் கோபம். அம்மாவின் கவனத்தைக் கவர்வதற்காக — குழந்தை பொம்மையைத் தூக்கியெறிவதைப் போல்— இன்றைக்கு ஆள்கின்ற ஆட்சியாளர்களின் கவனத்தைக் கவர்வதற்காகத்தான் உத்தமையும், குருதேவ் சிங்கையும் தீர்த்துக் கட்டியிருக்கிறோம். காந்திஜி அஹிம்சா வழியில் வாங்கித் தந்த சுதந்திரத்தைக் காப்பாற்றவே — நாங்கள் இந்த ஹிம்சா வழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். எங்களுடைய கோரிக்கைக்கு இந்திய அரசு பணியா விட்டால் — ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து

அவர்: ''உங்க பையனுக்கு படிப்பில் ஆர்வம் இருக்கா?''

இவர்: இல்லாமலா... போதும் சனியன்னு விட்டுத் தள்ளாம எட்டாவது வருஷமா எட்டாம் வகுப்பு படிச்சுக் கிட்டிருக்கான்...?''

— உ. ராஜாஜி.



ஒருவர்: கதை, திரைக்கதை, வசனம், ஒளிப்பதிவு, நடிப்பு, டைரக்ஷன் ஆகியவற்றுடன், உங்களோட புதுப் படத்தில் என்ன புதிய சாதனை செய்யப் போறீங்க..?

டைரக்டர்: நடிகர்... நடிகையருக்கு மேக்கப் போடும் வேலையையும் நானே செய்யப் போறேன்....''

— ராஜிராதா.



பார்புகழும் சிறப்பு காஞ்சிபுரம் பட்டுசேலைகளுக்கு பார்த்து வாங்கிட வாருங்கள்
பல்லவர் பட்டு கூட்டுறவு சங்கத்திற்கு மற்றும் அதன் கிளைக்கு..

விற்பனை கமிஷன் 10% எப்பொழுதும் பண்டிகை காலங்களில் 10% கமிஷனுடன்
அரசு அளிக்கும் ரிபேட் 20% (ரூ.200/- க்குட் பட்டு

காஞ்சிபுரம் பல்லவர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட் நெ.கே.பி. (ஸ்பெஷல்) 83,

429-B, 430: காந்திரோடு - காஞ்சிபுரம்-1.

கிளைகள் | தந்தி: பல்கோசில்க்: | போன்: 2634.

1. காவேரி சில்க்ஸ் - மெயின்ரோடு - ஹிந்துபூர்.A.P.
2. ஸ்ரீமாருதி சில்க்ஸ் - சிவாலயம் தெரு - ப்ரொடட்டூர்.A.P.
3. ஸ்ரீவாஸவி சில்க்ஸ் - 15 - 204 - A - வைஸ்யா ஹாஸ்டல்ரோட், அனந்தபூர் - A.P.
4. ஸ்ரீ சில்க்ஸ்- ஆர்சி பில்டிங்ஸ்-2, B.V.K. அய்யங்கார் ரோடு, பெங்களூர்
5. V.S.சந்திரசேகரன் & கோ. 139-கீழவெளிவீதி, மதுரை-1
6. தேவி சில்க்ஸ்-19, திருவேங்கடசாமி செட்டி தெரு, ஈரோடு-1
7. ராமரத்னம் சில்க்ஸ்- 241-2வது அக்ரஹாரம்-சேலம்-1
8. காஞ்சி கோவாப் சில்க்ஸ்-உம்மிடியார்ஸ் ஷாபிங் சென்டர், அண்ணாசாலை-சென்னை-2


வி. ரத்னசாமி
இணை இயக்குநர்/செயலர்

கோ. நடராஜன்
தலைவர் (பொறுப்பு)

நிர்வாகஸ்தர்கள்

V.M. சந்திரபானு
S.துரைசாமி

S.V.சுப்புராமன்
A.வைத்யலிங்கம்



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் ரூ. 250/- ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2500/- மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ. 250/- அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

**அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D — 76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் — 612 001.**

****** இந்த நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு ******

கொள்ளவிருக்கும் வீரர்களில் ஒவ்வொருவரையும் கொல்லுவோம்...''

ட. வி. திரையில் இன்னமும் சூரிய அஸ்தமனப் பின்னணியில் கழுகுகள் ஸ்லோமோஷனில் பறந்து கொண்டிருந்தன.

குரல் தொடர்ந்தது. ''எங்களுடைய கோரிக்கைதான் என்ன என்று தெரிந்து கொள்வதில் உங்களுக்கு ஆர்வம் ஏற்படலாம். பின்வரும் வாசகங்களை உன்னிப்பாய்க் கவனியுங்கள். இந்த இந்தியத் திரு நாட்டில் எவ்வளவோ பிரச்னைகள் தீர்க்கப் படாமல் இருக்கின்றன. இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இப்போதுள்ள அரசு மெத்தனம் காட்டி வருகிறது; அலட்சியப் படுத்துகிறது. பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமானால் — இப்போதுள்ள அரசுக்குப் பதிலாக வேறு அரசு அமைய வேண்டும். இந்த கேஸட்டைக் கண்ணுற்ற இருபத்தி நான்கு மணி நேரத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். மூன்று மாதத்திற்குள் தேர்தலை நடத்த வேண்டும். இந்தக் கோரிக்கையை வற்புறுத்தி — ஆதரவு தெரிவிக்கும் வகையில் — ஒலிம்பிக் விளையாட்டுக் குழுவில் இடம் பெற்றிருக்கும் வீரர்களும் வீராங்கனைகளும் — லண்டனில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டியைப் பகிஷ்கரிக்க வேண்டும். இந்த இந்தியக் கழுகுகளின் வேண்டுகோளை உதாசீனப்படுத்தி விட்டு — ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள முடிவெடுத்தால் — இப்படி முடிவெடுக்கும் ஒவ்வொருவருக்கும் உத்தம், குருதேவ் சிங்கின் முடிவுதான் ஏற்படும். தேச நலனை முன்னிட்டு — நாங்கள் விடுக்கும் இந்த வேண்டுகோளை மதித்து — எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுகிறோம் — இப்படிக்கு, இந்தியக் கழுகுகள்.

காஸெட் ஓய்ந்தது.

அந்த ஏ. ஸி. அறையிலும் பூபேஷ் சொத சொதவென்று வியர்த்துப் போயிருக்க — கமிஷனர் ஹில் தம் தாடையைத் தேய்த்து விட்டுக் கொண்டார். உதடு முணங்ியது.

''இந்தியக் கழுகுகள்.''

''ஸார்! இருபத்தி நான்கு மணி நேரம் கெடு கொடுத்திருக்கிறார்கள். அதற்குள் நாம் ஏதாவது செய்ய வேண்டாமா...?'' — பூபேஷ் படபடப்பாய்க் கேட்டார்.

''என்ன செய்யலாம்... மிஸ்டர் பூபேஷ்...? நீங்களே சொல்லுங்கள்.''

பூபேஷ் ஏதோ பேசுவதற்காக — வாயைத் திறந்த விநாடி — அருகே இருந்த டெலிபோன் தன் தொண்டையைத் திறந்தது.

ஹில் ரிஸீவரை எடுத்து — காது மடலை உரச விட்டார்.

''ஹலோ...''

''........''

''எஸ்... சொல்லுங்கள்...''

''.......''

''மை குட்னஸ்'' கமிஷனர் ஹில்லின் தக்காளி நிற முகம் — சட்டென்று தார் நிறத்துக்குப் போ..ற்று.

(தொடரும்)



கல்கி தீபாவளி மலர் — 1988

இவர்கள் சொல்கிறார்கள்...

* காஞ்சிப் பெரியவர் ஜகத்குரு, நடுவர் ஜயேந்திரர், இளையவர் ஆனந்தேந்திரர் ஆகியோரின் வண்ணப்படங்கள் இதழுக்குப் பக்தி மணம் பரப்பின.

சாத்தூர். எம். செல்லையா.

* ஒரு கைக்குழந்தையை மடியில் கிடத்திக் கொஞ்சுவது போல் இந்த வருட கல்கி தீபாவளி மலரை மடியின் மீது வைத்துக் கொண்டு அத்தனை பக்கங்களையும், படித்து மகிழ்ந்தேன். அத்துணை இனிமை.

சென்னை — 39. திருமதி. சுகந்தி நாராயண்.

* மீ. ப. சோமுவின் இலக்கியத்திற்குக் கோபுலுவின் ஓவியங்கள், பத்மபுராண ராமகாதைக்கு விஜுவின் 'அபூர்வ ராமாயண' ஓவியங்கள் என்று ஒவ்வொரு ஓவியத் தொகுப்பும், அழகிய இந்தியா, தமிழகத்தின் கைவினைஞர்களின் படைப்புக்கள், புத்துயிர் பெற்ற யட்சகானம் என்று மலரின் ஒவ்வொரு வண்ணப் புகைப் படங்களின் தொகுப்பும் 'இது கல்கி தீபாவளி மலர்; இது கல்கி தீபாவளி மலர்' என்று பறைசாற்றுகின்றது.

வடுகவிருட்சியூர். ஆர். அமுதா.

* கருத்தாழமிக்க கட்டுரைகள், கவிதைகள், கதைகள் எனப் பலவகைச் சுவைகளின் கூட்டுச் சுரங்கமாய்க் கல்கி தீபாவளி மலரை வெளியிட்டிருந்த உங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

பெங்களூர். — 21. ப. மூர்த்தி.

* கல்கி தீபாவளி மலர் வெகு சிறப்பாய் அமைந்திருக்கின்றது. இம்முறை, லட்சுமி, மனோரமா ஆகியோரின் சிறந்த கட்டுரைகளை வெளியிட்டு சினிமாவுக்கும் தக்க இடம் கொடுத்து விட்டீர்கள்!

கொரட்டூர். கே. என். ஸ்ரீனிவாஸ், ''ஸ்ரீ'' மகுடப்பிரியன் மற்றும் குடும்பத்தினர்.


* காஞ்சி முனிவர்களின் திருவுருவப் படங்கள், கவின்மிகு வண்ணப் புகைப்படங்கள், ஓவியங்கள், பயனுள்ள கட்டுரைகள், சிறந்த சிறுகதைகள், சிந்தனையைத் தூண்டும் கவிதைகள், சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் துணுக்குகள் என்று எல்லாம் இணைந்திருந்த 'கல்கி தீபாவளி மலர்' என்றென்றும் பாதுகாத்து வைக்கக் கூடிய ஒரு அற்புத பொக்கிஷம்.

கோவை. உமார்த்தி.

புத்தகக் கடனுக்குப் புரோநோட்டு!



ஏ. கே. செட்டியார்




ராஜாஜி



தமிழ்வாணன்

பெ. தூரன்



பெ. தூரன்:

சில நேரங்களில் போனில் அழைப்பார். எடுத்துப் பேச ஆரம்பித்தால் ''குழந்தை சரவணனைக் கூப்பிடுங்கள்'' என்பார். சற்று நேரம் அவர்களுடைய உரையாடல் போனில் நடக்கும். ''எங்கே அன்னைக்கிச் சொன்னேனே பாட்டு சொல்லு...'' என்று கேட்பார். இவனும் ''கும்மா கும்மா கும்மாயம். அம்மா செய்த கும்மாயம்'' என்று படு குஷியோடு பாடத் தொடங்கி விடுவான். பாட்டு,கதை என்று அவர்களுடைய உலகத்தில் ஈடுபட்டு, நம்மை எதற்கு அழைத்தாரோ அதைக் கூட மறந்து போய் விடுவார்...

* * *

தமிழ்வாணன்:

''நீ அணில் ஆசிரியர். எப்படிப் பதிப்பகம் நடத்தலாம்?'' என்று மிரட்டினார் வை. கோ.

''என்னுடைய சிநேகிதன். இவனுக்கு உதவத்தான் பதிப்பகம் ஆரம்பித்தேன். இவனுக்கு ஒரு வேலையாவது போட்டுக் கொடுங்கள்'' என்றார் தமிழ்வாணன்.

'இனிமேல் புத்தகம் போடக் கூடாது' என்ற நிபந்தனையோடு ஒரு வேலை தருவதாகச் சொன்னார். சரிப்பட்டு வரவில்லை...

மறுபடி மறுபடி நாங்கள் சிறு சிறு நூல்களாக அச்சிடுவதைக் கவனித்திருக்கிறார் பப்ளிஷர் பார்த்தசாரதி. எங்களை அழைத்தார்.

''நாங்கள் ஒரு குழந்தைப் பத்திரிகை ஆரம்பிக்கிறோம்; வந்து விடுகிறீர்களா?'' என்று கேட்டார்.

''நூற்று இருபத்தைந்து ரூபாய் தருகிறீர்களா?'' என்று கேட்டார் தமிழ்வாணன்.

''சரி. டம்மி தயாரித்துக் கொண்டு வாருங்கள்'' என்று சொல்லி அனுப்பி விட்டார்.

முப்பத்தி இரண்டு பக்கங்களில் டம்மி தயாரானது. 'கல்கண்டு' இப்படிப் பிறந்தது.

* * *

ராஜாஜி:

ராஜாஜி அவர்களின் பிறந்த நாள். அவர் ஆசி பெறக் கையில் மாம்பழங்களுடன் சென்றேன். பழங்களை என்னிடமே திருப்பித் தந்து விட்டார்.

''உங்களுக்காகத்தானே ஐயா வாங்கி வந்தேன். நீங்கள் என்னிடமே ஏன் திருப்பித் தருகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''இந்த மகாபாரதமும் இராமாயணமும் எழுதினேன் பாரு.. இரண்டுமே இரண்டு கனிகள். கற்பகக் கனிகள். யாருக்கும் இல்லை என்று சொல்லாமல், எப்பவும் மக்களுக்குக் கிடைக்கும்படியாக இவற்றை மலிவான விலையிலே புத்தகமாப் போட்டுத் தந்து கொண்டே இருக்கணும். அதற்கு அச்சாரம்தான் இந்தப் 'பழங்கள்'' என்று சொல்லி ஆசீர்வதித்தார்.

* * *

ஏ. கே. செட்டியார்:

ஏ. கே. செட்டியாரைப் பொறுத்தவரை நூல்கள்தாம் மிகப் பெரிய செல்வம். புத்தகம் எதையும் யாருக்கும் ஓசி கொடுக்கவே மாட்டார். ஒரு சமயம் முக்கியமான நண்பருக்குச் செட்டியாரிடமிருந்து ஒரு நூல் தேவைப்பட்டது. நான் ஏ. கே. அவர்களின் அன்புக்குப் பாத்திரமானவன் என்பது அவருக்குத் தெரியும். எனவே, என்னிடம் வந்து ''பத்து நாட்களில் படித்து விட்டுத் திருப்பித் தந்து விடுகிறேன். 'திருத்தல வரலாறு' என்ற நூலை அவரிடம் வாங்கித் தாருங்கள்'' என்றார். இருவரும் போனோம்.

''சரி, நீ வந்ததால் தருகிறேன்; ரெண்டு பேருமாகச் சேர்ந்து எழுதிக் கொடுங்கள்'' என்று சொல்லி 'புரோ' நோட்டு எழுதச் செய்தாரே பார்க்கலாம்!

* * *

இப்படி இருபத்தோரு பிரமுகர்களைப் பற்றிய தம் நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார் வானதி திருநாவுக்கரசு.

'நினைக்க நினைக்க':
விலை 12.00, வானதி பதிப்பகம்,
சென்னை — 600 017.

தொகுப்பு: சுப்ரபாலன்.

வட்ட மேஜை

புதிய தலைமுறை கூடவா இப்படி?

* "காங்கிரஸின் எதிரிகள் நாட்டின் எதிரிகளா?" என்ற தலையங்கம் படித்தேன். சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் மனத்தில் எழுகின்ற சந்தேகங்களைத் தலையங்கத்தில் அருமையாக எழுதியுள்ளீர்கள். காங்கிரஸ் கட்சியின் செயல்களை அப்படியே படம் பிடித்து விட்டீர்கள்!

அரக்கோணம், ச. பொ. வெ. ராமன்.

* 'ஒரு வேளை அவர் நேற்று தவறாகப் பேசியிருந்தாலும் இன்று தம்மைத் திருத்திக் கொண்டிருக்கிறார் என்பதுதான் முக்கியம்' — எனத் தலையங்கத்தில் நீங்கள் கூறியதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஏதாவது தத்துப் பித்தென்று உளறிக் கொட்டுவதே நம் பிரதமருக்கு வாடிக்கையாகி விட்டது. விளைவுகள் சற்று பயமுறுத்தினால் 'இல்லவே இல்லை' என்று பூசிமெழுகவும் அவர் தயங்குவதில்லை. இதுதான் தவறைத் திருத்திக் கொள்ளும் முறையா?

திருத்துறைப்பூண்டி, ஜெயந்தி ப்ரியன்.

* அ.தி.மு.க. ஜா. அணி, மற்றும் ஜெ. அணி ஆகியவற்றின் உண்மையான நிலையை அருமையான கார்ட்டூன் மூலம் அப்படியே படம் பிடித்துக் காட்டிய உங்களுக்கு நன்றி.

சென்னை — 7, லாவண்யா ப்ரியன்.

* சேவை மனப்பான்மையுடன் செம்மஞ்சேரி கிராமத்தில் மாணவர்களால் எழுப்பப்பட்ட குடிதண்ணீர்த் தொட்டி பற்றிப் படித்தபின், அந்த மாணவர்களை நினைத்துப் பெருமையாய் இருந்தது. அவர்களது சேவை, விழலுக்குப் போன நீராய் ஆகாமல், என்றென்றும் மக்களுக்குக் கிடைத்த நீராய் இருக்கப் பஞ்சாயத்துத் தலைவர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனே செய்வாரா?

சென்னை — 33, வி. எஸ். வாசன்.

* விஞ்ஞான ஆய்வு மையம், கருவிகள் என்றாலே மிகப் பெரிய பரப்பளவில் அமைந்த பிரம்மாண்ட கட்டடங்கள் என்ற மாயையை 'மண் குடிசைக்குள் வளரும் விஞ்ஞானம்' கட்டுரை போக்கி விட்டது. 'நமது நாட்டின் தேவைகளுக்கேற்பப் புதிய தொழில் நுணுக்கங்களை நாமே உருவாக்க வேண்டும்' என்ற உன்னதமான கொள்கையடிப்படையில் நடைபெறும் டி.ஏ.வையும், நிறுவிய அசோக் கோஸ்லாவையும் இந்த நாடே பின்பற்ற வேண்டும்.

தஞ்சை, கவிஞர். வெற்றிப் பேரொளி.

* 'மக்களுக்காகத் தமிழ் சினிமாவைச் சீர்திருத்த, நஷ்டப்பட்டுப் படம் எடுக்கிறேன்' என இயக்குனர்களின் வழக்கமான புலம்பல்களிலிருந்து மாறுபட்டு, நிஜத்தைச் சொன்னதற்காகவாவது, ராபர்ட்—ராஜசேகரனைப் பாராட்டலாம்.

குத்தாலம், எஸ். ராஜா.

* 'ஒரு சராசரி 'பட்ஜெட்' படத்துக்கே நாற்பது லட்சம் செலவாகிறது; அவ்வளவு செலவழித்தவர்கள் நஷ்டப்பட விரும்புவார்களா?' என்று கேட்கும் ராபர்ட்—ராஜசேகரிடம் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்: அந்த நாற்பது லட்சம் ரூபாய்ச் செலவால் சமூகத்துக்கு என்ன பயன் என்று நீங்களோ தயாரிப்பாளரோ யோசித்ததுண்டா...? ஆக எல்லோரும் சுயலாபத்தை மட்டும் கருதித்தான் படமெடுக்கிறார்கள். ரசிகர்கள் மிகைப்படுத்துதலையும் மசாலாவையும்தான் விரும்புகிறார்கள் என்று கூறுகிறீர்களே... அந்த ரசிகர்களை அத்தகைய படங்களுக்குப் பழக்கி, அடிமைப்படுத்தியதற்கு சினிமாத் துறைதானே பொறுப்பேற்க வேண்டும்...? புதிய தலைமுறை கூட இந்தப் பாதையிலிருந்து விலக விரும்பவில்லை என்பது வேதனைக்குரிய விஷயம்.

சென்னை — 17, எஸ். சுப்ரமணியன்

* 'உணர்வு பூர்வமான பிரச்னைகளுக்கு அறிவு பூர்வமான தீர்வுகளை நாம் காண வேண்டும்' — எம். எஸ். உதயமூர்த்தியின் கருத்தை அரசியல்வாதிகள் சட்டை செய்ய மாட்டார்கள். ஆனால் மக்கள் சிந்திக்க வேண்டும். அப்போதுதான் நாட்டின் சீரழிவிற்கு உடனே முற்றுப் புள்ளி ஏற்படாவிட்டாலும் சில தடைகளாவது தோன்றும். இல்லாவிட்டால் 21—ஆம் நூற்றாண்டின் தொடக்கமே கசக்கும்!

காஞ்சிபுரம், தமிழ் எழிலன்.

* குழந்தைகளின் எதிர்காலம் பிரகாசமடைய அது வளரும் விதம் வளர்க்கும் விதம் தானே தவிர, இயற்கையோ விதியோ காரணமில்லை என்பதைக் குழந்தையின் வாயிலாக "மல்லிகைப் பூ..." மூலம் உணர்த்திய கேசவ் குமாருக்குப் பாராட்டுக்கள்.

திருச்சி — 2, வித்யாமணாளன்

* 'இது பெண்மை அல்ல' — கதையா, இல்லை சார்; ஒவ்வொரு காலேஜிலும் நடக்கிற உண்மை. சம்பவத்தை எழுத்து மூலம் எழுதிய அறிமுக எழுத்தாளர் கோட்டை சேகரைப் பாராட்டியே தீர வேண்டும்.

தக்கோலம், அ. முஸ்தபா.

* ரிஷபன் எழுதிய "எப்படி முடிகிறது...?" என்ற சிறுகதை நூற்றுக்கு நூறு காப்பி அடித்து எழுதப்பட்ட கதை. ஆமாம்; என்னைப் பற்றியும் என் குடும்ப நிகழ்ச்சிகளையும் வைத்து நூற்றுக்கு நூறு அப்படியே எழுதப்பட்டுள்ளது!

சிதம்பரம், தங்க. குஞ்சிபாதம்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



பற்களைப் பற்றிய ஒரு பெரிய உண்மை
வாய் துர்நாற்றம் என்பது பற்களைவிட அதிகம், ஈறுகள் சம்பந்தப்பட்டதாகும்.
மற்றுமொரு பெரிய உண்மை
போர்ஹென்ஸ்* டூத்பேஸ்ட்டில் உள்ள ஒப்பற்ற அஸ்ட்ரிஞ்ஜெண்ட் மட்டுமே ஈறுகளை வலுவாக்கி அவற்றை ஆரோக்கியமாக வைக்கிறது. அதனால் வாய் துர்நாற்றம் ஏற்பட வாய்ப்பே இல்லை.
நுரை வளமுள்ள போர்ஹென்ஸ் —நீல சிறப் பேக்கிலே.
Forhan's
FOAMING
TOOTHPASTE
Forhan's
The toothpaste created by a dentist
கட்டுப்படுத்தப்பட்ட நுரையுள்ள —ஆரஞ்சு பேக்கிலே.
* விலங்குகளின் எலும்புகள் அடிப்படையிலான எந்த பொருளும் இதில் இல்லை.
போர்ஹென்ஸ் பராமரிப்பு
32 என்றும் பத்திரம்
ஒரு பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்.

GM. 68/88. Tm


குட்டிக்யூரா அழகி
Cuticura
TALCUM POWDER
SOOTHES
COMFORTS
BEAUTIFIES
Cuticura
TALCUM POWDER
குட்டிக்யூரா
டால்க்
இளம் பெண்கள் இதை
விரும்புவது இயற்கையே
CHAITRA-B-MP-2 TMR

REGISTERED No. M. 4395
Registered as a Newspaper in Sri Lanka

